www.tamilarangam.net



# எரிமலை

டிசம்பர் 1994

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அன்புடன் ஆசிரியருக்கு!

www.tamilarangam.net




## அக்கறைப்பூக்கள்

தாய் மொழியாம் இனிய தமிழ்மொழியின் தொடர்பால் தமிழர்களை உலகெங்கும் ஒன்றுபட வைக்க, தனித் தமிழீழ உணர்வுக் கருத்தினை சுமந்து வரும் எமது "எரிமலை" தோழர்கள் அனைவருக்கும் அந்தமான் கண்ணன் மிகவும் தோழமையுணர்வுடன் அன்புடன் எழுதும் செய்தியோலை என்பதைவிட "நமது ஈழம்" உணர்வு கலந்த உரிமையுடன் எழுதும் மடல்.

யாம் மற்றும் தோழர்கள் நலம்; அஃதுபோல் தாங்களும் தங்களுடன் தேனீக்கள் போல் பணியாற்றும் நம் தோழர்கள் அனைவரும் நலமுடன் இருந்து தமிழுணர்வுச் சேவையினைத் தொடர, நம்மை வழிநடத்தும் நல்லோர்களின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

ஈழத்தமிழர்கட்கு, ஒரு சில ஆண்டுகட்கு முன்பு வரை உலகின் பல பகுதிகளிலிருக்கும் பெரும்பான்மை தமிழர்கள் நேரிடையாகவே தங்களால் இயன்ற வரையிலான முழு ஒத்துழைப்பை நல்கி வந்துள்ளனர் என்பது யாரும் மறுக்க இயலாத ஒன்றாகும். அதே தமிழர்கள் சமீபத்திய சில ஆண்டுகளாக தங்கள் உள்மன உணர்வுகளை மறைமுகமாகக்கூட வெளிப்படுத்தமுடியாத சூழ்நிலையின் நிலையில் உள்ளனர். அதேவேளை, ஈழத்தமிழர்களின் தாகங்கள் தணிக்கப்பட முடியாத நிலையில் இருந்து வருகின்றது என்பதுதான் எமது கணிப்பாகும். ஒரு வேளை எமது கணிப்பு மாற்றத்தக்கதாகக் கூட இருக்கலாம். இது குறித்து தங்களின் மேலான கருத்துக்களை எமக்கு அவசியம் தெரிவிக்க வேண்டுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

காரணம் உலகில், இயற்கை, செயற்கை இவை இரண்டிலும் கூட மாற்றங்கள் நிச்சயம் உண்டு. இதனை மறுக்கவோ மறைக்கவே இயலாது என்பதும் எமது கருத்தாகும்.

ஆகையால் தங்களைப் போன்ற தமிழுணர்வுள்ளவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தி மேலும் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுவதோடு எம்மைச் சார்ந்தவர்களையும் ஈடுபடுத்தக்கூடிய பாலமாக அமையலாம் அல்லவா?

இச் சஞ்சிகையை, ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்க வேண்டும். ஈழத் தமிழர்களின் வெற்றியில் தம்மையும் ஈடுபடுத்திக் கொள்ளும் மனநிலையினைப் பெறக்கூடிய தமிழ்ச் செய்தித் தாளாகிய "எரிமலை" யின் பிரதிகள் எமக்கு 2 மாதத்திற்கு முன்பு வரை தொடர்ந்து ஒரு தோழரின் மூலம் கிடைக்கப் பெற்றோம். யாமும் எம்மைச் சார்ந்த தோழர்களும் நம் தமிழ் மக்களிடையே ஈழமக்களின் நிலையினையும், எதிர்காலத்தில் நாம் எவ்வாறு ஆதரவு நல்கவேண்டும் என்ற வழியினையும் தொடர்ந்து தெரிவித்துக் கொண்டு வந்தோம்; தொடர்கின்றோம்.

இத் தொடர்புக்கு தங்களின் படைப்புகள் எமக்கு மிகவும் பெரும் உதவியாக இருந்து வந்தன என்பதும் உண்மையே. "வளர்க தங்களின் தமிழ்ச் சேவை. வெல்க ஈழ வேட்கை."

அந்தமான் கண்ணன்.

வாழ்க தமிழ் வெல்லட்டும் புலிகள்

அன்புள்ள எரிமலை ஆசிரியர் அவர்கட்கு, தங்களின் இனிய மாசிலாமணி எழுதும் இனிய மடல்.

தாங்கள் அனுப்பிய புரட்டாதி இதழ் 22 - 10 94 அன்றுதான் கிடைத்தது. மிகவும் நன்றி. ஐயா இந்த இதழைப் பார்த்தவுடன் கண்கள் கலங்கிவிட்டன. ஆனால் மனமோ மேலும் உறுதியாய் எம் இனத்தின் மேல் அதிக பற்றாய், இது வரை என் இனத்திற்கு எதுவும் செய்யாத நிலைமையை எண்ணி என்மேலே வருத்தமாய் மாறிவிட்டது.

அண்ணன் திலீபன் முகம் கண்டவுடன் இந்திய போலி முகத்திரையை கிழித்த போராட்டத்தை எண்ணுகின்றேன். அவர் சாவதை வேடிக்கை பார்த்த எங்கள் கையாலாகாத் தனத்தை எண்ணி எண்ணி குமுறுகிறேன். கரும்புலிகளின் சாவு கூட கொஞ்சம் இனிமையானது ஏன் தெரியுமா? எப்போது சாவு என நன்றாகத் தெரியும்; வேதனை அனுபவிக்காமல் ஒரே நொடியில் முடிந்து விடும். ஆனால் அண்ணன் திலீபனின் தியாகமோ மிகவும் கொடுமையானது. என்னைப் பொறுத்தவரையில் என் எதிரிக்குக் கூட இம் முடிவு வரக்கூடாது.

மனிதன் பிறக்கும் போதே சாவு பின்னால் வந்துகொண்டேயுள்ளது. அதனைக் கண்டு பயந்தால் அது பயனில்லை. ஆனால் மரணத்தையே மரணிக்க வைக்கும் மாவீரர்கள் கரும்புலிகள். மற்ற மாவீரர்களுக்கு நடுகற்கள் வைத்தால் கரும்புலிகளுக்கு, அஜந்தா ஓவியங்கள் போல் எந்தக் காலத்திற்கும் அழியாமல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுடன் ஓவியங்களாகி இருக்குமாறு, எல்லா மக்களும் காணும்படி வைக்கவேண்டும். கரும்புலிகளின் வாழ்க்கையைப் படித்தால் என்னைப் போன்ற கோழைகள் கூட நாளை போராளியாவார்கள். கரும்புலிகள் என்றும் போற்றப்பட வேண்டிய எமது இனத்தின் மறை நூல்கள்.

இந்த இதழில் ஒரே கவிதைகள். மிகவும் அருமையாக உள்ளன. ஒரு கவிதை வார்த்தைகள் வானவில் போல வண்ண வண்ணமாய் அலங்கரித்து வலம் வருகின்றன. ஆனால் பொருளோ எம்மை மட்டும்மல்ல தாய் நாட்டுக்காக உயிரையே இழக்கும் போராளிகளையும் பகிடி செய்துள்ளது.

அது லதிகா என்பவர் பாரீஸில் இருந்து எழுதியுள்ளது. அதில் போராளிகளின் புனித பயணத்தையும், சுயவர்களின் சுயமையையும், என்னைப்போல வீட்டிற்காக வெளிநாட்டில் அடிமையாய் வாழ்பவர்களையும், எதுவும் இல்லாமல் வாழ்பவர்களையும் சொல்லி விட்டு கடைசியில் எல்லாவற்றையும் இணைத்து இந்தப் பயணம் குறிக்கோள் இல்லாதது; எங்கு முடியுமோ தெரியவில்லை எனச் சொல்லியுள்ளார். நாட்டிற்காகப் போராடுவதும், வீட்டுக்காகப் போராடுவதும் குறிக்கோள் இல்லாததா? இல்லை. வெளிநாட்டில் அவர் சுகமாக வாழ்வதால் எங்களை பகிடி செய்துள்ளாரா லதிகா? இதனை எப்படி இதழில் போட்டீர்களோ தெரியவில்லை.

தேனிசைச் செல்லப்பாவைப் பற்றி எழுதியுள்ளீர்கள். மிகவும் நன்றி. உண்மையில் தமிழ் நாட்டில் திரை இசைப்பாடல்கள், ஏன் பிறமொழிப் பாடல்கள் பாடினாலே மதிப்பு என நினைத்து வாழும் பயித்தியங்கள் மத்தியில் தமது இனப் பாடல்களை மட்டுமே பாடும் தேனிசைச் செல்லப்பா பல்லாண்டு வாழ்க.

சிறு கதை எழுத்தாளர்களின் பெயர்களை வெளியிட்டு இருந்தீர்கள். இந்தி ஒழிக, ஆங்கிலம் ஒழிக என்றீர்கள். சிரிப்புத்தான் எனக்கு வருகின்றது. ஏன் தெரியுமா? ஐயோ எங்கள் தமிழ் அழிகின்றதே என கூக்குரல் போடுகிறார்கள் பலர். தமிழின் பெயரைச் சொல்லியே வாழ்வு. ஏன்? சொர்க்க சுகபோக வாழ்வு நடாத்துகிறார்கள் பலர். ஆனால் அப்படிப்பட்டவர்கள் தங்கள் பெயரையாவது தமிழில் வைத்துள்ளார்களா? இல்லை. தாங்கள் எழுதும் கதையில் வருபவர்களுக்காவது தமிழில் பெயர் வைக்கின்றார்களா? தமிழில் பேசுபவர்கள் எல்லாம், எழுதுபவர்கள் எல்லாம் தமிழர்கள் தானா? உண்மையில் தமிழன், தமிழ் உணர்வு எனில் பிறமொழி கலப்பில்லாமல் தெளிவான தமிழில் பேச, எழுத பழக வேண்டும். துவக்கத்தில் கொஞ்சம் கடுமையாகத்தான் இருக்கும். பழகி விட்டால் அதுவே வழக்கமாகிவிடும். இத்தாலியில் பிறந்தாலும் தமிழுக்குச் சேவை செய்து பெஸ்கி என்ற பெயரை வீரமா முனிவர் என்று மாற்றியவனே உண்மைத் தமிழன். உண்மையான தமிழர்கள் எனச் சொல்லும் கதை ஆசிரியர்கள் தங்கள் பெயரை மட்டுமல்ல கதைகளின் பெயரையும் தெளிவான தமிழில் மாற்றிக் கொள்ளவேண்டும். இல்லையெனில் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவார்கள்.

ஐயா, எனது தாழ்மையான வேண்டுகோள் தாங்கள் தூய்மையான தமிழியக்கம் நடாத்த வேண்டாம். நமது இனத் தமிழ்த் தாயின் உடலை பிற மொழிச் சொற்களால் களங்கப் படுத்துவதை குறைத்துக் கொள்ளுங்கள்.

என்றும் நமது இன நினைவில்
மாசிலாமணி
டமாம்.

> லதிகாவின் கவிதையில் கடைசி மூன்று வரிகள், சீரழிவுக் கலாச்சாரத்துள் சிக்குண்டவர்களை மட்டுமே சுட்டி நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.
>
> - ஆசிரியர் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கை நோக்கி நடக்கத் தொடங்கு.
நீண்ட தொலைவானாலும் நெடுமூச்சு எறியாதே!
என்னால் எப்படி இயலுமென்று,
ஏங்காதே.
எத்தனை யுகங்களானாலும்
இலக்கு உன்னை நோக்கி நகராது.
எனவே,
இலக்கை நோக்கி நடக்கத்தொடங்கு.
புலிகளைப் பார்
பத்தாண்டுகளுக்குள்ளே,
எவ்வளவு தூரம் பாய்ந்துவிட்டார்கள்.
கடக்க வேண்டியது நெருப்பாறு என்றார்கள்.
அதற்குள்ளும் துணிந்து காலை வைத்தார்கள்.
பாதிதூரத்தைக் கடந்து பயணம் தொடர்கிறது.
வழியை அடைத்துக் கொண்டு,
மலைகள் நின்றன.
போகும் வழியெங்கும் புயலடித்தது.
பேரிடியோடு மழைபொழிந்தது.
எரிமலை உருகிக் கால்களைச் சுட்டது.
என்றாலும்
பாதை பிசகாத பயணம் தொடர்கிறது.
உன்னைப் புலியாக உருவகித்துக் கொள்.
இலக்கை நோக்கி நடக்கத் தொடங்கு.

-மாலிகா-

## இதழின் உள்ளே


★ நிதி - ஒரு போராளியின் பதிவு - 05
★ நேற்று இன்று நாளை - கவிதை - 08
★ சந்திரிகாவின் பழைய சப்பாத்தும் புதிய தொப்பியும் (அரசியல்) - 10
★ கடலிலே காவியம் படைப்போம் (விமர்சனம்) - 12
★ சுப்பீரியர் ஹெட்மன் (சிறுகதை) - 15
★ அம்மாளைக் கும்பிடுகிறானுகள் (நூல் அறிமுகம்) - 23
★ குழந்தை ம. சண்முகலிங்கம் - நேர்காணல் - 26
★ கட்டி எழுப்பப்படும் சுயபொருளாதாரம் - 36
★ தடைகளைத் தகர்க்கும் கடின உழைப்பு - 37
★ கடவுளின் மரணம் - கட்டுரை - 39
★ தமிழ்நாடு: வந்தேறிகளின் வேட்டைக்காடு - 43


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
டிசம்பர் 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des
Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# சமாதானமும் தமிழ் தேசிய அங்கீகாரமும்

சிங்கள மனத்தை நாம் வரலாற்று ரீதியாகப் படம் பிடித்தோமேயானால், அது முழுமையான தேசிய சுதந்திரத்தையும், வளர்ச்சியையும் அவாவி நிற்பது தெரிய வரும். அதே போன்றதே தமிழ் மனதும், ஆன்மாவும். இதில் தவறில்லை என்று கூறுவதை விட, அதுவே நல்லதும் சிறப்பானதுமாகும். இவ் உண்மையைச் சரியாகப் புரிந்துகொண்டால்தான் இவ்விரு தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையை நீதியாகவும், நிரந்தரமாகவும் தீர்த்துவைக்கலாம். ஒரு தேசியத்தின் முழுமையை, முழு உரிமைகளை, நோக்கிய வளர்ச்சி மற்றத் தேசியத்தின் (National Entity) அதே வளர்ச்சியை தடைசெய்யாமல், அவற்றிற்குரிய அரசியல் சட்டரீதியான, கட்டமைப்பு ரீதியான, பாதுகாப்பு ரீதியான, பொருளாதார ரீதியான மாற்றங்களைக் கொண்டுவருதல் என்பதே எம் முன்னுள்ள பிரச்சினை. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையும் முன்னெடுக்கப்பட்டு, மேற்கூறிய தளத்தில், இதய சுத்தியோடு பிரச்சினை ஆராயப்பட்டால், தீர்வின் வெளிச்சம் படிப்படியாகத் தெரியும் என்பதே நம்பிக்கை. எதிரும், புதிருமாக தற்போது நகரும் போக்குகள் ஒரு புள்ளியில் சந்திக்குமா எனில், அவை ஒரு வட்டத்தில் சந்திக்கலாம் என்பதே மறுமொழி.

இவ் உண்மைக்குப் புறம்பான, வரலாற்றை பின்னோக்கி இழுக்கும் செயல்கள் தொடர்ந்து நடைபெறுவதையும், அவை தீர்வுக்குத் தடையாக இருப்பதையும் அவதானிக்கலாம். அவை, சிங்கள இனவாத சக்திகளாகவும், இராணுவ வாதிகளாகவும் இருப்பதை அடையாளம் காணலாம். விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை உருவாக்க, யுத்த நிறுத்தத்தைக் கோரியதையும், பொதுமக்களின் பெரும் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு சங்குப்பிட்டிப் பாதையை திறக்குமாறு கோரியதையும் அரசாங்கம் பல்வேறு அழுத்தங்களால் செய்யமுடியாதுள்ளது இதனையே காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் நல்லெண்ண சமிக்கையாக ஒருதலைப்பட்சமான ஒருவார தற்காலிக யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு, அரசாங்கம் யுத்தநிறுத்தத்துடன் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வழிசமைத்துக் கொடுத்தபோதும், அதற்கு மறுமொழியாக இராணுவத்தின் பொதுமக்கள், விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களே கிடைத்தன. இந்நிலையில், யுத்தநிறுத்தத்தை நீடிக்காமல், இடையில் நிற்பாட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதையும் அறிகிறோம்.

இப்படியான, நீதிக்கு மாறான, பொய்யான செயற்பாடுகளை, இந்திய அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் முன்னெடுத்திருப்பதும், தற்போதும் முற்பட்டிருப்பதும் கண்கூடு. "புலிகளுடன் பேசக்கூடாது; அவர்களை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்டவேண்டும்" என்பது பரீட்சித்துத் தோல்வி கண்டதொன்றாயினும் இக்கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க இந்திய அரசியல் பீடத்தின் ஒரு பகுதி மீண்டும், மீண்டும் முனைவதைக் காண்கிறோம். விடுதலைப் புலிகள் என்பது தடுக்கமுடியாது வளரும் தமிழ்த் தேசியத்தின் உன்னதமான வடிவம் என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

மனித சுதந்திரத்தையும், சமாதானத்தையும் தடுத்து நிறுத்தும் இத்தகு கடும் போக்குகளின் விளைவுகளாகவே காமினி திசாநாயக்கா போன்றோரின் மரணங்கள் நிகழ்கின்றன. போரை முடிவுக்குக் கொண்டுவரவும், சமாதானத்தை நிலைநாட்டவும் சிங்கள தேசம் விரும்புகிறது என்பதே அண்மையில், நடந்த ஜனாதிபதித் தேர்தலும், 62 வீத வாக்குகள் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவிற்கு கிடைத்ததும் காட்டுகின்றது. தமிழ் மக்களும் சுதந்திரத்தையும், சமாதானத்தையும் வேண்டிநிற்கிறார்கள். விரைவில் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட்டு, அதற்கான வழி திறக்கப்படுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதி அருமையான போராளி. விடுதலைக்காக இவன் உழைத்ததை எண்ணிப்பார்க்கையில் பல எண்ணங்கள் எம்முள் விரிகின்றது. எந்நேரமும் சிரிப்புத் தவழுகிற முகம்; யாருக்கும் கெடுதல் நினையாத உளம்... அந்தப் பரப்புக்கடந்தான் காட்டில் பாடுகின்ற பட்சிகளைப்போல அவன் திரிந்த பொழுதுகள்..... அவனைப் பற்றி,



அவர்களைப் பற்றி பேசி, எழுதி முடித்து விடக்கூடிய வாழ்க்கையையா அவர்கள் வாழ்ந்தார்கள்.

எப்படித்தான் ஒரு நதியைப் போல பிரவாகித்தார்கள். இந்த வீரர்கள் நடந்த பூமி செழிக்கும். அத்தகைய ஓர் வீரனைப்பற்றி அவனோடு வாழ்ந்த போராளி ஒருவன் பதிந்தது.

மன்னார் மாவட்டத்தில் வீரமரணம் அடைந்த முதல் புலி. இராணுவச் சுற்றி வளைப்பின் போது இறுதி வரை போராடி எதிரியின் கையில் தான் உயிரோடு பிடிபடக்கூடாது என நினைத்து தன்கைத் துப்பாக்கியாலே தன்னைத் தானே சுட்டு எமது இயக்க மரபுக்கு இணங்க வீர மரணத்தை அடைந்தவன் நிதி.

அன்று நாங்கள் நிதியைப் பற்றி அறிந்திருந்தோமே தவிர விடுதலையைப் பற்றிப் புரியவில்லை. நிதியின் இறுதி நிகழ்வு பெரிதாக ஊர்வலமாக நடத்தப்படவில்லை. அன்றைய காலகட்டம் மிகப் பயங்கரமாக இருந்ததால், ஒவ்வொருவர் வாயிலும் மெதுவாகப் பேசப்படுகிறது.

புலிப்படை நிதி இறந்து விட்டான் என்றே கூறப்படுகிறது. அன்றைய நேரத்தில் மரண நிகழ்வு என்பது எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத மனநிலையில்தான் இருந்தது.

'இளம் வயது. வாழவேண்டிய காலம். இப்படி மரணித்துப் போவதா?' என்று மக்கள் கலக்கத்தோடு கண்கலங்கித் திரிகின்றார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நாம் தேவாலயத்துக்குப் போகும் போது ஒரு பையோடு சந்தியில் நிற்கும் நிதி.

அப்போது புலிப்படையைப் பார்க்க ஆவல். நாம் நேரத்திற்கு கோயிலுக்குப் போவதாகக் கூறிவிட்டு சந்தியில் நிற்கும் புலிப்படையினரைத் தள்ளி நின்றே பார்ப்போம். சிலர் அவர்களோடு நெருங்கி நின்று கதைப்பார்கள். நாமும் மெதுவாகக் கிட்டச் சென்று நிற்போம்.

சில நாட்கள் போனபின் சந்தியில் சிரித்து நின்ற நிதியின் வீரமரணம் பற்றி போஸ்ரர் ஒட்டப் பட்டிருந்ததை பார்க்கும் போது எங்கள் மனம் எதையோவெல்லாம் யோசித்துக் கலங்கிக் கொண்டே இருந்தது.

ஏன் இறந்தான் நிதி? பிரபாகரனால் ஏன் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. மரணம் என்பது என்ன? நாம் ஏன் வாழ்கின்றோம்? எப்படியான நிலையில் தமிழினம் இருக்கிறது? தமிழனுக்கு என்ன நடக்கிறது? எமக்கு யார் விடுதலை பெற்றுத்தந்தவர்கள்? விடுதலையில் நாம் வாழ்கின்றோமா? சிறீலங்கா அரசின் கொடுமை பற்றி புரியாத நிலையில் கிடந்த மக்களுக்கு நிதியின் வீரமரணத்தின் பின்தான் தமிழனின் நிலை எப்படியுள்ளது என்று தெரியவந்தது. எமக்கும் அன்று தெரியவந்தது.

'ஒரு புலி வீரமரணம் அடையும் போது மேலும் பல புலிகள் பாசறையை நோக்கி வருவார்கள்.' என மேஜர் அசோக் அண்ணன் அன்று எங்களுக்கு அடிக்கடி கூறுவார். அது உண்மை. நிதி அண்ணனின் வீரமரணத்தின் பின் என் மண் எவ்வளவோ துரித வளர்ச்சி பெற்று வருகிறது. போராட்டத்தில் இன்று அத்தனைக்கும் காரணம் அண்ணன் காட்டிய வழியில் நின்று போராடி வீர மரணத்தைத் தழுவிய மாவீரர்கள். களத்தில் நின்று போராடும் போராளிகளே.

மன்னார் மண் முதல் முதல் கண்ட களப்பலியில் நிற்கும் நிதி, அன்சார், ஆகிய மாவீரர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தியாகம் இன்று எம்மை பலப் படுத்தி வளரச் செய்துள்ளது. அன்சார் (நிக்கலஸ் மைக்கல் குருஸ்) எனும் போராளி தெல்லிப்பளையில் நடந்த முற்றுகையின் போது போராடி வீரச்சாவடைந்தான். நிதி, அன்சார், எம் மாவீரர்கள்- எம் மண்ணுக்கு ஒளிவிளக்காக நின்று மெழுகுவர்த்தியாக உருகியவர்கள். எமது இயக்கத்தில் முதல் முதல் வீரமரணமடைந்த சங்கர் அண்ணன். அதே ஞாபகத்தில் எம் மன்னார் மண் இழந்த மாவீரர்கள் அன்சார், நிதி என்று கூறிக்கொண்டே போர்க்களம் நோக்கி எழுந்து வருகின்றோம். மாவீரர்கள் தமக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று போரா டியவர்கள் அல்ல. தம் மண், இனம் விடுதலை பெறவேண்டும் என எண்ணி சாவுக்கு மத்தியில் நின்று போராடி எம்மையும் எம் மண்ணையும் பாதுகாத்து தங்கள் உடல்களை எமக்காகப் புதைத்த வர்கள். அவர்கள் காட்டிய வழியில் நாமும் விடுதலை பெறும் வரை தொடர வேண்டும். அவர்களின் இலட்சியமும் கனவும் நிறைவேறி எம் மண் விடுதலை பெற நாமும் எமக்காக களத்தில் விழுந்த மாவீரர்களின் ஆயுதத்தை எடுத்து களத்துக்குப் புறப்படுவோம். வா நண்பனே! இன்று புதைகுழியில் இருக்கும் மாவீரன் நிதியின் வரலாற்றைப் படிப்போம். நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கும் போரா ளிகளைப் பற்றிச் சிந்திப்போம். எங்களுக்காக எம் மண்ணைப் பாதுகாக்கும் புனிதப் போரில் நாளாந்தம் வீரமரணமடையும் மாவீரனின் பாதையில் சேர்வோம் என்று உறுதி எடுப்போம். விடுதலை பெற ஒவ்வொருவரும் போராட வேண்டும். போர்களம் வா தமிழா!

எங்கள் நிதி எமக்காக மடிந்தான். எங்கள் நிதி தன்னை விட மண்ணை அதிகம் நேசித்தவன். எங்கள் நிதி தன் குடும்பத்தை விட தமிழ் மக்களை நேசித்தவன். நிதியின் பாதையில் நானும் செல்வேன் என உறுதி எடுப்பேன். ஐயம் இல்லை எனக்கு.

**பரஞ்சோதி - மன்னார்**

www.tamilarangam.net

# விடுதலைப் புலிகளை சிங்கள மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் காலம் வருமா?

அந்தக் காலம் இப்போதே வந்துவிட்டது. ஆம். இது குறித்து விரிவான கட்டுரையொன்றே எழுதலாம். அரச படைகளால் தென்னிலங்கையில் பெரும்பாலான சிங்கள இளைஞர்கள் கொடூரமாக கொல்லப்பட்ட போது - காணாமலாக்கப் பட்டபோது - ஒரு பகுதி சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளை விரும்பத் தொடங்கினர் என்பது உண்மை. இது பகிரங்கமாக சொல்லப்படாத, மௌனமான ஏற்றுக் கொள்ளல். தம்மைக் கொடுமைப்படுத்தும் படைகளை எதிர்த்துத் தாக்கப் பலமில்லாத, வழியில்லாத பாதிப்புற்ற அந்த மக்கள், படையினர் விடுதலைப் புலிகளால் தாக்கப்படுவதை, தண்டிக்கப்படுவதை விரும்பு கின்றனர்.

அண்மையில் சிங்கள பத்திரிகையாளர் ஒருவர் எழுதிய கட்டுரையொன்றிலிருந்து சில உதாரணங்களைத் தரலாம்.

மானுடவியல் ஆய்வொன்றில் ஈடுபட்ட சிங்கள மானுடவியலாளர் ஒருவர் பின்தங்கிய சிங்கள கிராமமொன்றில் அறுபது வயதான ஒருவரைச் சந்தித்து உரையாடியபோது அம் முதியவர் ஒரு கட்டத்தில், 'எப்போதாவது நான் பிரபாகரன் அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் நீங்களே "முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றுதான் நான் கூறுவேன்' என்று கூறினாராம். இது அந்த மானுடவியலாளரை வியப்பி லாழ்த்தியது.

பூநகரித் தாக்குதல் நடந்த ஒரு சில நாட்களின் பின் கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரை யாளரான ஒருவர் இந்தப் பத்திரிகையாளரிடம் கூறினாராம். "இராணுவம் தோல்வி கண்டது மிகவும் நல்லதே. இது இப்படித்தான் நடக்கவேண்டும். விடுதலைப்புலிகள் இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டியிருக்கிறார்கள். எனக்கு கொஞ்சம் கவலை என்னவென்றால் இந்த அப்பாவிப் பெற்றோரின் பிள்ளைகள் அநியாயமாக செத்துப் போகிறார்கள் அல்லது முடமாகிப் போகிறார்கள் என்பதில் மட்டும்தான்."

இவ்விருவரின் நிலையிலிருந்தும் சிங்கள சமூகத்தின் மனோ நிலையை பெருமளவு அறியமுடிவதாக அந்தப் பத்திரிகையாளர் எழுதுகிறார். அனேகமான சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளினால் அரசபடைகள் தாக்கப்படும் போது அத் தாக்குதல் நியாயமானதென சிங்கள மக்கள் உணர்வதாக அவர் குறிப்பிடுகின்றார். பிரபாகரன் அவர்களையும் விடுதலைப் புலிகளையும் குறித்து சிங்கள மக்களிடையே பிரக்ஞை பூர்வமற்ற ஒரு வகையான அனுதாபம் இருக்கவே செய்கிறது எனவும் அவர் தொடர்ந்து எழுதுகின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில நோய்களும் சில ஆலோசனைகளும்

## வைத்தியக் கலாநிதி சீர்மாறன்

சில நோய்களும் சில ஆலோசனைகளும் எனும் மருத்துவ நூலினை பல்கலைக்கழக வைத்திய அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் தனது கடமையோடு 'போர்'ச் சூழ்நிலையில் வாழும் ஆபத்துக்கள் பற்றியும் தெளிவாக விளக்குகிறார்.

மேலும் பல் சம்பந்தமான நோய்கள் ஏற்படாமல் எவ்வாறு பற்களைப் பாதுகாப்பது என்பது பற்றியும் பற்களின் தொழிற்பாடுகள், அவற்றின் அவசியம் போன்ற சிகிச்சை எடுப்பதில் எதிர் நோக்கும் சிக்கல்களை தெளிவு படுத்தி, வருமுன் காக்கக் கூடிய பல நோய்களை எடுத்துக்கூறி அவற்றை வராமல் தடுப்பதற்குரிய வழி முறைகளையும் இந்நூலில் கூறியுள்ளார்.

அகதி முகாம்களில் ஏற்படுகின்ற குடி நீர்ப்பிச்சினை, இவற்றால் ஏற்படுகின்ற நோய்கள் போன்றவற்றையும் இவற்றில் இருந்து எவ்வாறு தப்பிக்கொள்வது என்பதற்கான ஆலோசனைகளும் அதில் கூறப்படுகின்றது.

இன்று மக்கள் மத்தியில் மக்கள் எதிர் கொள்ளுகின்ற சுகாதார நெருக்கடிகளையும் அவற்றினைக் குணப்படுத்துவதற்கு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகளையும் அடிக்கடி பத்திரிகைகள் மூலமாகவும், வானொலி மூலமாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

ஆரோக்கியமான, சுபீட்சமான, புத்திசாதுரியம் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் எதிர்கால சந்ததியினரை நோயற்ற, திடகாத்திரமுள்ள சுகாதார நலனுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். இதற்கு ஏதுவாக உயிராபத்தையும் உடலில் நிரந்தரப் பாதிப்புக்களை உண்டாக்கும் சில நோய்களான போலியோ, ஏற்புவலி போன்றவற்றையும் சுட்டிக் காட்டி இவற்றில் இருந்து எம் சிறார்களை காப்பாற்றுவதற்கு போடவேண்டிய தடுப்பூசிகள் பற்றியும், அவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்பதையும், இத் தடுப்பு ஊசிகளை எங்கெங்கு மட்டும் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்ற விடயங்களையும் மக்களுக்கு தெரியப்படுத்துகிறது.

ஏற்பு வலியால் ஏற்படுகின்ற

### அறிமுகம்

வற்றைப் பற்றியும் அரிய கருத்துக்களைச் சொல்கிறார்.

அத்துடன் மின்சாரமின்மை, போக்குவரத்துச் சிக்கல், வைத்திய நிபுணரின்மை, மருந்துகள் பற்றாக் குறை, மருந்துகளின் விலை, பொருளாதாரக் கஸ்டம் போன்ற பல்வேறு நெருக்கடிகளைச் சுட்டிக் காட்டி இவ்வாறான இக்கட்டான நிலையில் நோய் வந்த பின்பு

சுகாதார சம்பந்தமான நூல்கள் எமது மொழியில் வருவது மிக மிகக் குறைவு என்ற வகையிலும், இவ் நெருக்கடியான காலகட்டத்தில் காலத்தின் தேவை கருதிய பணியாகவும் இந்நூலின் வரவு விளங்குகிறது. சாதாரண மக்களும் வாசித்து அறியக்கூடிய வகையில் மிக எளிமையாக இந்நூல் ஆக்கப்பட்டிருப்பதும் அந்நூலினை எழுதிய வைத்தியக் கலாநிதியின் நோக்கினை வெற்றியாக்கும்.


## மருத்துவக் கதிர்

'மருத்துவக் கதிர்' எனும் சஞ்சிகை விடுதலைப் புலிகளின் சகல மருத்துவ போராளிகளிடமும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் வெளிவந்து கொண்டிருக்கிறது. இக்கதிர் மருத்துவத் துறையில் அவ்வப்போது நிகழும் புதிய கண்டுபிடிப்புக்களையும் புதிய மருந்துக்களையும் முன்வைக்கின்றது. நோய்களைப் பற்றிய சரியான விளக்கக் குறிப்புகளுடன் ஆராய்ந்து எழுதப்படும் கட்டுரைகள், விளக்கமின்மையால் அறியாமையால் ஏற்படுகின்ற அவலத்தைப் போக்குகிறது.

வேற்று மொழிகளில் வெளிவரும் மருத்துவ சஞ்சிகைகளும் மருத்துவ நூல்களும் பற்றிய தகவல்களையும் தாங்கி வருகின்றன.

இச்சஞ்சிகையினை விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவு வெளியிடுகின்றது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நேற்று



# இன்று



# நாளை

- புதுவை இரத்தினதுரை -

தங்கத் தகடடித்துத் தகதகக்கும் வானமது
மஞ்சள்குளித்து மகிழும் பொன்மாலையிலே
சூடாறிக் கொண்ட சூரியன்போய்
மிகவிரைவாய்;
தேரேறி மேற்குத் திசைபார்த்துச் செல்லுகின்ற
நேரமதில்
பச்சை நிறமான நெல்வயலில்
ஈரம்சுவற,
இடுப்பொடியப் புல்பிடுங்கி;
மீளும் இளம் பெண்கள் மிடுக்காய் நடைபயில்வர்
ததும்பி வழிகின்ற
தாமரைப்பூம் பொய்கையதில்
குவிந்து,
ஊர்ச்சிறுவரெலாம் குதித்துக் கலக்கிடுவர்.
மாடெல்லாம் மேய்ந்து மடிநிரப்பி;
வரம்பேறி
வீடுதிரும்ப வெளிக்கிட்டு உடல்நெளிக்கும்.
"அரசவெளி அம்மன்" ஆலயத்துப் பூசைமணி
தரவை வயல்கடந்து தாவி;
ஊர் எல்லைவரை,
விரையும்.
நீரள்ளி வீடேகும் சிற்றிடையார்
காற்சலங்கையோசை கல்லொழுங்கை மீதிருந்து;
மேற்கிளம்பி,
இளசுகளின் மேனியிலே கிளுக்கிண்டும்.
விழுதெறிந்த ஆலவிருட்சத்தின் கீழிருந்து
பொழுதுபடும் வரையும் பேசிக்கழிக்கின்ற;
கிழடுகளும் மெல்லக் கிளம்பி நடைபயில்வர்.
தோட்டக்கிணற்றின் துலா அசையும்.
பாட்டுவரும்,
காட்டுக் கொடிசிலிர்த்துக் கண்மலரும்.
சில்லென்று;
கற்றைக் குழல்கலைத்து காற்றுவந்து விளையாடும்.
அற்புதமாய் எல்லாம் அழகொளிரும்.
கிராமத்து;
வற்றா எழில் கவிதை வரம்புக்குள் சிக்காது.
நேற்றிருந்த வாழ்வை நினைத்தால்....
நெஞ்சத்தில்;
தீப்பிடித்துக் கொள்ளும்.
தித்தித்த வாழ்க்கையினி
எப்போது?
எங்களுக்கு ஏனிந்தத் தண்டனைகள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்பிக்கிடக்கும் இருள் கலைவதினி எக்காலம்?
குயிலிருந்து பாடிய எம்கொம்புகளில்
மீண்டுமினி
குயிலிருந்து பாடிக் குதூகலித்தல் எப்போது?
எறிகணையும்;
குண்டு ஏற்றிவந்து வீசுகின்ற
வெறிகொண்ட "புக்காரா" விமான இரைச்சலதும்;
குழிவிழுந்த வீதிக் குலுக்கல் பயணமதும்,
வழிதெரியா கும்மிருட்டு வாழ்வும்,
பசிவயிறும்;
பஞ்சுவிளக்கும், பயம் பிடித்த முகங்களதும்,
பிஞ்சில் சொரிகின்ற பிணியும்,
எம்மண்ணிருந்து
என்றகலும்?
எல்லாம் எழிலாதல் எப்போது?
அஞ்சற்க!
எங்கள் அடுத்த தலைமுறைக்குள்
"நஞ்சணிந்தவீரர்" நாடமைப்பார்.
நடக்கின்ற
வெஞ்சமரை வென்று வீதியெங்கும் முரசறைவர்.
வேலியொன்று போட்டு வெறிநாய்கள் உட்புகுந்து
காலில் கடிக்காமல் காவலுக்கு நின்றிருப்பர்.
தென்றல் தடவிச் செல்லும்.
திசையெங்கும்
கன்றெல்லாம் துள்ளும்.
கறவையெலாம் பால்சொரியும்.
நாதஸ்வரத்தோடு
தவில் வீணை மத்தளங்கள்
பேசும்;
மரங்களெலாம் புதிதாய் துளிர்த்துவரும்.
பூசுமஞ்சள்கரைந்து பொன்னாறு ஓடுதல்போல்
வாசம்சுமந்து வழிநடக்கும்.
வீதியெங்கும்;
காற்சலங்கை மீண்டும் கலகலக்கும்.
பூமரங்கள்
பூத்துச் சொரியும்.
"புலம்பெயர்ந்த குருவி" யெல்லாம்
கூடுதிரும்பும்
கோயிலெல்லாம் கொடியேறும்.
நாடுதிரும்பி நம்கையில் வந்ததென்று
பாடும் குரலெல்லாம் பரவும்.
அஞ்சற்க!









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகாவின் பழைய சப்பாத்தும் புதிய தொப்பியும்

**சாரணன்**

"தயக்கமின்றித் தீர்மானங்களை எடுக்கக்கூடியவர், துணிச்சலுள்ளவர், இட்துசாரி எண்ணங்கொண்டவர், புதுமை விரும்பி" இப்படிப் பல அடைமொழிகள் திருமதி சந்திரிகா விஜேகுமாரணதுங்காவிற்கு உண்டு. இவற்றில் கணிசமான அளவு உண்மைகள் உண்டு. ஆனால் இத்தகைய இயல்புகள் அனைத்துக்கும் அப்பால் இவரது குடும்பப் பின்னணிதான் இவர் பதவிக்கு வருவதற்கான முன் நிபந்தனையாய் அமைந்தது.

ஒரு புறம் பரம்பரையான குடும்ப ஆதிக்கம், மறுபுறம் புதுமை விரும்பி எனும் இரு நேர்எதிரான அம்சங்களின் கலப்பே சந்திரிகா.

இவ்விரு நேர்எதிர் முரண்களையும் விருப்பு வெறுப்புக்கு அப்பால் நின்று எடை போடுதல் சிறப்பானது.

முதலாவது, இலங்கையின் அரசியல் அகராதியின் படி ஓர் "இளவரசியாகப்" பிறந்தார்.

அடுத்த இரண்டாவது விடயத்திற்கு வருவோம். உலகில் புதுமை விருப்பத்திற்கு பெயர் போன பிரெஞ்சு தேசப் பல்கலைக்கழகத்தில் சந்திரிகா சட்டம் பயின்றார். மாற்றங்களை விரும்புகின்ற, தீவிர எண்ணங்கள் இலகுவில் குடிகொள்ளும் ஒரு பின்னணி அது. அவை சந்திரிகாவிலும் தொற்றின.

உள்நாட்டில் பண்டாரநாயக்கா-றத்வத்த குடும்ப மரபுகளை மீறி சொய்சா குடும்பத்தில் சாதி மாறி திருமணம் செய்ய சந்திரிகா ஆரம்பத்தில் எண்ணி இருந்ததாகவும், அவர் ஒரு "விபத்தில்" கொல்லப்பட்டு விட்டதாகவும் ஒரு கதையுண்டு.

சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபட்ட பிரபல நடிகரான விஜேயகுமாரணதுங்காவுடன் சந்திரிகாவின் நட்பு காலகதியில் வளர்ந்து திருமணத்தில் முடிந்தது. இதில், சாதி, குடும்ப மரபுகளைச் சந்திரிகா துணிந்து மீறினார். இதனால் தாயினதும் சகோதரனினதும் கோபத்திற்குள்

## பேரினவாதிகளின். மறுபக்கம்

**"புலிகள் தாம் பௌத்த மதத்திற்கும் சிங்களவர்களுக்கும் விரோதமானவர்கள் அல்லவென்றும் தாம் தமது மக்களையும் அவர்கள் வாழும் மண்ணையும் காக்கவே போராடுவதாகவும் கூறுகின்றனர். எனவே இனவாதிகளின் கருத்துக்களுக்கு இடம்கொடுக்காமல் இனப்பிரச்சினையை சமாதானமாக தீர்க்க்வேண்டும்." என 'சிறிரத்னசாரதேரோ' கூறியுள்ளார்.**

**'தேரோ' அவர்கள் குறிப்பிட்டது போன்று 'விடுதலைப் புலிகள் மண்ணையும் மக்களையும் காப்பாற்றத்தான் போராடுகின்றார்கள். அக்கடமைக்கு குந்தகம் விளைவிக்கும், அந்த இலக்கை நிறைவேற்ற முடியாத ஒரு தீர்வை முன்வைப்பது மேலும் இனப்பிரச்சினையை இழுத்தடிக்கும் ஒரு சதிமுயற்சியாகும்.**

**எனவே சமாதானத்தை விரும்பும் சிறிரத்னசார தேரோ போன்றவர்களும், ஏனைய நல்லெண்ணம் கொண்ட சிங்கள புத்திஜீவிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மறைமுகமாக முட்டுக்கட்டை போடும் சக்திகளை இனங்கண்டு அவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தவேண்டும்.**

**சமத்துவமான, நியாயமான, நிரந்தரமான ஒரு இனப் பிரச்சினை தீர்வை நோக்கி இரு இனக்குழுக்களும் நடைபோட பேரினவாதிகளின் சுயரூபம் வெளிக்கொண்டு வரப்படவேண்டும்.**

**இத்தகைய முயற்சிகளில் நல்லெண்ணம் கொண்ட சிங்கள மக்கள் மனப்பூர்வமாக ஈடுபடுவதன் மூலம் நியாயமான ஒரு தீர்வை எட்டமுடியும் என்பது உறுதி.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ளானார். இத்தகைய பின்னணியில் சுதந்திரக்கட்சிக்கு எதிராகத் தனிக்கட்சி அமைத்து அரசியல் நடத்துவதில் விஜேயகுமாரணத் துங்காவுடன் தோள் கொடுத்துச் செயற்பட்டார். சாதி, குடும்பப் பிரச்சினையும் அதனாலான திருமணத் தகராறும் ஒரு புதிய கட்சியின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

சுதந்திரக்கட்சியை உடைப்பதற்கு ஒரு தக்க சந்தர்ப்பமாக இதைக் கருதிய ஜே. ஆர். ஜெயவர்த்தன, விஜேயகுமாரணத்துங்காவிற்கு பல வகையிலும் ஆதரவளித்தார். வானொலி, தொலைக்காட்சி, அரச சார்புப் பத்திரிகைகளில் எல்லாம் விஜேயகுமாரணதுங்காவிற்கும் அவரது மக்கள் கட்சிக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

விஜேயகுமாரணத்துங்காவின் மக்கள் கட்சி விரைவாக வளர்ந்தது. இதில் சந்திரிகா கணவனுக்கு மிகவும் துணையாகச் செயற்பட்டார். இப்போது பல்வேறு சிறிய இடதுசாரி அமைப்புக்களையும் இவர்கள் தம்முடன் அரவணைத்துக் கொண்டனர். விஜேயகுமாரணத் துங்கா இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவளித்துச் செயற்பட்டார். இந்த விடயத்தில் இவர் ஜே.வி.பி.க்குப் பெரும் சவாலாக இருந்தார். இவர் ஜே.வி.பியை வன்மையாக எதிர்ப்பவர். இந்தப் பின்னணியால் விஜேயகுமாரணத் துங்கா ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டதாகவே பலமாக நம்பப்படுகிறது. இதற்கு ஜே.வி.பி. உரிமை கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவரது இளவயதில் தந்தை கொல்லப்பட்டதுபோல, இப்போது இவரது கணவனும் அரசியற் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டு விட்டார். இதயத்திற்கூடாக விளங்க முற்படுகையில் விஜேயகுமாரணத் துங்காவின் மரணம் சந்திரிகாவிற்கு ஒரு பேரிழப்பு. ஆனால் அரசியலூடாக விளங்க முற்படுகையில் அந்த மரணம்தான் இன்று சந்திரிகா பதவிக்கு வருவதற்கான கால் கோளைத் தோற்றுவித்தது.

கணவனின் மரணத்தைத் தொடர்ந்து சந்திரிகா தனது தந்தை - தாய் வழிக்குடும்ப உறவைப் பலப்படுத்தவும், சுதந்திரக் கட்சியில் இணையவும் முடிந்தது. இவரது கணவனால் உருவாக்கப்பட்ட கட்சியும், கூட்டணியும் இவரது கணவனின் மரணத்தைத் தொடர்ந்து உடையத்தொடங்கியது. அதனைக் கட்டிக் காக்கவும் வளர்க்கவும் சந்திரிகாவினால் முடியவில்லை. பரம்பரைப் பாரம்பரியமே அரசியலுக்கு இலகுவானதாய் சந்திரிகாவிற்குப் பட்டது. ஒரு புறம் சந்திரிகா பழைய பரம்பரைச் சப்பாத்தைக் காலில் அணிந்து கொண்டும், மறுபுறம் பாரிஸின் புதிய தொப்பியை தலையில் அணிந்துகொண்டும் பிரயாணம் செய்கின்றார். ஒருவரே பழசையும், புதுசையும் கொண்டிருக்கும் நிலை. தமிழர்கள் தொப்பிக்கு ஆதரவளிப்பார்கள் என்பது நிட்சயம். ஆனால் சப்பாத்து என்ன செய்யும்? இனப் பிரச்சினை விவகாரத்தில் தொப்பியே முழுக்க முழுக்க முதன்மை பெறுமானால் அது நாட்டுக்கு நல்லது. இனப்பிரச்சினையோ பழையது. அது வேண்டிநிற்கும் தீர்வோ புதியது. தெரிவு சப்பாத்துக்கும் தொப்பிக்கும் இடையில் உள்ளது. சப்பாத்தா? தொப்பியா?



www.tamilarangam.net

**சோகமும் வீரமும் எழுகின்றது**
**கிளாலித்துயர் நெஞ்சைப் பிழிகிறது**
**மக்கள் பட்ட இன்னலைப் பதிக்கிறது**
**இசை**
**துயர் பொடிபட பல படகுகள் வேகமாக வருகின்றன.**
**கடற்புலி! ஆகா! எங்களின் கடற்புலி!**
**ஏலேலோ! ஏலேலோ!.....**
**அருமையான பாட்டுக் கேட்கிறது.**

# கடலிலே காவியம் படைப்போம்

## மதிப்பீட்டுரை

–பேராசிரியர் அ. சண்முகதாஸ் –

நெய்தல் நில மக்களின் நெஞ்சத்து உணர்வுகளுக்கு மெட்டுக்கட்டி கடற்புலிகளின் வீரத்துக்குப் பாட்டுக்கட்டி, “கடலிலே காவியம் படைப்போம்” என்னும் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளிவருகின்றது. நெய்தல் நில மக்களுடைய சோகத்தை ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடாகிய “நெய்தல்” என்னும் பாடல் ஒலிப்பதிவு நாடாமூலம் நன்கு உணர்ந்தோம். கடற்புலிகளின் வீரமும், அவ்வீரம் தீர்த்துவைத்த சோகமும் பற்றிக் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இந்த வெளியீடாகிய “கடலிலே காவியம் படைப்போம்” ஒலிப்பதிவு நாடாப் பாடல்கள் விரித்துக் கூறுகின்றன. இந்த ஒலிப்பதிவு நாடாவுக்கு ஒரு சிறப்புண்டு. அது என்னவெனில், இந்த மண்ணிலே முதன்முதலாகக் கணனியைப் பயன்படுத்தி இப்பாடல் ஒலிப்பதிவு நாடா தயாரிக்கப் பட்டமையேயாகும்.







கவிஞர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் வாஞ்சிநாதன், பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் பாடல்களை இயற்றியுள்ளனர். பெரும்பாலும் நல்ல கவிதைகள் நல்ல இசைப்பாடல்களாகி விடுகின்றன. நல்ல கவிதையாக அமையாவிட்டால், அது நல்ல பாட்டாகவும் ஆகிவிடமுடியாது. இந்த ஒலிப்பதிவு நாடாவிலே எல்லாப் பாடல்களுமே நன்றாக அமைந்துவிடுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



இந்தக் கடல் ஈழத்தமிழரின் சொந்தக் - கடல்
இங்கு ரத்தம் சிந்திச் சிவந்திடும் தந்தைக் - கடல்
பொங்கிப் பகை வெல்லக்கடற்புலி - போகுங்கடல்
பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும் - வீரக்கடல்

**இந்தக் கடல் ஈழத்தமிழரின் சொந்தக் - கடல்**
**இங்கு ரத்தம் சிந்திச் சிவந்திடும் தந்தைக் - கடல்**
**பொங்கிப் பகை வெல்லக்கடற்புலி - போகுங்கடல்**
**பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும் - வீரக்கடல்**

என்று புதுவை இரத்தினதுரை எழுதிய பாடலிலே "பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும் வீரக்கடல்" என்ற அடியும்,

**நிலவற்ற வானத்தில் வெள்ளி சிரிக்கும் - அந்த**
**நீலக்கடல் இருளினிலே பொங்கிக் - கொதிக்கும்**
**அலை மேலே எங்களின் பயணம் நடக்கும் - வள்ளம்**
**அக்கரையில் சேருமட்டும் ஆவி துடிக்கும்**

என்று பண்டிதர் பரந்தாமன் எழுதிய பாடலிலே "வள்ளம் அக்கரையில் சேருமட்டும் ஆவிதுடிக்கும்" என்ற அடியும்,

**சத்தமிட்டு முத்தமிடும் வாடைக்காற்று - வந்து**
**சுத்திச் சுத்திக் கடல்மீது கோலம்போடும்**
**தத்தித் தத்திப் படகொன்று பயணம் போகும் - இருள்**
**நித்தம் நித்தம் விழியோடு கதைகள் பேசும்**

என்று வாஞ்சிநாதன் எழுதிய பாடலிலே "தத்தித் தத்திப் படகொன்று பயணம் போகும்" என்ற அடியும் கவிதை ஓவியங்களாக அமைந்துவிடுகின்றன. இப்படியான பல கவிதை ஓவியங்களைக் கொண்ட பாடல்களுக்குத்தான் இந்த மண்ணிலே மிகச் சிறந்த இசையமைப்பாளராகிய கண்ணன் இசை வழங்கியுள்ளார்.

பாடல்களின் பொருளுக்கேற்றபடி இசை வழங்கப்பட்டுள்ளது. இந்த நாடாவின் இரண்டாம் பகுதியிலுள்ள மூன்றாம் பாடல் முதலிற் சோகத்தையும் பின்னர் வீரத்தையும் புலப்படுத்துகின்றது. அதற்கேற்றபடி இசையமைக்கப்பட்டுள்ளது. முதலிலே, கிளாலிக் கடலிலே கடற்படையினரால் மக்கள் பட்ட இன்னல்கள் கூறப்படுகின்றன. மூன்று பாட்டுருக்கள் இவ்வின்னல்களைக் கூறுகின்றன. வாத்தியக் கருவிகளெல்லாம் கசிந்து அழுகின்றன. இச்சோகப் போக்கினை இடைநிறுத்தி வீரமும் பரபரப்புமுள்ள இசை வழங்கப்படுகின்றது. பல படகுகள் வேகமாக வருகின்றன என்ற உணர்வை இசை தோற்றுவிக்கின்றது. மக்களுக்கு துன்பஞ் செய்தவர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



19-9-94 அன்று கடலில் கரும்புலிகள் 'கடலிலே காவியம் படைத்'தனர். சிலாவத்துறையில் சிறீலங்காவின் கடற்படைக் கப்பலை தங்கையர் இருவரும்; தம்பியர் இருவரும் தகர்த்தனர். கடலில் எமது மக்களைத் தாக்கிய எதிரியின் கடற்படைக் கப்பலைத் தகர்த்தபோது கைது செய்யப்பட்ட இரு சிங்களக் கடற்படைக் கப்டன்கள்.

விரட்டியடிக்கக் கடற்புலி வருகின்றது. "ஏலேலோ ஏலேலோ...." என்ற தருவுடன்

**"நாகதேவன்துறை நீங்கள் வந்து ஆளவோ - நாங்கள்
நடுக்கடலில் துடிதுடித்து வெந்துமாளவோ
வேக ஓடம் உங்கள் கையில் இனியும் - ஆகுமோ - கடல்
வேங்கைவர எங்கே போனவோ"**

என்ற பாடல் ஒலிக்கின்றது. கேட்பவர்கள் உண்மையில் பரவசம் அடைவார்கள். வீர உணர்வு பொங்க நிமிர்ந்து நிற்பார்கள்.

இந்த ஒலிப்பதிவு நாடாவுக்கு இன்னொரு உயர் பண்பும் உண்டு. அதாவது விடுதலைப் புலிகள் கடலிலே சாதனைகள் செய்ய மழையென்றும் காற்றென்றும் பாராமல், தாய் பிள்ளை தாரமென்று பாராமல் கடலிலே படகுகளை ஓட்டிய ஓட்டிகளுக்கு நன்றி கூறுவதாகப் புதுவை இரத்தினதுரை இயற்றிய பாடல் இதில் சேர்க்கப்பட்டுள்ளமையேயாகும்.

"ஓட்டிகளே படகோட்டிகளே _ எங்கள்

உணர்வினிற்கேவழி காட்டிகளே..."

என்று தொடங்கும் பாடல் மனதை உருக்குவதாக அமைகின்றது. தொழில் செய்பவன், தன் தொழிலுக்குரிய கருவிகளுக்கு நன்றிகூறுவதாகப் பல நாட்டார் பாடல்களுண்டு. இந்தப் பாடலும் அந்தவகையைச் சார்ந்ததே.

கண்ணனுடைய இசையமைப்பு கடற் புலிகளின் வீரத்தையும் நெய்தல் நிலத்தின் சோகத்தினையும், வெற்றியினால் ஏற்படும் களிப்பினையும் புலப்படுத்தும் வகையிலே அமைந்துள்ளது. சிட்டு, சாந்தன், சுகுமார், விஜயலட்சுமி, நிரோஜன், விஜயகுமார், ஸ்ரனிசிவானந்தன் ஆகியோர்களுடைய குரல்கள் ஏற்ற வகையிலே இசையுடன் இசைவுறுகின்றன. விஜயலட்சுமி 'வெள்ளலையே நில்லலையே வேதனையைக் கேளலையே' என்ற பாடலைப்பாடும் போது அவருடைய குரல் சோகத்துடன் இழைகின்றது. பக்கவாத்தியக் கலைஞர்களெல்லாம் தக்கமுறையிலே இசைக்கு அணிசெய்துள்ளனர்.

இசையும் கவிதையும் இணைகின்ற போது ஏற்படும் கவிக்கோலங்களை இந்த ஒலிப்பதிவு நாடாவிலே தரிசிக்கலாம்.

நெய்தலின் சோகத்தினை,

**"காலை விடிகின்ற வரையும்
நீரில் மிதக்கின்றோம்
காற்றுடனே போர்தொடுத்து
ஊர் திரும்புகின்றோம்"**

**"பாய்விரித்து ஓர் இரவு
மீன் பிடித்தான் பிள்ளை
பத்துமாதம் போனதையா
ஏன்திரும்ப வில்லை."**

என்னும் அடிகள் உணர்த்த, நெய்தலின் அழகினை

**"நிலவற்ற வானத்தில் வெள்ளி சிரிக்கும்"**

என்னும் அடி உணர்த்துகின்றது. நெய்தலின் உழைப்பும் மனநிறைவும்

**"சின்னவலை போட்டு கைகள் சிவந்து போகும் - கருங்
கண்ணிபடக் கவலையெல்லாம் - மறைந்து போகும்."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# சுப்பீரியர் ஹெட்மன்

ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியிருக்கும் போன் அடித்தது. யாராக இருக்கலாம்? ஒருவேளை இலங்கையிலிருந்தோ?

"மாஸ்டர் நான்தான் பூமணி பேசுறன். ஒருக்கா வீட்டை வாறியளோ?" அவளுடைய குரலில் கவலையும் அவசரமும் கலந்தே ஒலித்தன.

"என்ன விஷயம்?..... ஆருக்கும் ஏதாவது சுகமில்லையோ?".

"இல்லை மாஸ்டர்!.... அப்பு இலங்கைக்குப் போகப் போறாராம். வந்து 3 நாள்கூட ஆகேல்லை. தான் போகோணும் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறார்.... நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பாத்திட்டம் கேக்கிறாரில்லை... நீங்கள் வந்து ஒருக்கால் கதைச்சுப் பாருங்கோ!... உங்கடை சொல்லை அவர் கேப்பார்."

"அதுக்கென்ன... இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே... பத்துமணி போல வாறன்."

www.tamilarangam.net

"இவ்வளவு வெள்ளெண உங்களுக்குப் போன் எடுத்துக் குழப்ப வேண்டாம் எண்டு இவர் பேசினவர்... நீங்கள் எங்கையெண்டாலும் போடுவியள் எண்டு நான்தான் விடிய வெள்ளாப்பிலை குழப்பிப் போட்டன்."

"பறவாயில்லை... இண்டைக்கு எனக்கு வேறை வேலை ஒண்டுமில்லை... ஞாயிற்றுக்கிழமைதானே நான் வாறன்."

★★★

பூமணியின் தகப்பனாருடைய பெயர் சிவசம்பு என்பது இக்காலத்தில் பலருக்குத் தெரியாது. சுப்பீரியர் ஹெட்மன் என்று சொன்னால் தான் தெரியும். அவருக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்பதுகூடப் பலருக்குத் தெரியாது. ஆனால் அவருடைய பேச்சு, செயல் என்பவை சற்று வித்தியாசமானவை. ஆள் ஒரு மாதிரி... அரைப் பைத்தியம் என்றுகூடச் சொல்லிக் கொள்வார்கள்.

இலங்கையில் நான் அவரைச் சந்திக்க நேர்ந்தது அவருடைய ஊரில் நடந்த ஒரு பெரிய நாட்டுக்கூத்து விழாவொன்றில்தான். முல்லைத்தீவு மாவட்டத்தில் காலங்காலமாக மக்கள் மத்தியில் நிலவி வந்த கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து என்பவற்றை ஒருங்கே மேடையேற்றி அவற்றை இயக்கும் அண்ணாவிமாரைக் கௌரவிப்பதற்காக அந்த மாவட்ட இளைஞர் எடுத்த அந்த விழாவைக் காண நானும் சென்றிருந்தேன். நிகழ்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு ஒருமணி நேரம் முன்னதாகவே அங்கு செல்ல நேர்ந்த நான், அங்கு ஒரு பக்கமாக நின்றிருந்த அந்த மனிதரைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.

நிலக்கிளி
அ. பாலமனோகரன்
டென்மார்க்

**'அப்பு இலங்கைக்குப் போகப் போறாராம். வந்து 3 நாள்கூட ஆகேல்லை. தான் போகோணும் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறார்....'**

துவைத்துத் துவைத்துச் சற்றுப் பழுப்பேறிப் போன வெள்ளை வேட்டி நாஷனல் அணிந்திருந்த அவரைப் பார்க்கையில் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியரைப் போன்றிருந்தது. ஆனால் அந்தக் கண்களும், அவர் நின்றிருந்த கம்பீரமான தோரணையும் உழைப்பின் காரணமாக வைரம் பாய்ந்த உடலும் அவர் ஒரு ஆசிரியராக இருக்க முடியாதென்றே கூறின. அவருடைய கையில் ஒரு பெரிய தடித்த கடித உறை இருந்தது. அதனுடைய நிறமும் நிலையும் அது பலகாலமாகவே அவருடைய கைபட்டுப் புழங்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கூறியது.

.... இவரும் ஒரு அண்ணாவியோ?... எனக்குள் யோசித்தவாறே நான் அங்கு மண்டபத்தில் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டேன்.

விழாவை நடத்துபவர்கள் அங்கு மிங்கும் ஓடியாடி அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஒலிபெருக்கிக்காரனும் அப்போதுதான் வந்து தனது உபகரணங்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைநிறையப் பூக்களோடு தளிர்களும்.



நீங்கள் நடந்த சுவட்டின் சூடு காப்போம்.

திலீபனைத் தேசம் நினைந்தது. மறந்து விடக்கூடியவர் வரலாறா? அவனுக்கு என்று என்னதான் வேண்டியிருந்தான். எல்லாமும் எமக்கெனவே. அடிமையாக விலங்குகளோடு இருத்தல் அவனுக்கு வெறுப்பையூட்டும். அதனால் தான் அவன் நல்லூரில் நெருப்பென நின்றான்.

"உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சம் இல்லை" என்று வாழ்ந்து காட்டியவன். செயல் அரிது, சொல்வதைக் காட்டிலும். இன்னும் ஒருமுறை அவர்களோடு வாழ்ந்து அவர்களோடு பேசி மகிழ முடியாததை எண்ணும் போது பீறுகின்ற வேதனை யாருக்குப் புரியும். மண்ணில் இந்தச் சோகம் எந்நாளும் வாழும்.

நேசம்மிக்க எமது மக்கள் அவன் நினைவால் தினமும் எழுகின்றார். நாளையும் புதிய தளிர்கள் பூப்போன்ற இதயம் கொண்டு மண்ணில் எழுவார்கள். மனிதம் சாகாது. வாழும்.

பொருத்திக் கொண்டிருந்தான். அதை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில் "தம்பி நீங்கள் எந்த ஊர்?" என்ற குரல் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன். அந்த மனிதர் வந்து எனக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தவாறே சிரித்தார். உறுதியான ஒழுங்கான வெண்பற்கள் - புகையிலை, வெற்றிலைப் பழக்கம் எதுவும் கிடையாது.

"நான் தண்ணீரூற்று..." நான் ஒரு ஆங்கில ஆசிரியன் என்பது அவருக்குத் தெரிந்ததும் அவர் அவசரம் அவசரமாக தன் கையிலிருந்த பெரிய கடித உறையிலிருந்த ஒரு பழுப்பேறிய கடிதத்தை எடுத்தார். அது ஒரு பதவி நியமனக் கடிதத்தின் பிரதியாகக் காணப்பட்டது. வவுனியா அரசாங்க அதிபர், திரு. சிவசம்புவை முல்லைத்திவுப் பகுதிக்கு சுப்பீரியர் ஹெட்மனாக நியமித்திருப்பதாகக் கூறும் அந்தக் கடிதத்தில் வேறு எந்த விபரங்களும் காணப்படவில்லை.

சுப்பீரியர் ஹெட்மன் என்ற ஒரு பதவியை நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. கிராம சேவையாளர்களை முன்பு, கிராம விதானை - வில்லேஜ் ஹெட்மன் என அழைத்தது தெரியும். இவர் என்ன இந்தப் பகுதி கிராம சேவையாளர்களுக்கு தலைமை விதானையா! என நான் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன்.

எனது முகத்தில் தெரிந்த ஆச்சரியம் அவருக்கு பெருமையை அளித்திருக்க வேண்டும். அவருடைய முகத்தில் அது தெரிந்தது.

"தம்பி! நீங்கள் எனக்கு ஆங்கிலத்திலை ஒரு பெட்டிஷன் எழுதித் தரவேண்டும்.... 1972ம் வருஷம் எனக்குப் பதவி நியமனம் தந்தும் இன்னும் ஒரு சதக் காசெண்டாலும் சம்பளம் தரவில்லை. நானும் அந்தநாள் தொடக்கம் இந்தநாள்வரை அரசாங்க அதிபர் தொடக்கம் மந்திரிவரை சம்பளத்தைப் பற்றி முறையீடு செய்து கொண்டுதான் இருக்கிறன். தாறாங்கயில்லை."

நான் அவரை ஏறிட்டுப் பார்த்தேன். அவர் தனது உறையிலிருந்து ஒரு பாஸ்போட் சைஸ் படத்தை எடுத்து எனக்குக் காட்டி "இதுதான் தம்பி வவுனியா அரசாங்க அதிபர் என்னை சுப்பீரியர் ஹெட்மனாக நியமித்தபோது தந்த யூனிபோம்!" அந்தப் படத்தில் அவர் பழைய காலத்துக் கச்சேரிப் பியூன்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அணியும் தலைப்பாகையும் மார்புச் சுட்டியும் அணிந்து கம்பீரமாகக் காட்சியளித்தார்.

"எனக்குப் பதவி நியமனம் கிடைச்ச கையோடை நான் வவுனியா ஸ்டுடியோவிலை எடுத்த படம் இது! ஆனால் எல்லாத்தையும் திருப்பி வாங்கிப் போட்டாங்கள்!".

"எப்போது நடந்தது இது?" என்று நான் கேட்டதற்கு ஒரு புன்னகையுடன் பதில் சொன்னார் சிவசம்பர்.

"எனக்குப் பதவி நியமனம் கிடைத்து மூண்டு மாதங்களாகியும் சம்பளம் போடேல்லை. பின்னை நான் வவுனியாக் கச்சேரிக்கு என்னுடைய சம்பளத்தை எடுக்கப் போனேன். அங்கையுள்ள கிளாக்குமார் அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்திட்டுச் சிரிச்சினம். சுப்பீரியர் ஹெட்மன் எண்டொரு உத்தியோகமே இல்லையாம்!.... அதை எனக்கு வழங்கிய அரசாங்க அதிபர் இப்ப எங்கையோ மாறி வெளிநாட்டுக்குப் போட்டாராம்... அவர் திரும்பி வந்தால் அவரைக் கேட்டுப் பாருங்கோ எண்டு சாட்டுப் போக்குச் சொன்னாங்கள். இப்ப உள்ள அரசாங்க அதிபரை நான் சந்திக்கவேணும் எண்டு கேட்டதுக்கும் அவையள் விடேல்லை!".

அவருடைய கதையைக் கேட்டு எனக்குள் வியப்பும் ஆச்சரியமும் வளர்ந்து கொண்டே போகலாயிற்று.

"அந்த அளவிலை நான் விடேல்லைத் தம்பி!... அப்பிடியே வவுனியாவிலை இருந்து றெயின் எடுத்து கொழும்புக்குப் போட்டன். அங்கை அலரி மாளிகைக்குள்ள போய் அப்ப பிரதம மந்திரியாய் இருந்த சிறிமாவிட்டை முறையிடப் போனேன்!... ஆனால் அங்கை காவலுக்கு நிண்ட பொலிசுக்காரர் என்னைப் பிடிச்சுப் போட்டாங்கள்!.... அவங்களுக்கு என்ரை நியமனக் கடிதத்தையும் எனக்குத் தந்த தலைப்பா, சுட்டி, பட்டி எல்லாத்தையும் காட்டினன்.... அவங்களுக்கு விசயம் ஓரளவுக்கு விளங்கியிருக்கோணும்!.... உடனே வவுனியாக் கச்சேரிக்கு போன் பண்ணி விசயத்தைக் கேட்டாங்கள்.... அப்ப வவனியாக் கச்சேரி ஆக்கள் விசயம் மேலிடத்துக்குப் போட்டுது எண்டு தெரிஞ்சவுடனை என்னோடை போனிலை கதைச்சினம். தாங்கள் என்ரை அலுவலை உடனை கவனிக்கிறம்.... உடனை என்னை வவுனியாவுக்கு வரச் சொல்லி எனக்குச் சொன்னாங்கள்!. நானும் அடுத்த றெயினிலை திரும்பி வவுனியாவுக்கு வந்தன். அங்கை அவங்கள் இப்ப உள்ள அரசாங்க அதிபரிட்டைக் காட்டி விஷயத்தைத் தாங்கள் கதைக்கிறம் எண்டு சொல்லி என்ரை ஒறிஜினல் பதவி நியமனக் கடிதம், தலைப்பா, சுட்டி, பட்டி எல்லாத்தையும் வேண்டிக் கொண்டு போனாங்கள்... பிறகு வந்து சொன்னாங்கள்.... நீங்கள் வீட்டை போங்கோ அரசாங்க அதிபர் உங்களுக்கு கடிதம் போடுவார் எண்டு. அப்ப என்ரை நியமனக் கடிதம். தலைப்பா, பட்டி, சுட்டி எல்லாம் எங்கை எண்டு கேட்டன். தலைப்பா, பட்டி, சுட்டி எல்லாம் இப்ப ஒருதரும் பாவிக்கிறேல்லையாம்.... நியமனக் கடிதம் உங்களுக்கு சம்பளக் கணக்குப் பார்க்கத் தேவையெண்டு சொன்னாங்கள். நானும் நம்பிக் கொண்டு வந்திட்டன்.... பிறகுதான் எனக்குத் தெரிஞ்சுது இதெல்லாம் கச்சேரிக் கிளாக்குமார் என்னை ஏமாத்திறதுக்குச் செய்த வேலை எண்டு... நான் ஊருக்கு வந்த அடுத்தநாள் எனக்கு வவனியா அரசாங்க அதிபரிட்டை இருந்து கடிதம் வந்தது. இப்போதுள்ள சட்டத்தின்படி சுப்பீரியர் ஹெட்மன் என்ற ஒரு பதவி இல்லாத படியினால் அந்தப் பதவியிலிருந்து என்னை நீக்கியிருப்பதாக அதிலை இருந்தது....

**அரைப் பைத்தியமாக இருப்பதனால்தான் இது சாத்தியமோ? எனக்குள் நான் சிந்தித்துக் கொண்டேன்.**

அவங்கள் பதவியைத் தந்தாங்கள்... பிறகு நீக்கினாங்கள்... அது அவங்கடை சட்டம். ஆனால் நான் உத்தியோகம் பார்த்த மூண்டு மாதச் சம்பளமும் அரசாங்கம் எனக்குத் தரத்தானே வேணும் தம்பி! இல்லையே! இந்த விஷயத்தைத்தான் இங்கிலீசிலை ஒரு பெட்டிசமாய் நீங்கள் எனக்கு எழுதித் தரவேணும்... நாளைக்கு நான் தண்ணியூற்றுக்கு உங்களிட்டை வருவன்.... கட்டாயம் எழுதித் தரவேணும்!..."

அவருடைய வேண்டுகோளை என்னால் மறுக்கமுடியவில்லை.

இதற்கிடையில் மண்டபத்தில் கூட்டம் நிரம்பத் தொடங்கியிருந்தது. சுப்பீரியர் ஹெட்மன் என்னிடம் விடை பெற்றுக் கொண்டு முன்வரிசையில் போய் அமர்ந்து கொண்டார்.

அதன்பின்னர் விழாவுக்கு வந்த நண்பன் ஒருவன் கூறிய விஷயங்களில் இருந்து அவருடைய மிகுதிக் கதை எனக்குக் கிடைத்தது. அவன் முல்லைத்தீவுக் கச்சேரியில் பணிபுரிவதினால் அவனுக்கு இவருடைய கதை தெரிந்திருந்தது.

பதவி நியமனம் பெற்று வந்து இரண்டு நாட்களுக்குள்ளாகவே அவர் கள்ளமரம் ஏற்றிச் சென்ற வண்டியை மறித்து தனது டைரியில் அதைப் பற்றிக் குறிப்பும் எழுதி தனது கடமையைச் செய்திருக்கிறார். அந்த கள்ள மரக்கடத்தல் அந்த ஊர் கிராமசேவையாளரின் உதவியோடுதான் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக கிராமசேவையாருக்கும் சுப்பீரியர் ஹெட்மனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, கிராம சேவையாளர் சுப்பீரியர் ஹெட்மனை அடிக்கும் அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது. அதன் பின் சுப்பீரியர் ஹெட்மன் தனது வேலையை டைரியில் குறிப்பு எழுதுவதுடன் நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

"அப்போ ஏன்தான் இப்படியொரு நியமனத்தை அந்த அரசாங்க அதிபர் இவருக்குக் கொடுத்தார்?"

"அதுதானே இதில் பகிடி!....

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அந்த அரசாங்க அதிபர் ஒரு குஷியான பேர்வழி... கிராமசேவையாளர் தெரிவில் சிவசம்பர் எடுபடாத போதும், அந்த அரசாங்க அதிபரை அவர் நேரில் சந்தித்து, தனக்குப் பதவி தரத்தான் வேண்டுமென வாதாடியிருக்கிறார். இவருடைய அப்பாவித்தனத்தைப் பார்த்துவிட்டு அந்த அரசாங்க அதிபர் சுப்பீரியர் ஹெட்மன் என்ற கற்பனையான பதவியை இவருக்கு விளையாட்டாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் இந்த விஷயம் இவ்வளவு தூரத்துக்குப் போகுமென அப்போது ஒருவரும் நினைக்கவில்லை. ஆனால் பின்னர் பிரதம மந்திரியிடமே சிவசம்பர் முறையிட முனைந்தபோது அவர்கள் உஷாராகிக் கொண்டு முன் கொடுத்த பதவி நியமனக் கடிதத்தை தந்திரமாக வாங்கிக் கொண்டு வேறொரு கடிதத்தைக் கொடுத்திருக்கின்றார்கள்"...

**தான் செய்த குறும்பு பிடிபட்டுப் போனதும் சிரிக்கும் ஒரு குழந்தையின் சிரிப்புத்தான் அவருடைய முகத்தில் சட்டெனத் தோன்றியது.**

பழைய நினைவில் ஆழ்ந்திருந்த என்னை கட்டிலின் பக்கத்திலிருந்து கடிகாரம் மறுபடியும் இந்த உலகுக்கு கொண்டு வந்தது. அவசரமாகக் காலைக் கடனை முடித்துக் கொண்டு புறப்பட்டேன்.

★★★

பூமணியின் வீட்டில் சுப்பீரியர் ஹெட்மன் சிவசம்பரைக் கண்டபோது என்னால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை. அவருடைய தோற்றத்தில் பெரும் மாறுதல் எதுவும் இருக்கவில்லை. இத்தனை வருடங்களின் பின்பும் அவர் ஆரோக்கியமும் குன்றாது அன்றிருந்தது போலவே இன்றும் இருப்பது ஆச்சரியத்தையே அளித்தது.

www.tamilarangam.net
போரும், பிரச்சனைகளும் நிலவும் எமது நாட்டில் வாழ்ந்தும், அவற்றால் சிறிதேனும் பாதிக்கப்படாததுபோல இருக்க இவரால் எப்படி முடிந்தது!...

அரைப் பைத்தியமாக இருப்பதனால்தான் இது சாத்தியமோ? எனக்குள் நான் சிந்தித்துக் கொண்டேன்.

சிவசம்பர் என்னைக் கண்டதும் மிகவும் மலர்ந்து போனார்.

"வாருங்கோ மாஸ்டர்!" எனக் கையில் கோப்பியுடன் என்னை வரவேற்ற பூமணி தன் முறைப் பாட்டைச் சொல்லி முடிக்கும் வரை யாரையும் பேசவிடவில்லை.

"இவருக்கு அங்கை நாட்டிலை ஆர் இருக்கினம்?... கடைசிக் காலத்திலை நோய், நொடியெண்டு படுத்தால் ஆர் பார்ப்பினம்?... இஞ்சை பேரப் பிள்ளையளைக் கொஞ்சிக் கொண்டு எவ்வளவு வசதியாய் இருக்கலாம்... இந்த வசதி அங்கை இவருக்குக் கிடைக்குமோ?... என்ன இஞ்சை கொஞ்சம் குளிர் கூடத்தான்... அதுக்கு நல்ல உடுப்புக்களைப் போட்டால் போகுது... இவருக்கெண்டு ஒரு றூம் கூட ஆயத்தப் படுத்தியிருக்கிறம்... புறம்பான பாத்ரூம்... என்ன சொன்னாலும் அப்புகேக்கிறாரில்லையே!... இவரை இஞ்சை கூப்பிடுறதுக்கு நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டம் எண்டதையும் யோசிச்சுப் பார்க்கிறாரே!..." எனச் சொல்லிக் கொண்டு வந்த பூமணிக்கு மேலே பேசமுடியாமல் அழுகை வந்துவிட்டது.

பிள்ளைகள் மூவரும் விளையாடுவதை நிறுத்திவிட்டு அமைதியாய்ப் போயினர்.

பூமணியின் கணவன் தரையைப் பார்த்தவாறு பேசாமல் இருந்தான். நான் சிவசம்பரை பார்த்தேன்.

அவருடைய முகத்தில் எப்போதுமே காணப்படும் அந்த அசட்டுத்தனமான ஒரு சிரிப்பு. அதுதான் இப்போதும் தெரிந்தது.

அவருடன் தனிமையில் பேசிப் பார்த்தால் அவருடைய மனதை அறிந்து கொள்ள முடியும் எனத் தோன்றியது. அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் "எங்கே அப்புவுக்கு ஆயத்தப் படுத்திய அறையைப் பாப்பமோ?" எனக் கேட்டுக்கொண்டே எழுந்தேன்.

பூமணியும், கணவனும் அறையைக் காட்ட முன்வந்தபோது சிவசம்பரும் கூடவே வந்தார்.

அந்த அறையில் ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு கதிரை ஆகியவை காணப்பட்டன. அறையின் ஒரு புறச் சுவரில் இருந்த சன்னலினூடாக, வீட்டுக்கு வெளியே பார்க்கையில், புறாக்கூண்டுகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வரிசைப் படுத்திக் கட்டியது போல நான்கு மாடிக் கட்டிடங்கள் தெரிந்தன.

"அப்புவும் நானும் கொஞ்சம் கதைக்கோணும்!" என நான் சொன்னபோது "ஓம் மாஸ்டர்...! அப்புவுக்கு நீங்கள்தான் வடிவாய் விளங்கப்படுத்திச் சொல்லுவியள்!" என்று கூறிய பூமணியும் அவளுடைய கணவனும் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போய்விட்டனர்.

"இப்பிடிக் கதிரையிலை இருங்கோ தம்பி!" எனச் சொல்லிய சிவசம்பர் கட்டிலில் அமர்ந்து கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"எப்படி சிவசம்பர்... டென்மார்க் உங்களுக்குப் பிடிச்சுதோ?" என நான் ஆரம்பித்தேன்.

"நான் வந்து இப்ப இரண்டு மூண்டு நாள்தானே ஆகுது... நான் அதிகம் வெளியிலை போகேல்லை!... நல்ல அமைதியான நாடுபோலத்தான் தெரியுது.... ஆனால் குளிர்தான் வலுமோசம்!" எனப் புன்னகையுடன் சொன்னார். தொடர்ந்து "நீங்கள் இஞ்சையும் படிப்பிக்கிற வேலைதானோ?" எனக் கேட்டார்.

"இல்லை சிவசம்பர்!... இஞ்சை நான் படிப்பிக்கிற வேலை எடுக்கிறது கஷ்டம்... முதலிலை இந்த நாட்டுப் பாஷையைப் படிச்சு பிறகு இந்தநாட்டு ஆசிரியர் கல்லூரியிலை படிச்சுப் பாஸ் பண்ண வேணும்... அப்பிடிப் பாஸ் பண்ணினாலும் வேலை கிடைக்கும் எண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சொல்லேலாது... இஞ்சை எத்தனையோ டெனிஷ் வாத்திமார் வேலையில்லாமல்தான் இருக்கினம்!".

"அப்ப நீங்களும் என்ர மகள் மருமோன்போலை அரசாங்கம் தாற காசிலைதானாக்கும் சீவிக்கிறியள்!"

"ஓம் சிவசம்பர்!... இப்ப எங்களை இந்த நாட்டுப் பாஷையைப் படிக்கச் சொல்லி விட்டிருக்கினம். ஓரளவுக்கு அதிலை தேர்ச்சி பெற்ற பிறகு ஏதாவது தொழிற்சாலையிலை வேலை கிடைத்தால் செய்யலாம்... அதுகும் இப்ப கஷ்டம்... இந்த நாட்டுக்காரருக்கே வேலை இல்லாமல் இருக்க, வெளிநாட்டுக்காரருக்கு வேலை கிடைக்குமே!"

"அப்ப... உங்களுக்குத் தாற காசெல்லாத்தையும் நீங்கள் என்னெண்டு திருப்பிக் கட்டுவியள்?"

சிவசம்பரின் கேள்வி ஒரு கணம் என்னைத் திடுக்கிடப் பண்ணியது.

"இது திருப்பிக் குடுக்கிற காசில்லை! இந்த நாட்டிலை எந்த ஒரு தனி ஆளும் உணவோ, இருக்க இடமோ, உடுக்க உடுப்போ இல்லாமல் கஷ்டப்படக் கூடாது எண்ட நோக்கத்திலை அப்படிக் கஷ்டப்பட்ட ஆக்களுக்கு இந்த அரசாங்கம் அவையின்ரை தேவைக்கு ஏற்றபடி நன்கொடை யாத்தான் இந்தக் காசைக் குடுக்குது".

www.tamilarangam.net

"அப்பிடியோ சங்கதி!... எங்கடை நாட்டிலை ஏழை பாழைக்கு அரசாங்கம் குடுக்கிற பிச்சைச் சம்பளம்போலை, என்ன?"

நான் மௌனமாகத் தலையை அசைத்தேன்.

சிவசம்பர் முகத்தில் சந்தேகம் எழ தொடர்ந்து கேட்டார். "இந்த நாட்டு அரசாங்கம் தன்ரை காசிலை தன்ரை நாட்டுச் சனத்துக்குத்தானே காசு குடுக்கும்?... அது எப்பிடி அன்னிய தேசத்தவனுக்கு தன்ரை நாட்டுக் காசைக் குடுக்கும்?"

"அது என்னண்டா சிவசம்பர்... இரண்டாம் உலக மகா யுத்தத்திலே ஜேர்மன்காரர் இந்த நாட்டைப் புடிச்சுப்போட்டாங்கள்... அப்ப இவங்கடை சுதந்திரம் பறிபோய்த் தாங்கள் கஷ்டப்பட்டதை இவங்கள் இப்பவும் மறக்கேல்லை!... உலகத்திலை எந்த நாட்டிலையெண்டாலும் ஒரு அரசாங்கம் அந்த நாட்டு மக்களை, அவர்களுடைய இனம், சமயம், பாஷை, அவையின்ரை அரசியல் கொள்கை எண்ட காரணங்களுக்காக இஞ்சை வந்து அடைக்கலம் கேட்டால்... அவையளுக்கு இஞ்சை வசதியள் எல்லாம் செய்து குடுப்பினம்".

"மெய்தானே!... இந்த நாட்டுச் சனங்கள் உண்மையிலே மனுசர் தான்!.." மனம்விட்டுப் பாராட்டினார் சிவசம்பர்.

"உண்மைதான் சிவசம்பர்! இந்த நாட்டிலே இருக்கிற பெரும்பான்மையான சனங்கள் எங்களைப்போல அகதிகளாக வாற ஆக்களுக்கு அனுதாபமாய் நடக்கினம்...

**அலைகடலில் மண்ணின் நினைவு சுமந்து சென்ற கிட்டண்ணாவின் நினைவாயும் அவரோடு சென்ற தோழர்களின் நினைவாகவும் எழுந்த பூங்கா. பூமியில் பாதம் மேவாமல் ஓடி வருவது மண்ணின் குஞ்சுகள். புக்காராவுக்கு கை அசைத்தவர்கள்.**

**மக்களுக்காக மண்ணுக்காக வாழ்ந்தவர் கதையை யாரும் யாருக்கும் சொல்லித் தருவதில்லை. சுற்றி வந்து, கடுக நடந்து படிக்க வேண்டியபாடம். விடுதலையின் சௌந்தரியமாய் எமது மண் இருக்கிறது. இருள் அகற்றும் விளக்கு ஒருபோதும் அணையாது.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எத்தனையோ வசதிகளை இந்த நாட்டு அரசாங்கம் எங்களுக்குச் செய்து தருகுது. நீங்களும் இனி இலங்கைக்குப் போய் என்ன செய்யப் போறியள்?... வயது போகத் தான் மற்ற ஆக்களின்ரை உதவி தேவை... சொந்தப் பிள்ளையள் போலப் பிறத்தியார் பாப்பி னமோ?.... இங்கைதானே உங்களுக் குப் பேரப்பிள்ளைகள், மகள், மருமோன், எல்லாரும் இருக்கினம்!... நீங்கள் இஞ்சை இருந்தால் அதுக ளுக்கு சந்தோஷந்தானே!"

சிவசம்பர் எனக்குப் பதில்கூறாமல் சிரித்தார். அவருடைய வழமையான அசட்டுச் சிரிப்பு!.. நான் சொன்ன வற்றை மறுக்கின்ற தோரணை அச்சிரிப்பில் இல்லை. நான் சொன்னவற்றை ஏற்றுக்கொள்ளும் தோரணையும் அதில் இருக்க வில்லை.

"என்ன சிவசம்பர்!... நான் கேட்டதுக்கு மறுமொழி சொல்லா மல் சிரிக்கிறியள்?"

"இல்லைத் தம்பி!... உங்களுக்கு என்ரை பிரச்சனை தெரியுந் தானே!.... இலங்கை அரசாங்கம் இன்னமும் எனக்குத் தரவேண்டிய சம்பளக் காசைத் தரேல்லைத் தம்பி!.. நான் தொடர்ந்தும் அதுக்கான முயற்சியிலை ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறன்! இப்ப கொழும்பிலை எங்கடை ஊர்ப் பொடியன் ஒருத்தன், அரசாங்க வேலையிலை இருக்கிற பொடியன், அதுக்கு வேண்டிய அலுவல் பார்க்கிறான்... நான் போய் அந்தக் காசை எடுக்கவேணும் தம்பி!..." சிவசம்பர் எதிர்பார்ப்பும் உற்சாக மும் நிறைந்தவராகக் கூறினார்.

அவருக்கு இருக்கும் நம்பிக் கையையிட்டு என்னால் வியக்காமல் இருக்கமுடியவில்லை. ஆயினும் எனக்கு அளிக்கப்பட்ட வேலை யைச் சரிவரச் செய்யவேண்டுமே என்ற எண்ணத்தில் சொன்னேன்: "நீங்கள் ஏன் சிவசம்பர் அந்தக் காசுக்கு இந்தப் பாடுபடுறியள்!.. மிஞ்சி மிஞ்சிப்போனால் இஞ்சேத் தேக் காசுக்கு 500 குறோண்கூட வராது!... நீங்கள் இங்கை அகதியெண்டு பதிஞ்சால் உங்கடை அந்த மூண்டு மாதச் சம்பளத்தை விட கூடுதலாய் இஞ்சை ஒவ்வொரு மாதமும் கிடைக்குமே!"

www.tamilarangam.net

"நீங்கள் சொல்லுறது சரிதான் மாஸ்டர்... ஆனால் நான் வயது போனவன்... என்னாலை இந்தக் குளிர் நாட்டிலை வேலை ஏதும் செய்ய ஏலாது... அப்ப என்னண்டு நான் எனக்குத் தாற காசைத் திருப்பிக் குடுப்பன்?..."

"நீங்கள் அதைத் திருப்பிக் குடுக்கவேண்டிய அவசியம் இல்லை சிவசம்பர்!...அது உங்களுக்கு இலவசமாய்க் கிடைக்கிற காசு!..."

சிவசம்பர் ஒன்றுமே கூறாமல் வெறுமனே அசட்டுத்தனமாகச் சிரித்தார். அவருக்கு இதற்கு மேலும் எவ்வாறு விளங்கப் படுத்துவதென எனக்குத் தெரியவில்லை.

நான் மறுபடியும் சிவசம்பரு டைய முகத்தைக் கூர்ந்து கவனித் தேன். அவர் சன்னலுக்கு வெளியே தெரிந்த கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வெளியே நல்ல வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. புறாக் கூண்டுகள் போன்றிருந்த மாடிக் குடியிருப்பு மாடங்களில் வயது முதிர்ந்த டெனிஷ் பெண்கள் சிலர் வெய்யில் காய்ந்து கொண்டிருந் தனர்.

தான் அவர்களைப் பார்ப்பதை நான் அவதானித்ததைக் கண்ட சிவசம்பர் "பாத்தியளே தம்பி!... ஊரிலை நல்ல வெய்யில் எறிக்கிற நேரம் உடும்புகள் புத்து வாசலிலே தலையை மட்டும் நீட்டி வெய்யில் காயுமாப்போலை வெய்யில் காயினம் இஞ்சத்தே ஆக்கள்!..." எனக் குழந்தைத்தனமாகச் சிரித்தார்.

அதற்குப்பின் நான் அங்கு அதிகம் தரிக்கவில்லை. "அப்பு இன்னும் இரண்டொரு கிழமை நிக்கட்டும்... அவரை அங்கை இஞ்சை கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுங்கோ!" எனப் பூமணிக்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

★★★

சிவசம்பரை அதன்பின்னர் நான்

## சிந்தனைத் துளிகள்

1) "வேங்கையின் கல்லறைமுன் நின்று
வீணாக உன் கண்ணீரை
விரயப்படுத்தாதே
அவன் விட்டுச் சென்றது
என்னவென்று
கண்டுபிடி"

2) "மரணம் மனிதா
உனைக்கண்டு மண்டியிடலாம்
மனிதன் நீ மரணத்தைக்
கண்டு மௌனித்தால்
நீ மனிதன் என்று
வாழமுடியாது"

3) "வாழ்க்கை என்பது
வாழத்தான் - அந்த
வாழ்க்கைக்கு ஓர்
வரலாறு இல்லா விட்டால்
வாழ்ந்ததில் - எந்த
அர்த்தமும் இல்லை."

4) "தாய்மொழியின் தரத்தினைத்
தரணிக்குச் சொல்லத் தெரியா
விட்டாலும்
தாய்மொழியைத் தெரியாது
என்று மட்டும்
சொல்லாதே."

5) "சுதந்திரக்காற்றை
மட்டும்
சுவாசிக்கப் பழகவேண்டும்
மற்றவையெல்லாம்
சுத்தமில்லாதவை."

6) "சிறகுகளை
உடைத்துவிட்டுப்
பறக்க விரும்பாதே
விழுந்து விடுவாய்

7) "சூரிய ஒளி
வேண்டுமானால்
உனைச்சுற்றியுள்ள
சூனியங்களில்
இருந்து விடுபடு"

8) உலகில் உண்மை
கொல்லப்படும் போது
உலகைதத்தட்டி
எழுப்புபவன் எவனோ
அவனே உண்மையில்
எழுத்தாணியின்
சொந்தக்காரன்.

தொகுப்பு: ஆ. சாந்தினி.
டென்மார்க்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சந்தித்தது கொப்பனேஹென் விமான நிலையத்தில்தான். பூமணியினாலோ, பேரப்பிள்ளைகளினாலோ சிவசம்பர் ஊருக்குப்போவதை தடுக்கமுடியவில்லை.

தகப்பன் ஊருக்குப்போகின்றார் என்பதைக் கவலையுடன் எனக்குத் தெரிவித்தது பூமணிதான். அவரை அங்கு சென்று வழி அனுப்பி வைக்க விரும்பியதால் நானும் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தேன்.

சிவசம்பர் என்னைக் கண்டதும் மலர்ந்து சிரித்தார். இப்போது அந்தச்சிரிப்பில் அசட்டுத்தனத்தை விட குழந்தைத் தனமே கூடுதலாகத் தெரிந்தது.

இவரால் எப்படி இந்தச் சமயத்தில் இவ்வளவு சந்தோசமாக இருக்கமுடிகின்றது...! தன் ஒரே மகளையும், பேரப்பிள்ளைகளையும் இனிமேல் சந்திக்கும் சந்தர்ப்பம் இல்லாமலே போய்விடக்கூடும் என்பதை உணராமலா இவ்வளவு சந்தோசமாக இருக்கின்றார்...! மூளை லூசானவர்களுக்கு இந்த விஷயங்களெல்லாம் உறைப்பது குறைவு... எனவேதான் அவர்கள் எப்போதும் நிச்சலனமாக, நிம்மதியாக இருக்கின்றனரோ?... என்ற எண்ணம் எனக்கு ஏற்படவே செய்தது. இப்படியான ஒருவர், தான் சுப்பீரியர் ஹெட்மன் பதவி வகித்ததற்கான சம்பளப் பணத்தைப் பெறுவதில் மட்டும் இவ்வளவு அக்கறை காட்டுகின்றாரே!... கடந்த இருபத்திரண்டு வருடங்களில் தொடர்ந்து தோல்வியையே சந்தித்தும் விடாமுயற்சியுடன் இந்த விஷயத்தில் உடும்புப்பிடியாக இருக்கின்றாரே... மூளை லூசான ஒருவர், நம்பிக்கை சிறிதும் தளராமல், நிதானமாகத் தன் குறிக்கோளை அடைவதற்குப் பாடுபட முடியுமா?...

நானும் அவரும் தனித்திருக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டபோது என் மனதை அரித்துக்கொண்டிருந்த கேள்வியை அவரிடம் கேட்டேன். "உண்மையைச் சொல்லுங்கோ சிவசம்பர்...! உங்களுக்கு உங்களுடைய சம்பளக்காசு கிடைக்கும் எண்டு நம்பிக்கை இருக்குதோ?"

www.tamilarangam.net

தான் செய்த குறும்பு பிடிபட்டுப் போனதும் சிரிக்கும் ஒரு குழந்தையின் சிரிப்புத்தான் அவருடைய முகத்தில் சட்டெனத் தோன்றியது.

"உங்களுக்கு உள்ளதைச் சொல்லுறன் தம்பி...! பூமணிக்குச் சொல்லிப் போடாதெங்கோ....! அவள் கவலைப்படுவாள்... எனக்கு இஞ்சை இருக்க கொஞ்சம்கூட

**'இங்கு இலவசமாக உங்களுக்குத் தரப்படுவதற்கெல்லாம் கூலியாக நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விலையாகக் கொடுத்துவிட்டு வேற்று நாட்டில் அந்த நாட்டவனுடைய பிச்சைச் சம்பளத்தில் வாழ்கின்றீர்கள்!... இந்த சுகங்களும் சௌகரியங்களும் எனக்கு வேண்டாம்!... குடிப்பது கஞ்சி ஆயினும் நான் என்னுடைய சொந்த மண்ணில் சுதந்திரமாய் வாழவேண்டும்!...'**

விருப்பம் இல்லை...! அதுதான் சம்பளக்காசைச் சாட்டாகச் சொன்னனான். இந்த உலகத்திலை ஒன்றும் சும்மா கிடைக்காது தம்பி!.... ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு விலை குடுக்கத்தான் வேணும்... காசாய்ப் பணமாய் அந்த விலையைக் குடுக்காட்டில் வேறை ஏதோ ஒரு விதத்திலை அதைக் குடுத்துத்தான் தீரவேணும்! நான் இஞ்சை மகளோடை இருக்க வேணுமெண்டால் அவை சொல்லுறபடிதான் நடக்கவேணும்... என்ரை விருப்பப்படி வெளியிலை போகவோ, நாலுபேரோடை கதைக்கவோ, ஏலாது... கடைசியிலை எங்கையெண்டாலும் ஒரு ஆசுப்பத்திரியலை கட்டிலோடை கட்டிலாய்க் கிடந்துதான் சாகவேணும்... அங்கை ஊரிலை வாழ்க்கை கஷ்டந்தான்... ஆனால் என்ன கஷ்டமெண்டாலும் அது எங்கடை ஊரெல்லோ!... அங்கைதான் இப்ப ஆக்கள் தேவை தம்பி... எங்கடை பொடியள் செய்யிற வேலைகளை நீங்கள் வந்து நேரிலை பாத்தாத்தான் அதின்ரை தாற்பரியம் உங்களுக்கு விளங்கும்!... துணைப் படையிலை சேர எனக்கு வயது கூடிப்போனாலும் நான் செத்து, என்ரை உடம்பை எங்கடை மண்ணிலை தாட்டால் அது அந்த மண்ணுக்குப் பசளையாய் எண்டாலும் பயன்படுமெல்லே!" என்று சொல்லிய சிவசம்பர் மீண்டும் சிரித்தார். அதே குழந்தைத்தனமான அசட்டுச் சிரிப்பு!

இதற்குள் அலுவல்கள் பரபரவென முடிந்து சிவசம்பரும் விமான நிலையத்தினுள் சென்றுவிட்டார்.

ஈமச்சடங்குகளிலும் இப்படித்தான். இறுதி யாத்திரையில் நாம் கலந்துகொண்டாலும் இறுதி வரை அவர்களுடன் எம்மால் போகமுடியாது. ஏதோ ஒரு இடத்தில் அவர்களும் நாமும் பிரிந்தே ஆகவேண்டும்.

கண்கள் குளமாக நின்ற பூமணியிடமும் கணவனிடமும் விடைபெற்றுக் கொண்டு நான் விமான நிலையத்துக்கு வெளியே வந்து பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன்.

சிவசம்பர் இறுதியாகக் கூறியதெல்லாம் மீண்டும் தெளிவாக என் மனதில் ஒலித்தன.

- இந்த உலகத்திலை ஒன்றுமே இலவசமாகக் கிடைப்பதில்லை!... ஏதோ ஒரு வகையில் அவற்றிற்கான விலையை நாம் ஈடுசெய்தே ஆகவேண்டும்!... - எனச் சிவசம்பர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilagangam.net

கூறிய வார்த்தைகளுடன், அவர் கூறாமலே கூறிய வார்த்தைகளும் என்னைச் சடுதியாகச் சுட்டன.

இங்கு இலவசமாக உங்களுக்குத் தரப்படுவதற்கெல்லாம் கூலியாக நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விலையாகக் கொடுத்துவிட்டு வேற்று நாட்டில் அந்த நாட்டவனுடைய பிச்சைச் சம்பளத்தில் வாழ்கின்றீர்கள்!... இந்த சுகங்களும் சௌகரியங்களும் எனக்கு வேண்டாம்!... குடிப்பது கஞ்சி ஆயினும் நான் என்னுடைய சொந்த மண்ணில் சுதந்திரமாய் வாழவேண்டும்!...

மறை கழண்டவர் என்று அனேகரால் கருதப்படும் சிவசம்பரின் உள்ளத்திலே இப்படி ஒரு உயர்ந்த எண்ணமா!... உடல் தளர்ந்து முதுமையின் எல்லைக்குள் காலடி எடுத்து வைக்கின்ற வயதிலும் இப்படி ஒரு தன்மானமிக்க வைராக்கியமா!

சிவசம்பர் ஒரு சுப்பீரியர் ஹெட்மன் அல்ல!... அவர் ஒரு சுப்பீரியர் man என்ற உண்மை எனக்குப் பளிச்சிட்டது.

பஸ்ஸைவிட்டு இறங்கி, தொடர்ந்து நடக்கும்போது இன்னுமோர் சங்கதி எனது மனதில் பச்சையாய் உறைத்தது.

இங்கு நான் இலவசமாகப் பெறும் யாவற்றுக்குமான விலை, அங்கே எமது சொந்த மண்ணில் வாழ்பவர்களால் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது! அங்கு எரிகின்ற ஒவ்வொரு வீடும், பலியாகும் ஒவ்வொரு உயிரும், அங்கு சிந்தப்படுகின்ற ஒவ்வொரு துளி இரத்தமும் ஒவ்வொரு துளி கண்ணீரும் புலம்பெயர்ந்த எனக்குக் கிடைக்கும் சுகம், வசதி, சௌகரியம் என்பவற்றுக்கு விலையாகச் செலுத்தப்படுகின்றது!

சட்டென்று மனதில் உறைத்த இந்த உண்மை என்னை அதிர வைக்கின்றது!

மேற்கொண்டு நடக்கமுடியாமல் நடைபாதையோரம் ஒதுங்கி நிற்கிறேன். அந்த நடைபாதையோரக் கடைக் கண்ணாடியில் தெரியும் எனது உருவத்தைப் பார்க்கின்றேன்.

அங்கே எனக்குத் தெரிந்தது ஒரு வெறும் மனிதனின் உருவமே!... இல்லை!... ஒரு வெறும் மனிதனின் உருவமில்லை... அங்கு தெரிந்தது ஒரு அற்ப மனிதனின் உருவமே!

***

# அன்னை பூமியில்....

## கிராமிய மேம்பாடு

தென்னையில் தன்னிறைவு அடையும் நோக்கத்தை அடிப்படையாக வைத்து மன்னார் மாவட்டத்தில் தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்னோடி நடவடிக்கையாக கிராமிய மேம்பாடு திட்டத்தின் கீழ், தென்னை நடுகைக்கான நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## இறைச்சிப் பரிசோதனை

மக்கள் நலன் கருதியும் கால்நடைகளின் சுகாதாரத்தைப் பேணும் முகமாகவும் இறைச்சிப் பரிசோதனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தினாலும், கால்நடை முதலுதவிச் சிகிச்சை செய்யும் நடவடிக்கை மூலமும் பாவனையாளர்களும் கால்நடைப் பாவனையாளர்களும் பெரும் நன்மை அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கற்பகச் சோலை

ஜெயபுரத்தில் அமைந்துள்ள தரிசு நிலத்தில் மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினாலும் பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தினாலும் கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் பனை விதை நடுகை செய்யப்பட்டு வருகிறது.

## சூழல் பாதுகாப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மக்கள் வாழ்நிலைப் பிரதேசங்களின் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டும், சூழல் சமநிலையைப் பேணும் பொருட்டும் மரநடுகையை ஊக்கம் கொடுத்துவருகின்றனர்.

மக்களுக்கு, பழமரங்கள் மற்றும் தென்னைச் செய்கைகளை அபிவிருத்தி செய்யும் முகமாக 'கிட்டு 92' இனப் பப்பாசி, நல்லினக் கொய்யா, தேசி, தோடை, பலா, மலைவேம்பு போன்ற மரக்கன்றுகளும், தென்னை நாற்றுக்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# அம்மாளைக் கும்பிடுகிறானுகள்

## உண்மைக் கதைகளின் தொகுப்பு

அண்மையில் 'அம்மாளைக் கும்பிடுகிறானுகள்' என்னும் உண்மைக் கதைகளின் தொகுப்பொன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப்பிரிவால் தமிழீழத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய ஆக்கிரமிப்புப்படைகள் தமிழீழத்தின் கழுத்தை நெரித்து, ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்த அந்த 1987, 1988, 1989ம் ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்ற உண்மைக் கதைகள் பதின்நான்கும், சிறிலங்கா இராணுவ அட்டூழிய காலகட்டங்களில் நடந்த உண்மை நிகழ்வுகளில் ஒன்றினையும் தன்னுள் சுமந்து, ஒலிவர் என்கின்ற ஓவியர் வடித்த சித்திரமும் தாங்கி, நேர்த்தியான வடிவமைப்புடன் பூத்திருக்கின்றது, 'அம்மாளை கும்பிடுறானுகள்' என்னும் போராட்ட வரலாற்றுப்பதிவுப் பொக்கிசம். உண்மையைக் கூற எழுந்த பேனாக்களின் மையிலே வாசகன் மூழ்கியே போகிறான்.

அமைதி காக்கவென எம்மண்ணில் கால்பதித்த அந்நியக் கழுகுகள்..... அவர்களுடன் கைகோர்த்தபடி எம்மின் துரோகப் பருந்துகள்..... தமிழீழத்தின் குச்சொழுங்கையெங்கும் வீறாப்புடன் உலாவந்து கொண்டிருந்த காலம்...

"கொக்குவிலுக்குப் பக்கத்தில இந்திய வெறிப்படைகள் கர்ப்பிணிப் பெண்ணின் வயித்துக்கு மேலாக டாங்கியை ஏத்திச் சென்றான்களாம்..."

"ஆஸ்பத்திரிக்க நுழைந்த இந்திய இராணுவ வெறியன்கள் பல டாக்டர்களையும், தாதிகளையும் சுட்டுக்கொன்று போட்டாங்களாம்"...

"ஆரையம்பதியில் ஒரு வீட்டுக்க நுழைந்த இந்திய ஆமிக்காரன்கள் அந்தப் பெடிச்சியை கதறக் கதற மாறி மாறி கெடுத்தாங்களாம்..."

எங்கும் குருதி வடியும் செய்திகள்....!

"அட ராசா உங்கால போகதையடா. அந்த அறுவான்கள் சந்தியில நிற்கிறாங்களாம்..."

"நாங்க அடிமைகளாய் இருக்குமட்டும் நாலுபேரும் உதைப்பானுகள். நம்மள நாமளே ஆளவேணும். அதுமட்டும் எமக்கு உதைதான்... வெடிதான் ... சாவுதான்..." கிழவர்.

"யாரும் அசையாதீங்கடா. நமக்கு மேல அவன் ஜீப்பை ஏத்தட்டும். நம்மளை அவன் கொல்லலாம்... ஆனால் நம்மட போராட்டத்தை அவன் ஒடுக்க முடியாது...!"

"நோய் கணவனைக் கொன்றுவிட்டது. கட்டிலில் கணவனின் உடல்... சுற்றிவர அழுதபடி பெற்ற பிள்ளைகள். காட்டிலே தேசத்தின் பிள்ளைகள் வயிற்றுப் பசியுடன்... கணவனை வெள்ளைத் துணியினால் மூடிவிட்டு, சாப்பாடு தயார் செய்து, பல சென்றிகளையும் தாண்டி தேசப்பிள்ளைகளின் பசிபோக்க காட்டுக்கு விரைந்த தாய்..."

குருதிவடியும் நிகழ்வுகளின் ஊடே மண்ணின் மைந்தர்களதும், மக்களதும் வீரம் செறிந்த வரலாறும் எழுதப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆம், 'அம்மாளை கும்பிடுறானுகள்' - இந்திய ஆக்கிரமிப்பு படையாலும், அவர்களின் கைக்கூலிகளாலும் நடாத்தி முடிக்கப்பட்ட நரவதைகளின் கதையாகவும்... இவற்றிற்கு முகம் கொடுத்தபடி எமது போராட்ட வரலாற்றில் ஒரு சகாப்த காவியம் படைத்த மக்களினதும் விடுதலைப்புலிகளினதும் கதையாகவும்... அந்தக் காலகட்டத்துப் பேனாக்களே பிரசவித்து, அனைத்து மக்களாலும் நுகர முடியாது போன உண்மை நிகழ்வுகளின் தெறிப்பு. ஒரு அற்புதமான வரலாற்றுப் பதிப்பாகவும் நின்று விளங்கும்.

விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் ஒரு முக்கிய கடமைகளுள் ஒன்றாக கொள்ளப்பட்ட இப்பணியின் முதற் தொகுதியாகவே இந்நூல் இருக்கிறது. அடுத்த தொகுதிக்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவில் அவையும் ஒரு செய்தியோடு எம்மைச் சேரும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்வியக்
# நின்ற









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ம்
# போகும்?

www.tamilarangam.net










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'வெளிச்சம்' சஞ்சிகைக்கு அளித்த சிறப்புச் செவ்வியினை அப்படியே தருகிறோம்

www.tamilarangam.net

# நேர்காணல்

# குழந்தை ம. சண்முகலிங்கம்



நேர்முகம்
கருணாகரன்

குழந்தை. ம. சண்முகலிங்கம் தமிழுலகம் தலைநிமிர்ந்து 'என் பிள்ளை இவன்' என்று பெருமைபடக்கூடிய பெருங்கலைஞர். தமிழ்நாடக வரலாற்றின் தொடரோட்டத்தில் இவரது காலமும் பணியும் என்றென்றும் மறக்கமுடியாததும் மறைக்க முடியாததுமாகும். ஈழத்தின் நாடகத்தை காலத்தின் தேவை உணர்ந்து அதை மாற்றியமைத்து, உலகத்தின் ஒத்திசைவுக்கு திசைதிருப்பிய ஆளுமைமிக்க கலைஞர்களில் இவர் முதன்மையானவர்.

உண்மையான மனிதராக வாழ்ந்து, உன்னதத்தின் பிரதிநிதியாகத் தன்னை அடையாளம் காட்டி நல்ல கலைஞனின் வாழ்வுக்கு உவமையானவர். ஈழத் தமிழ்த் தேசியப் போராட்டத் தோற்றுவாய்க் காலங்களில் போராட்டத்திற்கு உறுதுணை சேர்க்க 'மண்சுமந்த மேனியர்' நாடகத்தை எமக்கு அளித்தவர். 'நாடக அரங்கக் கல்லூரி'யின் பிதாமகரில் ஒருவர்.

'அன்னையிட்ட தீ', 'எந்தையும் தாயும்', 'யார்க்கெடுத் துரைப்பேன்' போன்ற பல தரமான நாடகங்களைத் தந்தவர். சிறுவர் நாடகங்களையும் பாடசாலை நாடகங்களையும் அதிகமாக அளித்த பெருமை இவருக்கு உண்டு. தற்பொழுது யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் பகுதிநேர விரிவுரையாள ராகப் பணிபுரிகிறார்.

தன் தலையின் மணிமுடி உச்சங்களை உரசிக் கொண்ட போதும் வேர்களை எம் புழுதிமண்ணிலே பரப்பிநிற்கும் எம் மண்ணின் மனச்சாட்சி இவர்.

**★★ தங்களின் கலையுலக வாழ்வு பற்றி கணிசமாகப் பலரும் அறிந்துள்ள தால், சண்முகலிங்கம் என்ற கலைஞ னின் உருவாக்கத்தையும் அதனுடைய தோற்றுவாயையும் தங்களின் குடும்ப வாழ்க்கை பற்றியும் கூறுங்கள்?**

▶ எனது குடும்பம் கலைக் குடும்பமல்ல. தாய்தந்தையர் சினிமாவே பாராது போனவர்கள்; பாவமென்று கருதியவர்கள். பதினேழு வயதில் தான் நான் முதன்முதலாகப் படம் பார்த்தேன். கல்லூரியில் பார்த்த ஓரிரு நாடகங் கள் தவிர வேறு பார்க்காதவன். கூத்துக்கள் இளவயதில் பார்த்ததே இல்லை. நாடகத்தில் நாட்டம் கொண்டு பிரவேசித்தவனல்ல நான். எனது அயலில் இருந்த முதியவர் ஒருவரை நான் பாவனை பண்ணிக் காட்டுவதைக் கண்ட ஒருவர், என்னை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தயாரிக்கும் நாட கத்தில் வற்புறுத்தி நடிக்க வைத்தார். கிழவன் பாத்திரம் கிடைத்தது. தொடர்ந்து பல நாடகங்களில் அந்த வேசம்தான்.

விதானை க. செல்வரத்தினம் என்னைத் தன்னோடு இணைத்துக் கொண்டார். நகைச்சுவை நடிப்புக் கான பாத்திரங்கள்தான் அவருக்கும் எனக்கும் கிடைக்கும். எங்கள் உரையாடலை நாங்கள் இருவரும் ஒத்திகையின் போது பேசிப் பேசி உறுதிசெய்துகொள்வோம். ஏனைய நடிகர்களின் உரையாடல் எழுதப் பட்டிருக்கும்.

நாடக நடிகன் என்பதை அறிந்தி ருந்தும் என் மனைவி என்னைக் கட்டிக் கொண்டார். அதற்கான தண்டனையை அனுபவித்து வருகி றார். பணம் 'சம்பாரிக்க'வில்லை என்ற ஒரு மனக்குறை இருப்பினும் நாடக முயற்சிகளுக்குத் தடையாக இருப்பதில்லை. விமர்சகர்கராக இருப்பதுண்டு. இனி, நான் நாடகத்தை விட்டாலும் நாடகம் என்னை விடாதுபோல் தெரிகிறது.

**★★ தலைசிறந்த கலைஞர்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அனைவரிடமும் சொல்லத்துடிக்கும் செய்திகள் சில இருக்கும் என்பதை நாம் அறிவோம். தாங்கள் சொல்லத் துடிக்கும் செய்தியாக கருதுவதைக் கூறமுடியுமா?**

▶ "சமூக விழுமியங்கள்", "எமது பாரம்பரியங்கள்'' என்ற பொன் முலாமிட்ட பதங்களுள் நாம் மூடி மறைத்து வைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தும் சின்னத்தனங்களை வெறுக்கிறேன். இச்செயல்களால் சிதைந்து போகும் மனித உறவுகளை, மனித நேயத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சீதனம், சாதி, சுயநலம், ஆளுமையைச் சிதைக்கும் அன்னியக் கல்வி முறைமை, பெண்ணை ஒரு சாதியென நோக்கும் பான்மை என்பவற்றால் தன்னில் இருந்தே தான் அன்னியப்பட்டிருக்கும் எங்கள் மனிதர்களில் பலரை நான் விமர்சிக்கிறேன். தங்கள் "பிணிகளை"யும் "துயரங்களை"யும் கண்டுகொள்ளாத மக்களைக்கண்டு வருந்துகின்றேன்.

**★★ போராட்டங்கள் நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற நாடுகள் அனைத்திலுமே நாடகமே முதன்மைக் கலைவடிவமாக இருந்துள்ளது; இருந்து வருகின்றது. எமது தாயகமும் விடுதலைக்காக விலை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இங்கு நாடகங்களின் பங்களிப்புப் பற்றி தங்களின் கருத்தென்ன?**

▶ மனித வாழ்வினை மிக ஒத்ததாக நாடகம் இருப்பதால் அது மக்களைக் கவரும் தன்மையினைத் தன் இயல்பில் கொண்டுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலங்களில் பலராலும் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் பலவற்றின் தரத்தினையும், தன்மையினையும், பின்னர் வந்த பல நாடகங்கள் அடையத் தவறிவிட்டன. எந்த ஒரு நடவடிக்கையும் ஆரம்பத்தில் ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் நிறைந்ததாக இருந்தது. காலத்தின் வளர்ச்சியோடு ஆழ்ந்த அமைதியும், காத்திரத்தன்மையும், கனதியும், செறிவும் கொண்டு உணர்வுபூர்வமாக வளர்வது இயல்பு. எமது ஆயுதப்போராட்டம் அத்தகைய முறையில் வளர்ந்து வருகிறது எனலாம். இதே அளவு கனதியும், செறிவும் கொண்ட நாடகங்களை நாம் படைக்கவில்லை. நாடகம் காலத்தின் உணர்வினைப் பிரதிபலிக்கவும் வழி நடத்தவும் தவறிவிட்டது. இன்னும், வெறும் 'ஆர்ப்பரிப்பு' நாடகங்களே பெருமளவில் மேடை ஏறுகின்றன. இதற்கான காரணங்கள் இரண்டைக் கூறலாம்-

1. நாடகக் கலைஞர் பலருக்கு, எமது மக்களின் விடுதலையில்- எத்தகைய துயரங்களையும் தாங்கிக் கொண்டு, கௌரவத்தோடு நாம் வாழக்கூடியதொரு அமைதிக்காகக் காத்திருக்கும் வேட்கையில் - சத்தியத்தோடு கூடிய நம்பிக்கையில்லை.

2. விடுதலையில் உண்மையான நம்பிக்கை உள்ள பல கலைஞர்களுக்கு தேசவிடுதலை என்பதன் முழுப்பரிமாணமும் தெரியாதிருக்கின்றது.

பல நாடகங்கள் "சண்டை" பற்றிச் சொல்கின்றனவே அன்றி- சண்டையைக் கூட அவை ஆழமாக நோக்குவதில்லை- 'விடுதலைப்போர்' என்பதன் ஆன்மாவை எட்டியும் பார்க்கவில்லை. எட்டிப் பார்ப்பதாயின் நாம் ஆத்மசுத்தியோடு ஈடுபட வேண்டும். அந்த ஈடுபாட்டின் விளைவாக எழும் நாடகங்கள் நிச்சயமாக மக்களின் ஆத்மாவைச் சென்றடையும்.

**★★ தமிழீழத்தில் தரமான அதிக நாடகங்களை உருவாக்கியவர் என்ற பெருமை உங்களுக்கு உண்டு. நாடகத்துறையின் உச்ச வளர்ச்சிக்கு செய்தாக வேண்டுமென தாங்கள் கருதும் பணிகளைச் சொல்லுங்கள்?**

▶ நாம் நாடகத்தில் சென்றடைய வேண்டிய எல்லைகள் தொலைவில் உள்ளன. அனைவரும் இணைந்து முயன்றால் அவற்றை அடையமுடியும். நாம் எதையுமே செய்து விடவில்லை எனக்கூறவும் முடியாது. ஆயினும் கலைஞர் தம்மைத் தாம் முதலில் கண்டறிந்து கொள்ள வேண்டும். தம்மைத் தாம் விமர்சிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன் புகழுக்காக தற்பெருமையோடு கலையில் ஈடுபட்டால் கலையும் வளராது, தானும் வளரமுடியாது. சுயநலம் கலைஞர்களை கெடுத்து விடுகிறது. "வறிய இதயம் வேண்டும்" என்று ஒரு அறிஞர் சொன்னார். எங்கள் உள்ளங்கள் முற்கற்பிதங்களும், அகந்தையும், சுயநலமும் குடிகொண்டதாக இருப்பின், நல்லவற்றை அங்கு சேர்க்கமுடியாது போய்விடும்.

நாடகக்கலைஞர்கள் கற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும். நல்ல இதயமுள்ள அறிஞர்களாக எம்மையாக்கிக் கொள்ள வேண்டும். 21ம் நூற்றாண்டின் கலைகள் யாவும் அறிவு நிறைந்தவர்களின் ஆக்கங்களாகவே இருக்கப் போகின்றன என்பது பல நாடுகளிலும் இப்பவே தெரிய வந்துள்ளது. நாமும் எமது யன்னல்களைத் திறந்து விட வேண்டும். உலகின் பல பண்பாடுகளின் தேடல்களையும் அறிந்து கொள்ள வேண்டும். அந்த அறிவின் விசாலத்தில், எமது பண்பாட்டின் வேர்களையும், சாரத்தையும் கலந்து, புதியன படைக்க வேண்டும். அரங்கின் மொழியை அறிந்து, அந்த மொழியின் கவித்துவ அழகை வெளிப்படுத்த வேண்டும். வெறும் நுட்பங்களின் தொகுதி கலையாகி விடாது. பார்த்ததைப் பாவனை செய்தல்

"விடுதலைப் போர்" என்பதன் ஆன்மாவை எட்டிப் பார்ப்பதாயின் ஆத்ம சுத்தியோடு அதில் ஈடுபடவேண்டும். அந்த ஈடுபாட்டின் விளைவாக எழும் நாடகங்கள் நிச்சயமாக மக்களின் ஆத்மாவைச் சென்றடையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கைவினைஞனின் செயல். பார்த்ததைக் கொண்டு புதியது படைத்தல் கலைஞனின் பணி. பார்த்தவை, கேட்டவை, கற்றவை யாவும் செரித்து, தன் குருதியில் கலந்த பின்னரே படைப்பில் ஈடுபட வேண்டும். செரிக்க முன் படைத்தால், உட்சென்றவை, சத்தி (வாந்தி) போல், அப்படியே வெளிவந்து விடும்.

எமது கலை பண்பாடு என்பன உலகக்கலை பண்பாடு என்பதன் ஒரு பகுதி என்பதை உணர வேண்டும். எமது தனித்துவம் என்பது, உலகப் பொதுமையில் இருந்து முற்றாக விலகிநிற்பதல்ல.

★★ கலையரசு சொர்ணலிங்கத்தின் முதன்மை மாணாக்கர் என்ற பெருமை உங்களுக்கு உண்டு. இவருடைய தொடர்பு, பழக்கம், அவரிடம் பெற்றவை இவை பற்றி எடுத்துச் சொல்லமுடியுமா?

➤ முதன்மை மாணாக்கனாக அமையும் பேறு எனக்குக் கிட்டவில்லை "சானா" என்ற சண்முகநாதனையும் விதானையார் செல்வரத்தினத்தையுமே "கலையரசு" தனது முதன்மை மாணாக்கராகக் கருதினார். நான் பலருள் ஒருவன் மட்டுமே.

கலையில் நாட்டமுள்ளவர்களை இனம் காணும் திறன், அவர்களை உற்சாகப் படுத்தும் மனம், சிறியவரோடும் நட்புடன் பழகும் பெருந்தன்மை, நாடகங்களைப் பார்த்து நடிகரை உற்சாகப் படுத்தும் மேன்மை அவரிடம் இருந்தது. கலைஞர்களிடம் கட்டுப்பாட்டை, ஒழுங்கை, ஒழுக்கத்தை அவர் வலியுறுத்துவார். நீண்ட, கடுமையான நாடக ஒத்திகைகளை நடாத்துவார். நாடகத் தயாரிப்பின் சகல அம்சங்களிலும் அவர் கவனம் செலுத்துவார். அனைத்துத் துறையிலும் அவருக்கு அறிவும், அனுபவமும், ஆற்றலும் இருந்தது. தான் நெறிப்படுத்திய நாடகங்களில் சிறிய பாத்திரங்கள் ஏற்று எம்மோடு சேர்ந்து நடித்து எம்மைக் கௌரவிப்பார்.

அவரோடு சேர்ந்து நடித்தது உண்மையில் பெரும் பேறு. அவரது இல்லம் ஒரு நாடகசாலை போன்றே இருந்தது.

www.tamilarangam.net

"அமைதிப்படை" அவர்தேடி வைத்திருந்த அனைத்துக் கலை ஆவணங்களையும் அழித்து விட்டது. நாடகம் மனிதனை உருவாக்க வேண்டும் என்பதை தனது செயல்களால் எமக்கு உணர்த்தியவர் அவர். அவரது எச்சங்களாக நாம் இருக்க முயல்வதுதான் எமது பணி. ஆயிரத்துத் தொழாயிரத்து ஐம்பத்தெட்டில் கலையரசு என்னை ஆள்விட்டு அழைத்து பி. எஸ். ராமையா எழுதிய "தேரோட்டி மகனில்" அருச்சுனனாக நடிக்கும் படி பணித்தார். அன்று ஏற்பட்ட தொடர்பு தொண்ணூற்றி ஆறு வயதில் அவர் இறக்கும் வரை தொடர்ந்தது. எங்கள் வரவுக்காக அவர் காத்திருப்பார். "நீங்கள் வந்து என்னோடு ஒரு மணித்தியாலம் கதைத்தால் நான் ஒரு வருடம் கூடுதலாக வாழ்வேன்" என்பார் கடைசி வரை "வாழ்ந்தவர்" அவர்; வாழவிரும்பியவர் அவர்.

★★ புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உங்களின் நாடகங்களை ஆங்காங்கே மேடையேற்றி வருகிறார்கள். நீங்கள் இந்த மண்ணில் நிலைகொண்ட மக்களுக்குச் சொல்லத் துடித்தவற்றை புலம்பெயர்ந்தவர்கள் அங்கு மேடை ஏற்றும் போது எவ்வளவு தூரம் அவை பொருத்தமாகின்றன?

➤ எனக்குத் தெரிந்தவரையில் "எந்தையும் தாயும்" என்ற எனது நாடகம் மட்டும்தான் கனடா, சுவிற்சர்லாந்து, லண்டன் போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகம் கனடாவில் உள்ளவர்களது வேண்டுகோளுக்கமையவே எழுதப்பட்டது. அதன் இலக்குப் பார்வையாளர், புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளே ஆயினும் அந்த நாடகத்தை நாம் இங்கு தாயாரித்த போது அது பலருக்குப் பிடித்திருந்தது. பலரது மனச்சாட்சியை உலுப்பியது. அது அங்கும் பலரது உள்ளங்களைத் தொட்டதாக அந்நாடுகளில் தயாரித்தவர்கள் எழுதியிருந்தார்கள். இங்குள்ள மக்களுக்காக எழுதப்படும் நாடகங்கள் நிச்சயமாக அங்குள்ளவர்களையும் கவரும், சிந்திக்கத் தூண்டும், தமது தாயகத்தை நினைந்து வருந்தவைக்கும் என்பது எனது நம்பிக்கை. புலம்பெயர்ந்த பலர் இந்த மண்ணையும் மக்களையும் தமது உறவுகளையும் மறக்கமுடியாதவர்களாகவே இருப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது போன்றதொருணர்வு தனக்கு ஏற்பட்டதாக, "எந்தையும் தாயும்" நாடகத்தை கனடாவில் பார்த்த ஒருவர் எழுதியிருந்தார். இங்குள்ள ஏனைய நாடகங்களைப் பார்க்கும் போதும் அத்தகைய உணர்வு அவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும்.

**"சமூக விழுமியங்கள்", "எமது பாரம்பரியங்கள்" என்ற பொன்முலாமிட்ட பதங்களுள் நாம் மூடிமறைத்து வைத்துக் கொண்டு நடைமுறைப் படுத்தும் சின்னத்தனங்களை வெறுக்கிறேன். இச்செயல்களால் சிதைந்துபோகும் மனித உறவுகளை, மனித நேயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**

★★ மரபு நாடகம், நவீன நாடகம், மூன்றாம் உலக நாடகங்களுக்கான அரங்கத்தேடல், வீதி நாடகங்கள் என்றெல்லாம் நாடகங்களை வகைப் படுத்திக் கூறப்படுகிறது. இவை பற்றிய உங்களது விரிவான கருத்தென்ன?

➤ விரிவாகக் கூறுவதாயின் இதுவே தனிக்கட்டுரை ஆகிவிடும்.

www.tamilarangam.net

எனவே சுருக்கமாகவே சிந்திக்க முடியும். அனைத்து மக்கள் மத்தியிலும் தமக்கென்றதொரு மரபு அல்லது பாரம்பரிய நாடகம் இருக்கும். எமது மரபு நாடகங்கள் "நாட்டுக்கூத்து" எனப்படுகிறது. இதனுள் பல வடிவங்கள் உள்ளன. தேசிய இனமொன்று எழுச்சி கொள்ளும் போது தனது பாரம்பரியங்களைத் தேடிக் கண்டு கொள்ள முற்படுவது இயல்பு. இந்தப் பணியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடக்கி வைத்த பணி முக்கியத்துவம் பெறுகிறது. எமது மரபு சார்ந்த கலைகளைப் பேணுவதாயின் அதனைப் பாரம்பரியமாக ஆடி வருகின்றவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பது அவசி



யம். எம்மத்தியில் இப்பணி நன்கு வகுத்தமைத்துக் கொள்ளப்பட்டதொரு கொள்கைத்திட்டத்துக்கமைய நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்காங்கு சிலர் தமது மனம் போனவாறு செய்து வருகின்றனர். ஒரு பொறுப்புள்ள பொது நிறுவனம் ஒன்று இப்பணியினை ஏற்றுச் செயல் முறைப்படுத்துவது அவசியம்.

எம்மத்தியில் "நவீன நாடகம்" என்ற சொற்றொடர் நன்கு புரிந்து கொள்ளப்படாத ஒன்றாக உள்ளது. மேலைத்தேயங்களில், யதார்த்த நாடகங்களின் விளைவாக ஒரு மருட்கை அரங்கு தோற்றம் பெற்று, மக்களை வெறும் பார்வையாளர்களாக மட்டும் வைத்து சிந்திக்க விடாத அரங்க முறைமையாக இருந்ததை எதிர்த்து யதார்த்த விரோத அரங்கவடிவங்கள் தோற்றம் பெற்றன. அதன் முக்கிய முன்னோடியாக யேர்மன் நாடக மேதை பேர்டோட் பிறெஃட் என்பாரைக் கொள்ளலாம். இதனை உள்வாங்கி எழுபதுகளில் இங்கு தோற்றம் பெற்ற நாடகங்களையே பலரும் நவீன நாடகம் என்கின்றனர். மக்களைச் சிந்திக்கத்தூண்டும் புதிய அரங்கம் ஒன்றுக்கான வடிவத்தைத் தேடிய பிறெஃட் அதில் கையாளக்கூடிய பல உத்தி முறைகளை யப்பானிய, சீனப் பாரம்பரிய அரங்குகளில் கண்டார். கீழைத்தேய அரங்குகள் யாவற்றிலும் இப்பண்பு பொதுவாகக் காணப்படுகிறது. இங்கு, "நவீன நாடகம்" என்று சொல்லப்படும் நாடகங்களுள் பல, எமது பாரம்பரிய நாடகங்களிலும், ஏனைய கலை வடிவங்களிலும் காணப்படும் ஆற்றுகை முறைமைகளையே பயன்படுத்துகின்றன. இதனை அறியாத சிலர் 'நவீன அரங்கை' அன்னியமானதொரு அரங்கம் என்றும், அது எமக்கு அவசியம் அற்றது என்றும் கூறுகின்றனர். கற்றவர் என்று கருதப்படும் சிலரும் இவ்வாறு கூறிவருவது விசமத்தனமானதாகவும் விசனம் தருவதாகவும் உள்ளது.

இங்கு இன்று காணப்படும் பெரும்பாலான 'நவீன நாடகங்கள்' எமது பண்பாட்டினதும் கலைகளினதும் சாரத்தை எடுத்துத் தமது அடிநாதமாகக் கொண்டே படைக்கப்படுகின்றன. அவை உலகின் அனைத்து கலை அனுபவங்களையும் உள்வாங்கிக்கொண்டு, எமது பாரம்பரியத்தில் அடிபதித்து நின்றே படைக்கப்படுகின்றன. இடையில் வந்த மேலத்தேய யதார்த்தவாத மருட்கையுள் தம்மையறியாது சிக்குண்ட பலர் இன்றைய நாடகங்களை வெறுக்க முற்படுகின்றனர். அனைவரும் சுயநலங்களையும் சொந்த லாப, நட்டங்களையும் களைந்தெறிந்து விட்டு தேச நலனில், மக்கள் நலனில் அக்கறை கொண்டு பேசவும், செயலாற்றவும் முற்பட்டால் பல சங்கடங்கள் கலையுலகில் இருந்து நீங்கும்.

மூன்றாம் உலகநாடுகள், குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகள் தென்கிழக்காசிய நாடுகள், இந்தியா ஆகியவை, தத்தம் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைக்கேற்ற அரங்க வடிவங்களைத் தேடிப்படைப்பதில் முனைப்பாக உள்ளன. அவை யாவும் தத்தம் கலை மரபுகளின் வேர்களைத் தேடுகின்றன. அத்தோடு உலகப் பொதுமையானதொரு மக்கள் அரங்கையும் தேடுகின்றன. பிறெஃடின் அரங்கு மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு, நெருக்கம் போதாது என்று அவை கருதுகின்றன.

மக்களும் கலைஞரும் இணைந்து ஆற்றுகையைத் தீர்மானித்து நடத்திச் செல்ல உதவும் வடிவங்களைத் தேடுகின்றனர். ஆதியில் சமயக் கரணத்திலிருந்து தோற்றம் பெற்ற அரங்கம் மீண்டும் அத்தகையதொரு நிலையை- பார்வையாளர், நிகழ்த்துவோர் என்ற வேறுபாடு அற்றதொரு அளிக்கைமுறையை - அடையவேண்டுமென அவாவுகின்றனர். அவற்றுக்கான முன்னெடுப்புக்கள் இங்கும் ஆரம்பித்துவிட்டன. நாம் அவற்றைப் பொறுமையோடு பார்த்து, சிரத்தையோடு விமர்சித்து, எமது மக்களுக்கு மிக அவசியமான அவ் வடிவங்களை வளர்த்தெடுக்க உதவ வேண்டும்.

மக்களைத் தேடிப்போகும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டே வீதிநாடகங்கள் தோற்றம் பெற்றன. அவை, மூன்றாம் உலகின் ஏனைய அரங்குகள் போன்று தளைகளுள் சிக்குண்டு கிடக்கும் மக்களைத் தேடிச்சென்று சிந்திக்கத்தூண்டும் நோக்கம் கொண்டவையாகவே உள்ளன. இங்கு வீதி நாடகங்கள் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வரினும் குறிப்பிடக்கூடிய வளர்ச்சி அடையவில்லை என்றே கூறலாம். தனித்து அவ்வடிவத்தில் மட்டுமே ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் குழுக்கள் இங்கு இன்னமும் தோற்றம் பெறவில்லை.

மரபு நாடகங்கள், நவீன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நாடகங்கள், மூன்றாம் உலகுக்கான அரங்கு, வீதி நாடகம் என்று எதையும் நாம் ஆடலாம். அனைத்தையும் இணைத்தும் ஆடலாம். ஆடுவோர், கலை சார்ந்த அறிவும், தேடலும், நேர்மையும், மக்கள் மீது பற்றும் கொண்டவர்களாக இருப்பின், அவர்கள் படைக்கும் படைப்புக்கள் எல்லாமக்களையும் சென்றடையும்; நன்மை பயக்கும்.

**★★ தொடரும் தங்களது கலையுலக வாழ்க்கையில் இந்த மண்ணின் விடுதலைக்கான கருத்தை, ஆங்காங்கே குறிப்பிடும் படியாக விதைத்துள்ளீர்கள். புதியதொரு சமூக அமைப்பொன்றுக்காகவும் தங்களின் கருத்தைக் கூறியுள்ளீர்கள். இன்று உயிர் கொடுத்துப் போராடும் இந்த உரிமைப் போராட்டத்துக்கும் உங்கள் பங்கு கணிசமானது. எனவே போராடும் தேசத்தின் கலைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

▶ கலை இலக்கியவாதி ஒரு தனி மனிதன் அல்ல. அவன் ஒரு மக்கள் கூட்டத்தின் மனச்சாட்சியின் குரல்; மானுடத்தின் பிரதிநிதி. எந்த இன்னலும் இடரும், வசதியும் சலுகையும் அவனை நிலைதடுமாறச் செய்யாது, செய்யக் கூடாது. போராடும் தேசத்துக் கலைஞன் ஒருவகையினன் ஆகவும், போராட்டம் இல்லாத தேசத்துக் கலைஞன் வேறொரு வகையினனாகவும் இருக்கமுடியாது. மனிதன் எப்பொழுும் மனிதனாகவே இருக்க வேண்டும். கலைஞனும் ஒரு மனிதனே. மனிதம் நிறைந்த மனிதன். அவன் மனதில் துணிவு இல்லாது, நேர்மையில்லாது, உண்மையில்லாது எதையும் படைக்க முன்வரக்கூடாது. தான் நம்பாததை, நயம் கருதிச் சொல்லக்கூடாது. நம்புவதை, துயர்கருதிச் சொல்லாமல் விடவும் கூடாது. சரியானதை எங்கும், எந்நேரமும், எவர்க்கும் சொல்லும் உண்மையான இதயம் இருக்கவேண்டும். மக்களை நம்பவேண்டும். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். கற்றதை அவர்களது மேன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதாயின் கலைஞன் தனது மனச்சாட்சியை காலந்தோறும் தரிசித்தவாறு இருக்க வேண்டும். அதுவே அவனது வழிகாட்டி. அதைத்தன்னுள் கொன்று புதைக்கும் கலைஞனின் வாயிலிருந்து வருபவை 'நாறும்'.

www.tamilarangam.net

**★★ தாங்கள் புதுமையைத் தேடும் அவா மிகுந்தவராகக் காணப்படும் அதே நேரத்தில் பழமையின் புனிதப் பிரதிநிதியாகவும் காட்சி தருகின்றீர்கள். எடுத்துக்கொள்ளவேண்டிய புதுமைபற்றியும் கழற்றி விடவேண்டிய பழமைபற்றியும் கூறுங்கள்?**

▶ "புதியது என்று இவ்வுலகில் இல்லை; ஒருவர் சொல்லும் ஒவ்வொன்றும் எப்பவோ சொல்லப் பட்டுவிட்டது'', என்று கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த றோமன் மகிழ்நெறி நாடகாசிரியர் டெரன்ஸ் என்பார் கூறினார். காலத்துக்குக்காலம் சொல்லப்படும் முறைமைகள் வேறுபடுகின்றனவே அன்றி, சொல்லும் விஷயம் ஒன்றாகத்தான் உள்ளது. கெட்டவன் தீயதைச் சொல்ல, நல்லவன் நல்லதைச் சொல்வான். சிலசமயம் இருவரும் ஒன்றையே சொல்வார்கள். ஆனால் இருவேறு நோக்கத்துக்காக; கடவுள் உண்டு என்று இருசாராரும் சொல்வர். கடவுள் இல்லை என்று சொல்பவர்களிலும் இருசாராரும் உள்ளனர். கோயில் பூசை செய்பவன் கடவுற்சிலையை விற்பதும், கொள்ளையடித்த பணத்தில் கடவுட்சிலையொன்றை செய்வித்து கோயிலுக்குக் கொடுப்பதும் ஒன்றுதான். இதில் எது புதுமை, எது பழமை? இரண்டுமே வழமை தான். சரி, பிழை, உண்மை, பொய், இந்த இரண்டும் எக்காலத்திலும் ஒன்றுதான். நடைமுறைகள் மாறுபடும். ஒழுக்கம் என்றும் ஒன்று தான்- அதாவது நல்லவை, கெட்டவை. நாம் என்ன நோக்கத்துக்காக ஒன்றைப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். நாட்டார் பாடல்கள், தேவார திருவாசகங்கள், பழமொழிகள், பலஸ்தீனக் கவிதைகள், பாரதி பாடல்கள் யாவும் எனக்கு ஒன்று போலத்தான் தெரிகின்றன. அவை எவற்றிலும் நான் கடவுளைத் தேடுவதில்லை; மக்களைத்தான் தேடுகின்றேன்; மக்களின் இதய ஆழங்களைத் தேடுகிறேன்; அவர்தம் அவலங்களை, அங்கலாய்ப்புக்களை, எதிர்பார்ப்புக்களை, இறுமாப்புக்களை காண்கின்றேன். அவற்றின் மூலம் இவற்றையே வெளிக்காட்ட முனைகிறேன். எமது பண்பாட்டின் மரபைப்புரிந்து கொண்டவர்கள் அதை நயக்கிறார்கள். புரியாதவர்கள் பழமை என்கிறார்கள். புதுமைகள் யாவும் பழமையின் மற்றொரு வடிவம், வகை எனவே எனக்கும் தெரிகிறது - மாமரத்தின் ஆணிவேரின் நுனிக்கும், உச்சிக்கொப்பிலுள்ள இலைத்துளிருக்குமிடையிலுள்ள தொடர்புபோல, இவை இரண்டும் வேறு வேறு பொருள்கள் போலத் தோன்றினும், ஒரு உறவு இருக்கிறதல்லவா? அந்த உறவு, இரண்டையும் ஒன்றாக எண்ண இடம் தருவதில்லையா? இல்லை என்பவருக்கு இல்லை; உண்டென்பவருக்கு உண்டு. பழமையும் புதுமையும் அவ்வாறே.

**★★ நாடக, அரங்கக்கல்லூரியின் பிதாமகர் என்ற பெயர் தங்களுக்கு உண்டு. இது பற்றியும், அதன் வளர்ச்சியில் தாங்கள் காணும் நிறைவு பற்றியும், கூறமுடியுமா?**

▶ நண்பர்கள் சிலர் இணைந்தே நாடக, அரங்கக்கல்லூரியை ஆரம்பித்தோம். ஆ. தாஸீசியசின் பங்கும் பணியும் அதில் முக்கியமானது. பின்னர் கலாநிதி மௌனகுருவின் பணி கணிசமானது. ஏனைய நண்பர்கள் இலைமறையாக இருந்து கொண்டு, தமது பெயர் புகழுக்காக ஏங்காது தொடர்ந்து இருந்து வருகிறார்கள். நட்பு, நம்பிக்கை இவையே அதன் யாப்புவிதிகள். இதில் இணைந்து நின்ற, நிற்கின்ற இளைஞர்களது பங்கும் பணியும் முக்கியமானது. அவர்கள் இதனிடமிருந்து பெற்றுக்கொண்டவை அதைவிட முக்கியமானது. நாடகம் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு எதுவும் இல்லை; அது தானே வரும் என்ற நம்பிக்கையை அகற்றுவதற்காகவே இந்நிறுவனத்துக்கு "நாடக, அரங்கக் கல்லூரி'' என்ற பெயரை வைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோம். 1978 ல் பெரும் "புதின"மாக இருந்த இப்பெயர், இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. பலர் நாடகத்தைப் பயில்கின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு பாடநெறியாகியும் விட்டது. க. பொ. த. உயர்தரவகுப்பில் பல மாணவர் பயில்கிறார்கள். வடஇலங்கைச் சங்கீதசபை பரீட்சிக்கும் பாடநெறிகளில் ஒன்றாக உள்ளது. புதிய நாடக முறைமைகளை யாழ்ப்பாணத்தில் பரவலாக்க வேண்டுமென்பது எமது நோக்கமாக இருந்தது. இன்று அது குறிப்பிடக்கூடியளவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாடசாலைகளில் நாடகத்தின் முக்கியத்துவத்தை உணரச்செய்யுமுகமாக, நாம் "சிறுவர் நாடகம்" "பாடசாலை நாடகம்" என்பவற்றைப் பரவலாக்கியுள்ளோம். இவையாவும் பலரது உழைப்பால் விளைந்தவை; விளைந்து கொண்டிருப்பவை. நாடகப்பட்டறைகளை நாம் இங்கு அறிமுகப்படுத்தி, இன்று அவை பலராலும் விரும்பி ஏற்கப்படும் ஒன்றாக உள்ளன. நாடக, அரங்கக் கல்லூரியின் பணி தன்னிச்சையானதல்ல! நீண்ட நெடுங்காலமாக, வெவ்வேறு காலகட்டங்களிலும் நாடகக்கலையில் உண்மையோடு உழைத்த பலர் பதித்து வந்த தடத்தின் தொடர்ச்சியே இது. இப்பாதை இன்னும் பல தூரத்திற்கு அமைக்கப்படவேண்டியுள்ளது. அது தொடர்ந்து, பல இன்னல்களை எதிர்கொண்டு அமைக்கப்படும் என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கை நிறைவைத் தருகிறது. இடர்கள் எமக்குத் துணிவைத்தருகின்றன.

**★★ தங்களது அடக்கமும், விளம்பரம் தேடாத வினயமும் தங்களது முழுமையான ஒளிவீச்சுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று கருதுகின்றோம். இதுபற்றி உங்கள் பதில் என்ன?**

➤ தனிநபர் முக்கியமானவரல்ல. அவர் சார்ந்திருக்கும் நிறுவனம்கூட முக்கியமல்ல. அவரின், அந்நிறுவனத்தின் பணிகளே முக்கியம். அப்பணிகள் தேவையான விளம்பரத்தை தேடிக் கொள்ளும். எங்கள் சமூகத்தில் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது. ஊரை ஏமாற்றிப் பிழைக்கின்ற எல்லாரும் நிறையப் பட்டங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள். இன்று சிலர் வேண்டிவைத்திருக்கின்ற பட்டங்களைப் பார்த்தால், "எல்லாம் அறிபவர்" "எல்லாம் தெரிந்தவர்" என்று கருதப்படும் கடவுளை விஞ்சியவர்களோ இவர்கள் என எண்ணத் தோன்றும். "நான்" என்ற அகங்காரத்தை ஒழிக்க உதவவேண்டிய ஆலயங்கள் அகந்தையை ஊட்டும் பட்டங்களை அள்ளிக் கொடுக்கின்றன. எங்கள் மனிசருக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை.

**'கலை இலக்கியவாதி ஒரு தனி மனிதன் அல்ல. அவன் ஒரு மக்கள் கூட்டத்தின் மனச்சாட்சியின் குரல்; மானுடத்தின் பிரதிநிதி. எந்த இன்னலும் இடரும், வசதியும் சலுகையும் அவனை நிலைதடுமாறச் செய்யாது, செய்யக் கூடாது. போராடும் தேசத்துக் கலைஞன் ஒரு வகையினன் ஆகவும், போராட்டம் இல்லாத தேசத்துக் கலைஞன் வேறொரு வகையினனாகவும் இருக்கமுடியாது. மனிதன் எப்பொழும் மனிதனாகவே இருக்கவேண்டும். கலைஞனும் ஒரு மனிதனே.'**

ஒருபுறம் தம்மையே ஆகுதியாக்கும் இள நெஞ்சங்களின் தியாகம்; மறுபுறம் விளம்பரம் நாடும் பழகிபட்ட மனங்களின் பட்டம், பதவி வேட்கை. எனக்குக் கிடைத்திருக்கும் "ஒளிவீச்சு" என்பணிகளின் தரத்தையும் அளவையும் விஞ்சியவை எனக்கருதி அஞ்சுகிறேன் நான். இதற்குத் தகுதியடையவனாக்கிக் கொள்ள என்னால் முடியாது. எனது ஆற்றல், ஆற்றலின்மை பற்றி எனக்குத் தெரியும் என நினைக்கிறேன். எனக்குத் தெரியாது போனாலும் என் மனச்சாட்சிக்கு நிச்சயம் தெரியும்.

**★★ நல்ல கலைஞனாக இருப்பதிலும் பார்க்க முதலில் நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

➤ நல்ல கலைஞனாக இருப்பதென்பது நல்ல மனிதனாக



இருப்பதை விடச்சுலபமானது. தான் நல்லவனாக இல்லாத ஒருவனுக்கு, மக்களுக்கு உபதேசம் செய்யும் உரிமை கிடையாது. நல்லவனாக இருப்பதென்பது எல்லார்க்கும் நல்லவனாக இருப்பதென்பதல்ல. எல்லோரும் 'நல்லவன்' என்று சொல்லிக்கொள்ளுமாறு நடப்பதல்ல. எல்லாரையும் திருப்திப்படுத்த முயல்பவன் எவரையுமே திருப்திப்படுத்தமாட்டான். அவன் "படுகள்ளனாகவே" இருப்பான். கலைஞர்கள் நேர்மையானவர்களாக இருக்கவேண்டியது அவசியம். இதனை, வேறுபல வினாக்களுக்கான விடைகளில் வலியுறுத்தியுள்ளேன்.

**★★ உண்மையான கலைஞன் எப்படி இருப்பான்?**

➤ பாரதிபோல் இருப்பான்.

தந்தையர் நாடு என்றதும் அவனி டத்தில் ஒரு சக்திபிறக்கும். தொல்லை இகழ்ச்சிகள் தீர, தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி, அடிமையின் மோகத்தை மடித்து, வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் வேட்கைகொள்வான். நிலை கெட்டமனிதரைக் கண்டு நெஞ்சு பொறுத்திடமாட்டான். சிறுமை கண்டு பொங்கிடுவான். எளிமை கண்டு இரங்குவான். ஒளிபடைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும், தெளிவு பெற்ற மதியும் கொண்டவனாக இருப்பான்.

★★ நாடகக் கலைஞனாக தங்களுக்குள் நல்ல கவிஞன் குடியிருப்பதாக நாங்கள் உணர்ந்துள்ளோம். அந்தக் கவிஞனையும் தாங்கள் உயிர்வாழச் செய்திருக்கலாமே. இந்த ஓரவஞ்சகம் பற்றி உங்கள் கருத்து என்ன?

➧ நடிகனாக வந்தது தற்செயலாக. நாடகாசிரியனானது வேறு வழி இல்லாமல் எழுத்தாளர்கள் நாடகம் எழுதாததால் நான் எழுத நேர்ந்தது. நல்ல கவிதைகளைப் படிக்கும் போது ஏக்கம் பிறப்பதுண்டு. எழுதத்துணிவு வரவில்லை. அதனால் என்ன? இப்ப என்ன வயதாபோய்விட்டது? நாற்பத்தைந்தில் தீவிரமாக நாடகம் எழுத முற்பட்டவன்தானே! அறுபத்தைந்தில் கவிதையையும் கொடுத்துவிட்டுப் போவோமே!

★★ நாடகப் படைப்பாளிகளையும் பார்க்க இந்த மண் நாடக விமர்சகர்களை அதிகம் கண்டுள்ளதே, இந்த விபத்து எப்படி ஏற்பட்டது?

➧ கவிதை, சிறுகதை, நாவல் எழுதினால் பத்திரிகை, சஞ்சிகைகளில் உடனடியாகப் பிரசுரமாகிப் பார்வையாளரை விரைவில் சென்றடைகிறது. நாடகம் எழுதினால் நடிகர், நெறியாளர், ஏனைய அரங்கக்கலைஞர்களை ஒன்றிணைத்து, நீண்டநாள் ஒத்திகை பார்த்து, மண்டபம் எடுத்து, பார்வையாளரை ஒன்று சேர்த்து அதன் பின்னர்தான் படைப்பு பார்வையாளரைச் சென்றடைகிறது. 1980 ல் எழுதிய "பாரதியின் பாஞ்சாலிசபதம்" 1994 இல் தான் பார்வையாளரைச் சென்றடைந்தது. இதனால் இங்கு ஆரம்பத்தில் நாடகம் எழுதிய நல்ல எழுத்தாளர்கள் பின்னர் அதைக் கைவிட்டு விட்டனர். "சொக்கன்", கவிஞர் முருகையன் மட்டும் இதற்கு விதிவிலக்கு. நிச்சயமாக நல்ல கவிஞர்கள் நாடகம் எழுதவேண்டும். அப்பொழுதான் நாடகமொழி செழுமை பெறும். கவிதைக்கும் நாடக உரையாடலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. செட்டும் செறிவும் இரண்டுக்கும் அவசியம். நாடகம், அரங்கம் பற்றிய தெளிவான அறிவுள்ள ஒருசிலரே எம்மத்தியில் விமர்சகர்களாக உள்ளனர். ஏனைய விமர்சகர்கள் நாடகத்தில் உள்ளடக்கம் பற்றி மட்டுமே விமர்சிக்கின்றனர். அதுவும் தெரியாத பலரும் விமர்சனம் எழுதுகின்றனர். இசை,

புழுதி விதைப்புக்குப் பின்னர்
வயலில் நிற்கும் உழவனைப் போல....
வானத்தைப் பார்த்தபடி நம்மில் சிலர்.
"புரட்டாதிச் சனி" விரதத்திலின்று
காகத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பவர் போல்....
இன்னும் சிலர்.
"மகாவலி கங்கை" ஓடிவந்து
"வழுக்கியாற்றில்" விழுமென்ற
நம்பிக்கையுடன் வேறும் சிலர்.
பார்க்க அழகாக...
மரங்கள் பூக்கத் தொடங்கியுள்ளன.
தலையில் சூடத்தான் சரிவருமா?
பட்டத்துக்குக் கட்டிய வாலாகத் தொங்கும்
மின்சாரக் கம்பிகள்
எப்போது ஒன்றாகி உயிர்ப்புக் கொள்ளும்.
புகைவண்டியோடிய தண்டவாளப் பாதையில்
இன்று அகதிகள் குடியிருப்பு.
என்று இவையெல்லாம் ஒன்றாகி
"கூ"வென்ற இரைச்சலுடன் "யாழ்தேவி" ஓடிவரும்?
"ஆனையிறவுப் பாதை" திறந்தவுடன்
ஒருமுறை "கதிர்காமம்" போகவேண்டும்.
பழைய கிழடொன்றுக்கு இதுதான் பல்லவி.
இனிமையான கனவுகளுடன்
காலையில் "தினசரிகள்" விற்பனையாகின்றன.
எல்லோரும் இணைப்பது பற்றியே மூச்சுவிடுகின்றனர்.
ஏன் பிரிக்கப் புறப்பட்டோம்?
அதை மறந்தால்...
இனியும் உதை விழலாம்.

- மாலிகா -

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நடனம் என்றால் அவை பற்றி அறிந்தவர் மட்டுமே விமர்சனம் செய்வர். நாடகம் என்றால் அது பற்றிக் கற்றறியாமல் விமர்சிக்கலாம் என்றதொரு கருத்து நிலவுகிறது. இதனால் நாடகமும் வளரமுடியாது; விமர்சனமும் வளரமுடியாது. கலைஞர்கள் விமர்சனத்தை மதிக்க வேண்டும். தாமே தமக்கு விமர்சகர்களாக இருப்பதும் மிக முக்கியம். ஒவ்வொரு பார்வையாளனும் கூட ஒருவகையில் விமர்சகன் தான். அதனால்தான் பார்வையாளரின் கருத்தை அறிவதில் பல கலைஞர்கள் இன்று நாட்டம் கொண்டு வருகின்றனர். எவர்களுக்காகக் கலை படைக்கப்படுகிறதோ அவர்களின் கருத்து முக்கியமல்லவா?

வைத்துக் கொள்ளத் தெரியாத வர்கள் தறிகெட்டு, தறுக்கணித்துப் போகிறார்கள். மக்களை இலகுவில், பரந்த அளவில் சென்றடையக்கூடிய இச்சாதனத்தை நாம் பயன்படுத்திக் கொள்வது அவசியம். துறைசார்ந்த அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்களோடு ஏனைய கலைஞர்கள் சேர்ந்து இத்துறையில் ஈடுபடுவது நல்லது. கூட்டுக் கலைகளான நாடகம், சினிமா என்பவற்றில் முதலில் கலைஞர், கூடிக் கருமமாற்றும் மனிதர்களாக இருக்கவேண்டும், 'தான்தோன்றீஸ்வரர்களால்' எதையும் செய்துவிடமுடியாது.

★★ சிறிலங்காவில் சிங்கள நாடகம் வளர்ந்த அளவுக்கு தமிழ்நாட்டில் கூட தமிழ் நாடகங்கள் வளரவில்லை என்ற கருத்து உண்டு. இது பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன?

▶ இந்த நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. இன்றும் அதுதான் நிலை என்றும் கூறிவிட முடியாது. தமிழ்நாடு 1978 இன் பின்னர் விழித்தெழுந்து மெல்ல நவீன நாடகங்களிலும், தேசிய நாடகங்களிலும் ஈடுபாடுகொள்ளத் தொடங்கி, இன்று குறிப்பிடக்கூடிய வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதைக் காணமுடிகிறது. கொழும்பு 1977 இன் பின்னர் நாடகத்துறையில் சற்றுத் தேக்கங் காணத் தொடங்கி, பிரேமதாச ஆட்சிக்காலத்தில் திசைமாறி, பின்னர் மீண்டும் சிறிய அளவில் தன்வழி செல்லத் தலைப்பட்டுள்ளது போலத் தெரிகிறது. கொழும்பில் மொழிபெயர்ப்பு நாடகங்களே அண்மைக்காலமாக முன்னணியில் நிற்கிறதாக அறியமுடிகிறது. மொழிபெயர்ப்பு, வளர்ச்சிக்கு நிச்சயம் உதவும். அதேவேளையில் தற்புதுமை நாடகங்களும் அவசியம். குறிப்பிடக்கூடிய தற்புதுமை நாடகங்கள் ஒன்று இரண்டு அங்கு தோற்றாமலில்லை. தமிழீழத்தில் நடைபெற்றுவரும் நாடக முயற்சிகளை நாம் தமிழகத் தோடும் கொழும்போடும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நிலையில் இல்லை. கலைகள் வளரவேண்டுமானால் கலைஞர்கள் தமது கண்கள், காதுகளோடு மனங்களையும் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்.. வெளிநாடுகளில் கவிதை, சிறுகதை, நாவல் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் போக்குகளை இங்குள்ள கலைஞர் சஞ்சிகை, நூல்வாயிலாக அறிந்து கொள்கின்றனர். சினிமாவின் வளர்ச்சியையும் படங்கள் மூலம் அறியமுடிகிறது. நாடகங்களின் போக்குகளை அவ்வாறு தரிசிக்கமுடிவதில்லை. இரண்டொரு கட்டுரைகளை வைத்துக்கொண்டு, அங்கு குறிப்பிட்ட நாடகமொன்று எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பதை அறிவது கடினம். அந்நாடகங்களின் வீடியோப் படங்கள் கிடைக்குமாயின் பயன்படும். மேலைநாடுகளில், தமிழகத்தில், கொழும்பில் உள்ளவர்கள் நல்லதரமான, புதிய படைப்புக்களை வீடியோ படமெடுத்து இங்குள்ள கலைஞரின் பார்வைக்காக அனுப்பலாம். இவற்றைப் பார்த்துப் பாவனை செய்வதற்காக அல்ல. நல்ல கலைஞருக்கு, அவை தூண்டுதலாக அமைந்து புதிய பரிமாணங்களை அடைய உதவும். இவை சாத்தியமாகும் வரை இங்கு கலைஞர் என்று தம்மைக்கருதிக் கொள்கின்றவர் கூடிக் கதைக்க வேணும் சித்தமாக இருக்கவேண்டும். யாருடைய படைப்புச் சிறந்தது என்ற போட்டியும், தனிப்பட்ட பெருமையும் அல்ல இங்கு முக்கியம். இந்தத் தேசத்தின், மக்களின் உண்மையான சுதந்திரமும், சுபீட்சமும், அமைதியுமே முக்கியமானவை. எமது சுயநலம், பாசாங்குகள் அனைவரையும் படுகுழியில் தள்ளிவிடும். படைப்பின் வெற்றிக்காக கலைகள் படைக்காது, கொண்ட இலட்சியத்தின் உயர்வுக்காக கலைகள் படைத்தால், அப்படைப்புக்கள் நிச்சயம் வெற்றிபெறும். அதற்கு கலைஞனின் நேர்மை ஒன்றே அவசியம்.

**நான் கடவுளைத் தேடுவதில்லை; மக்களைத் தான் தேடுகின்றேன்; மக்களின் இதய ஆழங்களைத் தேடுகிறேன்.**

★★ "எந்தையும் தாயும்" என்ற தங்களது நாடகம் ஒரு சினிமாவுக்கான வடிவத்தை தனக்குள் அடங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது. சினிமா என்ற ஊடகத்தை தாங்கள் பயன்படுத்தத் தவறியது ஏன்?

▶ சினிமாவில் ஈடுபடுவதானால் நிறையப் பணம் தேவைப்படும். நாடகம் வேறு, சினிமா என்ற ஊடகம் வேறு. அது நிறையவே பொறிமுறைகளோடும் தொழில்நுட்ப சாதனங்களோடும் தொடர்புடையதோர் துறை. எமக்கு வாய்ப்பும் வசதியும் அறிவும் இல்லாத துறையோடு ஏன் மினக்கெட வேண்டும்? தொலைக்காட்சிப் பெட்டி (Video) வந்த பின்னர் படமெடுப்பது, சற்றுச் சுலபமான தொன்றாகி உள்ளது. இருப்பினும் நமக்கேன் அந்தத் தொல்லை என்று இருந்து விட்டேன். இன்று சிலர் இத்துறையில் ஈடுபடுகிறார்கள். ஆயினும் இங்கு எதிலும் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது. முளைவிட முன்னம் கலைஞர்களை "ஆஹா!" என்று புகழ்ந்து விடுவதால், தம் தலைகளைச் சமநிலையில்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# ஓடம்




★ மணலாறு விஜயன் ★

கடற்கரைச்சேனை, அழகான கிராமம். கிராமியங்கள் தாம் தமிழனின் விருந்தோம்பல் பண்பை அழிந்து விடாமல் காத்து நிற்கும் மையங்கள். பண்பாட்டு மையங்கள் மட்டுமல்ல, ஈழப்போரின் ஆரம்பத் தளங்களாய் அமைந்த பாசறைகள். இலட்சிய வீரர்களை மறைத்துக்காத்த இரும்புத்திரைகளும் கூட! மூதூருக்கு செல்லும் துறை.

நாடியில் கையை ஊன்றியபடி, ஓடத்தின் நுனியில், யாரையோ எதிர்பார்த்து காத்திருந்தார் குலமண்ணன். மெல்லிய தென்றலில் எழுந்த திரைகள் அவரின் ஓடத்தை அசைத்துக்கொண்டிருந்தன. ஓடம் ஓட்டி உழைத்தே ஓடாய்ப் போனவர். துறையில் மக்கள் அதிகமிருந்தால் அவர் வீட்டிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் கண்ணாமரங்கள். பள்ளிகொள்ளப் போகும் புள்ளினங்களின் மெல்லினக்குரல்கள் ஒருபுறம், நெடுந்தூரம் இரைதேட பயணத்தை ஆரம்பிக்கும் வெளவால்களின் முகாரி. கண்ணாக்காடு அமளி துமளிப்பட்டது.

குலமண்ணன், கண்ணாமரங்களையும் அவற்றுக்கிடையே தெரியும் சிறிய ஓடைகளையும் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். ஓடத்திலிருந்த சவளில் கை மெல்லப் பதிந்தது. மனதில் மகிழ்ச்சி. சவள் வேகமாக தண்ணீரில் விழுந்தது. ஓடம் நீரைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது. பாலை மீன்கள் ஓடத்தில் மோதி துள்ளிப்பாய்ந்தன.

மண்ணுக்காய் மரணத்தை முத்தமிட ஓடித்தப்பீடுவம், முந்தியும் உங்கட ஓடத்தை ரெண்டு மூண்டு தரம் எரிச்சுப்போட்டாங்கள். போற போக்கப்பாத்தால் ஆளையுமல்ல எரிச்சுப போடுவாங்கள் போல கிடக்குது"

"தம்பி, இருக்கிறவரைக்கும் நானும் இந்த ஓடமும் இயங்கும். இயக்கம் நிக்கேக்க இன்னுமொரு ஓடம் இயங்காமல இருக்கப் போகுது."

"இல்லையண்ணோய், வீட்டைப் பற்றியும் கொஞ்சம் யோசிக்கோணும். நாலு சனங்களையும் ஏத்தி ஓடினால்தான் அக்காவும் பிள்ளைகளும் சாப்பிடுங்கள்."

"தம்பி, இப்படித்தான் உவன் கணேசனையும் அவனோட வாற பிள்ளைகளையும் என்ர பிள்ளையாய் நினைத்து ஏத்தி இறக்கினன்; சோறு குடுத்து பாதுகாத்தம்; கடைசியில கொண்டாட்டம். இல்லையேல் சாப்பாட்டுக்கே திண்டாட்டந்தான்.

கடற்கரைச்சேனையின் பிரதானவீதி; ஒரு பெட்டிக்கடை; குலமண்ணனின் பொருளாதார வண்டிலின் ஒற்றைமாடு அந்தக்கடை. கடை நடத்திக் கொண்டிருந்தவள் குலமண்ணனின் மனைவி. கடையில் லாபம் கிடைக்குமோ என்பது சந்தேகம். காரணம், விற்பனைக்குரிய நல்ல பொருட்கள் எதுவும் அங்கில்லை. வீட்டுச் செலவுக்காய் வயக்கட்டுப் போகும் கடைதான் அது. ஆனால், அந்தப் பெட்டிக்கடைக்கும், குலமண்ணனின் ஓடத்துக்கும் பெரிய வரலாறே இருந்ததை எவரும் அறிய முடியாது.

வானத்தில் செம்முகில்கள். பகலோன் மறையப் போகின்றான். கொக்குகளும், கோட்டான் குருவிகளும் கொஞ்சி மகிழும் நேரம். ஆற்றின் கரையே நீண்டு, விரும்பியவர்கள்..... தேசபிதாக்கள்.... தேசத்தின் சொத்துக்கள்..... இவர்களுக்காகவே குலமண்ணனின் ஓடம் ஓடிக்கொண்டிருந்தது. பயணத்தின் களைப்பு......, பாதையின் தூரம்; தோளில சுமை.... இவைதான் குலமண்ணனின் கண்களில் தெரிந்தன. சிந்தனையின் வேகத்தை முந்தியே ஓடம் கரையத் தொட்டது.

"என்ன குலமண்ணோய், இந்தியன்ர நடமாட்டம் என்ன மாதிரிக் கிடக்குது?" பொறுப்பாளரின் குரல் கேள்வியோடு நின்றது. "இந்தியன் எங்களை என்ன செய்யிறது; இது நாங்கள் பிறந்த மண்ணெல்லே; இதுக்குள்ள எங்களைப் பிடிக்கிறதெண்டால் அவன் புறிம்பாய் பயிற்சி எடுக்கோணும்."

குலமண்ணனிடமிருந்து உறுதியான பதில் வந்தது.

"அது சரியண்ணோய், நாங்கள் இண்டைக்கு ஒண்டுகூட இல்லாமல் செத்துப்போட்டுதுகள். இண்டைக்கு இருந்திட்டு நாளைக்கு செத்துப்போற பிள்ளையளுக்கு என்னால வேற என்னத்தை செய்யமுடியும்? எண்பத்தியஞ்சிலை இருந்து இந்தக் கை என்ர பிள்ளையளுக்காய் சவள் பிடிச்சிருக்குது" என்று கூறியபோது அவரது கண்களில் நீர் அரும்பி நின்றது.

பேசிக்கொண்டு வரும்போதே ஓடம் கரை தட்டியது. எதைத்தான் கதைத்தாலும் குலமண்ணனின் ஓடமும் வீடும்தான் சுமைதாங்கிகள்.

பசி வயிற்றைக் கிள்ளியிருக்க வேண்டும்.

"எல்லாம் சரியண்ணோய், நல்லாய் பசிக்குது. அக்கா சமைச்சிருப்பாவே?"

சுத்திச்சுத்தி, பசிக்குதக்கா சோறுதாருங்கோ எண்டு ஓடி வருவாங்கள். அதுக்குள்ள ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஞானப்பேச்சு; தத்துவக்கதை என்று தன் மனதுக்குள் எண்ணிய குலமண்ணனின் முகத்தில் மெல்லிய நகைப்பு கோடிட்டது. வேற எங்கதான் அதுகள் போறது என்று அவர் மனம் சொல்லிக்கொண்டது.

துறையிலிருந்து கடற்கரைச்சேனை கிராமத்துக்குள் நுழையும்போது இருட்டியிருந்தது. காதுகளை கூர்மையாக்கி புலிப் பாதங்களை பதித்துக்கொண்டே குலமண்ணனின் வீட்டை அண்மித்தனர்.

குழந்தைகளைப் படுக்கவைத்து விட்டு, இருட்டினை ஊடுருவி, வீதியைப் பார்த்தபடி வாசலில் இருந்தாள் குலமண்ணனின் மனைவி. இந்தியச் சிப்பாய்களின் காலடி ஓசைக்கும், புலிகளின் பாத ஒலிக்கும் அவளுக்கு வித்தியாசம் தெரியும். இருளில் தெரிந்த உருவங்களை தூரத்தில் வைத்தே இனம்கண்டு கொண்டாள். குப்பி விளக்கை ஏற்றிவிட்டு மளமளவென பீங்கான்களில் சோறுபோட்டாள்.

வீட்டினுள் நுழைந்த போராளிகள், சோற்றைப் போட்டு வைத்துவிட்டு பலகைத்துண்டில் குந்தியிருக்கும் அக்காவை இமைக்க மறந்து சிலகணம் நோக்கினர்.

"நாங்கள் வருவமெண்டு எப்படித் தெரியுமக்கா?" எனப் பொறுப்பாளர் கேள்வியொன்றைப் போட்டுவைத்தார்.

"எப்படியும் ஓடி ஒழிச்சுப் பசியோட ஆராவது வந்து சேருவியளெண்டு எனக்குத் தெரியும்; இது எனக்குப் புதிசில்லையே" அக்கா பதில் கொடுத்தாள்.

மேஜர் கணேசின் காலத்திலிருந்து சோறு போடும் குடிசை.... வறுமையின் கோடுகள பதிந்த அந்தக்கரங்கள்..... தேசத்தின் சொத்துக்களுக்கு சோறு போட்டதைத்தான் அந்தக் கரமும் குடிசையும் அறியும்.

சாப்பாடு முடிந்ததும் இரகசிய வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகின. இந்திய இராணுவ அணிக்கு நிலக்கண்ணி புதைக்கவேண்டும். பாதுகாப்பானதும், இரகசியமானதுமான இடம் வேண்டும். ஆலோசனை முடிவின்றி நீண்டது. விடிவதற்கு முன் கண்ணி நட்டாக வேண்டும்.

"எங்கட கடைக்கு முன்னால வைப்பம்; ஒருதருமே சந்தேகிக்க மாட்டார்கள்." அக்காவின் உறுதியான முடிவு...... எல்லோரும் வாயில் கைவைத்தனர். முடிவு....? அக்கா சொன்ன முடிவே இறுதியானது.

பெட்டிக்கடையின் கதை நாளை முடியப்போகிறது. அதற்காக குலமண்ணனோ அக்காவோ சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்திய ஓநாய்களை அழிக்கவேண்டுமென்ற வன்மமே அவர்களிடம் ஓங்கிநின்றது.

காலை விடிந்தது. வழமை போல கடையில் வியாபாரத்தைத் தொடங்கியிருந்தாள் அக்கா. துறைக்கரையில் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஓடத்தில் ஏறி அமர்ந்தார் குலமண்ணன். பதட்டமற்ற வழமையான நிகழ்வு...... யாருக்கும் இருக்கமுடியாத உறுதி..... தியாகத்தின் எல்லை...

இந்திய ரோந்துப் பவனி....... அக்காவின் மனது மெல்ல அடிக்கத் தொடங்கியது. வாகனங்கள் அண்மித்துவிட்டன.

இதோ..... டுமீல்..... வாகனங்கள் சிதறின. வாகனத்தில் இருந்த ஜவான்கள்.....?

குலமண்ணனின் ஓடம் வெற்றிச் சுமையோடு மறுகரை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

அன்றைய இரவு..... இரவின் அமைதி.... அக்காவின் மனது ஏனோ என்றுமில்லாதவாறு குழம்பிக் கொண்டிருந்தது. தேச விரோதக் கும்பல்கள் தன் கணவனை சுட அலைந்து திரிவது, இந்தியப்படை வந்து, ஒப்புக்கு நடத்திய தேர்தலில் வாக்குச்சீட்டுப் போட தன் கணவனை இழுத்துச் சென்றது..... எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாக மனதில் எழுந்து நின்றன.

இதயத்தில் கத்திவைத்த அந்த இரவு கொடுமையானதுதான். ஆற்றின் மெல்லிய திரைகள் சாம்பரை அள்ளி அலைத்துக்கொண்டிருந்தன. அப்படியாயின் துறைக்கரை ஓடம்.....? கால்வேறு கைவேறாய்...... ஆம். குலமண்ணன்தான். ஈழப்பயணத்தின் ஓடங்கள்......

இந்த ஓடங்கள் தாம் இன்று ஈழப்போரின் உறுதியாய்..... உரமாய்..... உறைவிடமாய்.....

✱✱✱

**தமிழீழத்தில், 1995ம் ஆண்டுக்கான விடுமுறை நாட்களை தமிழீழ நிர்வாகசபை அறிவித்துள்து. ஏனையவை வலுவிழந்ததாகவே கருதப்படும்.**


| | |
|---|---|
| தைப்பொங்கல் | - ஜனவரி 15 ஞாயிறு |
| மகாசிவராத்திரி | - பெப்ரவரி 27 ஞாயிறு |
| றம்ழான் | - மார்ச் 03 வெள்ளி |
| பெரிய வெள்ளி | - ஏப்ரல் 14 வெள்ளி |
| புதுவருடப்பிறப்பு | - ஏப்ரல் 14 வெள்ளி |
| சித்திரா பௌர்ணமி | - ஏப்ரல் 15 சனி |
| அன்னை பூபதி நினைவு நாள் | - ஏப்ரல் 19 புதன் |
| மேதினம் | - மே 01 திங்கள் |
| ஹஜ்ஜுப் பெருநாள் | - மே 10 புதன் |
| விசேட வங்கி விடுமுறை | - யூன் 30 வெள்ளி |
| கரும்புலிகள் நாள் | - யூலை 05 புதன் |
| ஆடி அமாவாசை | - யூலை 27 வியாழன் |
| தியாகி திலீபன் நினைவுநாள் | - செப்டம்பர் 26 செவ்வாய் |
| மாலதி நினைவு தினம் | - ஒக்டோபர் 10 செவ்வாய் |
| தீபாவளி | - நவம்பர் 06 திங்கள் |
| மாவீரர்நாள் | - நவம்பர் 27 திங்கள் |
| நத்தார் | - டிசம்பர் 25 திங்கள் |
| விசேட வங்கி விடுமுறை | - டிசம்பர் 31 ஞாயிறு |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

**தமிழீழத்தின் சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் நோக்குடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. சிறிலங்கா அரசின் இனவாத கெடுபிடியையும் திட்டமிட்ட அதன் பொருளாதாரத் தடையையும் வென்று வரும் தமிழீழ மக்களுக்கு உறுதுணையாக நிற்கின்றது இந் நிறுவனம்.**




நாட்டைக் கட்டியெழுப்ப எம்முடன் இணையுங்கள்

நெருக்கடியான காலகட்டத்தில் வாழும் மக்களை நேரில் சந்திப்பது, அவர்கள் குறைகளை அறிவது, தீர்வை நோக்கி செயற்படுவது, திடனையும் நம்பிக்கையையும் அளிப்பது - இவ்வாறு அவர்களை ஊக்கப்படுத்தி உற்பத்திப் போரில் கணிசமான வெற்றியை ஈட்டியது; ஈட்டிவருகிறது.

தமிழீழத்தின் இயற்கை வளங்களை சரியாக இனம் கண்டு அவற்றை மக்களுக்கு தெளிவுறுத்தி வருகிறது.

## கட்டி எழுப்பப்படும் சுய பொருளாதாரம்

தமிழீழ விவசாயிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் உள்ளீடுகள் பங்கிடு செய்யப்பட வேண்டும்; மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகள், கடன் வசதிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் எனும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே கமக்காரர் அறிமுக அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம்



மேதின ஊர்வலத்தின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அணிவகுத்துச் செல்லும் காட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாயிகளை இனங்கண்டு ஒழுங்கமைத்து, ஊக்குவிப்புக்களை வழங்குவதனால் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி ஏற்படுகின்றது.

இக்கமக்கார அறிமுக அட்டைச் செயற்பாட்டினை முன்பு கமநல சேவை நிலையம் வழங்கி வந்தது. ஆனால் அவர்கள் நெற் செய்கை மேற்கொள்ளும் காணிச் சொந்தக்காரருக்கே இதனை வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் இச்செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழத்திற்கு தேவையான நெற்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு போன்றவற்றின் உற்பத்திகளை பெருக்கும் பொருட்டு, இவ்வுற்பத்தியாளர்களுக்கும் கமக்கார அறிமுக அட்டையினை வழங்கி வருகின்றது.

இக்கமக்கார அறிமுக அட்டையினை வழங்கி உள்ளீடுகளைப் பங்கீடு செய்து, நிறுவன சேவைகள், கடன் வசதிகளை ஒருங்கிணைத்து, தமிழீழ உற்பத்திகளை ஒழுங்கமைக்கும் செயற்பாடானது தற்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால், வடதமிழீழம் முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

1994 சித்திரை முடிவுவரை யாழ். மாவட்டத்தில் மட்டும் 25,662 விவசாயிகளுக்கு கமக்கார அறிமுக அட்டை வழங்கப்பட்டது. இத்தொகையானது இன்று ஏறத்தாழ 27,000ஐ எட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தடைகளைத் தகர்க்கும் கடின உழைப்பு

மே தினம் ஆனது உலகின் பல நாடுகளிலும் உழைக்கும் கரங்களைக் கொண்ட தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்த நாளாகக் கொண்டாடப்படுகின்றது. இருந்த போதிலும், உண்மையில் இந்நாடுகளில் எந்தளவுக்கு தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்துள்ளார்கள்; எந்தளவிற்கு அவர்கள் மதிக்கப்படுகின்றார்கள் என்பது, கேள்விக் குறியே! காலப்போக்கில் இத்தினம் சம்பிரதாயபூர்வமாக உருவெடுத்துள்ளது.

ஆனால், எமது தமிழீழம், இதனை உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்படுவதன் நோக்கத்தினை நிறைவேற்றுவதில் முனைந்து வருகின்றது.

இத்தினத்தின் நோக்கமென்ன? சொந்த மண்ணில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தின்



எங்களின் கடலில்....

தேசப் பெருவெளியில் வண்டிச்சவாரி செய்யும் பொழுதுகள்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உயர்ச்சிக்கென விவசாயத்துறை, கைத்தொழில்துறை, கடற்றொழில் துறை எனப் பல துறைகளிலும் தமது உதிரத்தை வியர்வையாக்கி தமக்கும் தமது மண்ணுக்கும் பெருமை தேடிக்கொள்பவர்கள் தொழிலாளிகள். உண்மையும், சத்தியத்தையும், தர்மத்தையும் எமது பக்கத்தில் வைத்து தமிழீழத்திற்காகப் போராடும் நாமும் இவ்வாறான உழைப்பின் உன்னதத்தை உணர்ந்து கொண்டும் அதனைப் புறக்கணிப் போமானால் எமது போராட்டம் அர்த்தமே இல்லாதாகிவிடும்.

எனவே, இவ்வுழைக்கும் மக்களை சிறந்த முறையில் கௌரவித்து உற்பத்தியினை மேலும் கூட்டும் வகையில் அவர்களது திறமையினை வளர்க்குமுகமாக, உற்சாகம் ஊட்டி ஊக்குவிக்குமுகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தின் முயற்சியில் பிரசவித்ததே இந்த உற்பத்தி எழுச்சி வாரப் போட் டிகள் ஆகும்.

விசேடமாக, எமது தமிழ் மக்கள் கொடும் வெயிலின் மத்தியிலும் வரண்ட பூமியைப் பண்படுத்தி கிணற்று நீரையே நம்பி பொன் விளைவிப்பதில் கடின உழைப்பிற்கு ஈடிணையற்றவர்கள் என்னும் பெயர் பெற்றவர்கள்.

சிறிலங்கா அரசு பொருளா தாரத் தடையினால் எரிபொருள், விதைகள், உரம், மருந்துகள் போன்ற முக்கிய பொருட்களினை உழைப்பா ளிகளிடம் சென்றடையாமல் தடுத்து, அவர்களின் உழைப்பையும் உற்சாகத்தையும் வருவாயையும் கெடுக்கின்றது.மேலும் அவர்களுக்கு உளரீதியாகவும் ஆத்மரீதியாகவும் மறைமுகமாக விலங்கினை இட முயற்சிக்கிறது. இவ்விலங்கினை எவ்வாறு உடைத்து எறியலாம் என்பதற்கு எமது போராட்டமே ஒரு சான்று.


எனவே, இந்த விலங்கினை உடைத்தெறியும் முகமாக எமது பாரம்பரிய தொழிற்திறன்களை உட்கொணர்ந்து எல்லா வயதின ரையும் ஈடுபடுத்தும் இந்த நிகழ்ச் சியே உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியாகும்.

இந்நிகழ்ச்சி இரண்டாம் ஈழப் போர் தொடங்கிய ஆண்டான 1990ஆம் ஆண்டில் இருந்து ஒவ் வொரு வருடமும் நடைபெறுகிறது.

கைத்தொழில், கடற்றொழில், விவசாயம், விலங்கு வேளாண்மை, பனை தென்னை வளம், உட்கட்டு மானம், தொழில்நுட்பம், மாற்று சக்திப் பயன்பாடு, உணவுபதனிடல் என அனைத்து துறைகளுக்குமான போட்டிகள் வடதமிழீழத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வட்ட, மாவட்ட, கோட்ட மட்டத் தில் நடாத்தி வெற்றியீட்டுபவர்க ளுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் பல்வேறு பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கி கௌர வித்து வருகின்றனர். மேலும் சான்றி தழ்களையும் வழங்கி வருகின்றனர்.

இச்சான்றிதழ்கள் வைத்திருப்ப வர்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற முயலும் வேளையில் முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

தமிழீழ மாவட்டங்களில், நீச்சல் போட்டி, பாய் மரம் ஓட்டுதல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், கயிறு புணைதல், துலா மிதித்தல், உழுதல், மாட்டு வண்டிச்சவாரி, நிலம் கொத்துதல், புதிய உணவு வகை தயாரித்தல், பனை மரம்




ஏறுதல், கைப்பணி (குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல்), தும்புக்கட்டை செய்தல், விளக்குமாறு கட்டுதல், பதனீர் உற்பத்தி, பொது அறிவுப்போட்டி, நல்லின ஆடு, மாடு வளர்த்தல் போன்ற போட்டிகள் நடாத்தப் பட்டு வருகின்றன.

இந்தப் போட்டிகள் புகைப்படங் களாகவும், வீடியோ படங்களாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்போட்டி களில் ஈடுபடும் மக்களின் எண் ணிக்கை வருடாவருடம் அதிகரித்து வருகின்றது. இப்போட்டிகளினை மக்களிடையே தெரிவிப்பதற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுவரொட்டிகளையும் தயாரித்து வெளியிட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடவுளின் மரணம்

அவர் ஒரு வித்தியாசமான மனிதர். அவர் வித்தியாசமாகச் சிந்தித்தார். வித்தியாசமாக எழுதினார். அவரது எழுத்து எல்லோரையுமே அதிர வைத்தது.

காலம் காலமாக மனிதன் கண்டுவந்த கனவுகளையும், கட்டி எழுப்பிய நம்பிக்கைக் கோட்டைகளையும், அறமாக வரித்துக்கொண்ட நெறிகளையும், மனித விழுமியங்களாக போற்றி வந்த உன்னதங்களையும் - எல்லாவற்றையுமே, ஈவிரக்கமின்றிச் சாடினார். எல்லாமே அபத்தம் என எள்ளி நகையாடினார்.

'அன்பு என்பது ஒரு பெரிய பொய். பயத்தில் பிறக்கும் கோழைத்தனமே அன்பு எனப்படுகிறது.'

'நீ பலவானாக இருந்தால் மற்றவனை நேசிக்கமாட்டாய். நீ பலவீனனாக, கோழையாக இருக்கும் போதே மற்றவனை நேசிக்கிறாய்.'

'கிறிஸ்தவமும், பௌத்தமும், அன்புமார்க்கத்தைப் போதித்து அடிமைவாதத்தை வளர்த்துவிட்டுள்ளன.'

'பௌத்தம் ஒரு சூன்யவாதம். வெறுமையையும், விரக்தியையும் விதைத்து வருகிறது.'

'கிறிஸ்தவம் ஒரு அடிமைவாதம். இரண்டாயாயிரம் ஆண்டுகளாக, மனிதனின் ஆன்மாவை, அது சிலுவையில் அறைந்து வைத்திருக்கிறது.'

'மனிதன் ஒரு மிருகம். அவனை ஒரு தெய்வமாக மாற்றமுனைகிறது மதம்.'

'மிருகத்தனத்தில் ஒரு இயல்பான அழகு இருக்கிறது. ஆக்ரோஷம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. கொடூரம் இருக்கிறது. மனிதமிருகத்தின் இந்தச் சிறப்பான பண்புகளைச் சிதைத்துவிட்டு, பணிவையும், சாந்தத்தையும், கோழைத்தனத்தையும் போதிக்கும் அறநெறித் தத்துவங்களை அழித்தொழிக்க வேண்டும்.'

'எதிர்காலம் மகா மனிதனுக்கு (SUPER MAN) உரியது. அவன் எதற்கும் துணிந்தவனாகவும், வீரனாகவும் இருப்பான். அவனிடம் அன்பும், அறமும், காருண்ணியமும் அறவே இருக்கமாட்டாது. அவன் ஈவிரக்கம் அற்றவனாக இருப்பான். பலவீனர்களையும், கோழைகளையும், முட்டாள்களையும் சகித்துக்கொள்ள மாட்டான். அவர்களை அழித்தொழிக்கவும் தயங்கமாட்டான். இந்த மகாமனிதர்களின் ஆட்சியில் தான் மானிடம் முன்னேற முடியும்.'

இப்படி எல்லாம் அவர் எழுதினார்.

அவரை ஒரு பைத்தியக்காரன் என்றார்கள். மனித குலத்தின் விரோதி என்றார்கள். கடவுளைக் கொலைசெய்த மகாபாவி என்றார்கள்.

அவரது எழுத்துக்கள், சாத்தானின் சிந்தனைகள் என இழிவுபடுத்தப்பட்டன. அவர் மனம் முறிந்து இறந்து போனார். ஆனால் அவரது சிந்தனைகள் செத்துவிடவில்லை. நாசிசவாதிகளிலிருந்து இருப்பியல் வாதிகள்வரை பலர் அவரைத் தமது ஆதர்ஷ குருவாக வரித்துக் கொண்டனர்.

யார் இந்த மனிதர்?

அவர்தான் நீச்சே (NIETZSCHE) ஜேர்மனிய அறிஞர். தத்துவப் பேராசிரியர். 1844ம் ஆண்டு பிறந்தார். 1900 ல் மடிந்தார். சாராம்சத்தில் அவரது தத்துவார்த்த எழுத்துக்கள் மானிடத்திற்கு ஒரு உண்மையை இடித்துரைக்க விரும்புகிறது. ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறது. அந்தச் செய்திதான் என்ன?

**பிரம்மஞானி**

மனிதன் நம்பிக்கைகளை மூட்டை கட்டி, தாங்கொணாப் பளுவாக, தனது சக்திக்கு மிஞ்சிய சுமையாக, சுமந்து செல்கிறான். சதா பொய்களைப் புசித்து போலி வாழ்க்கை வாழ்கிறான். இல்லாததொன்றைத் தேடி அலைகிறான். அர்த்தமற்ற வாழ்வில் அர்த்தம் இருப்பதாக எண்ணுகிறான்.

அவன் சதா தேடி அலையும் அது, அவன் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் அது, அவனது வாழ்வுக்கே அர்த்தம் கொடுக்கும் அந்த மாயப் பொருள், அவனைப்படைத்துக் காத்து வருவதாக அவன் கற்பிதம் பண்ணும் அந்தக் கடவுள் எப்பொழுதோ செத்துவிட்டார். இந்த இழவுச் செய்தியையே மனிதர் குலத்திற்கு பறையறைந்து சொல்ல விரும்புகிறார் நீச்சே.

THUS SPAKE ZARATHUSTRA என்ற அவரது நூலொன்றில் வரும் கீழ்க்கண்ட பந்திகள் இந்தச் செய்தியை இலக்கியச்சுவையோடு சொல்லுகின்றன.

"சாரதுஷ்ரனுக்கு முப்பது வயதானதும், துறவற வாழ்வைத் தழுவிக் கொள்கிறான். வீடு துறந்து காடு செல்கிறான். பத்தாண்டுகாலம் கடும் தவம் இருக்கிறான். தனிமையில், அமைதியில் ஆன்மீகத் தேடலை நடத்தி முடிக்கிறான். ஞானோதயம் பெறுகிறான்.

அன்று காலை, என்றும் இல்லாதவாறு அவனது மனதில் ஒரு புத்துணர்வு. மனித குலம்மீது மனம் திரும்பியது. அந்த இருண்ட குகையை விட்டு வெளியே வந்தான். உதயசூரியன் அவனை வரவேற்றது.

'கதிரவனே, உனது ஒளியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழரும் உலக நடைமுறையும்

திங்கள், நாட்கள் ஆகியவற்றிற்கான தமிழ்ப் பெயர்களைப் பயன்படுத்தலாமா என்ற கேள்வி தொடர்ந்து இருந்து கொண்டே வருகின்றது. நாள், கோள்களை உலகில் முதன் முதல் வகுத்தவர் தமிழரே என்று அறியப்பட்டபோதிலும், தற்போது, தமிழராகிய நாங்களும், உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ள "கலண்டரை"த்தான் பொதுவாகக் கடைப்பிடிக்கின்றோம். நாட்களைக் கணிக்கும் விடயத்தில் தமிழர் நடைமுறையும், உலக நடைமுறையும் வேறானவையாகவே உள்ளன. உதாரணமாக, ஜனவரி ஒன்று என்ற நாளை சுறவம் ஒன்று என்று கூறமுடியாது. ஜனவரி 14ம் நாளே, சுறவம் ஒன்றாக இருக்கும். மாவீரர்நாளை நளி 27 என்று கூறமுடியாது. அப்படிக் கூறினால், நடைமுறையில் டிசம்பர் மாதத்திலேயே மாவீரர்நாள் வரும். எனவே தான் மாவீரர்நாள் நவம்பர் 27 என்றும், கரும்புலிகள் நாள் யூலை 5 என்றும் குறிப்பிடுகிறோம். எனவேதான், உலக நடைமுறைக்கு மாறாக, தமிழ் திங்கள், நாள் கணிப்புக்களையோ, பெயர்களையோ பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளோம்.

ஆசிரியர் குழு.

---

உயிர் வாழும் உலகத்தோர் இல்லாது ஒழிந்து போனால் உனக்கு மகிழ்வும் இல்லை, மகிமையும் இல்லை. பத்தாண்டுகாலமாக, தினமும் எனது குகை வாசல் வந்து போகிறாய். உன்னை ஆவலுடன் தரிசித்துவரும் நானும், இந்த வனவிலங்குகளும் இல்லாது போனால், வெளிச்சத்தைக் கொடையாக வழங்கும் உனது பணியும் முடிவில்லாத, சலிப்பில்லாத உனது பயணமும் அர்த்தமற்றுப் போய் விடும்.

'தேவைக்கு அதிகமாக தேனைச் சேமித்து சலித்துப்போன ஒரு தேனீ போன்று ஞானத்தின் பழுவை நான் சுமந்து நிற்கிறேன். நான் சேமித்து வைத்திருக்கும் ஞானத்தேனை உலகத்தாருக்கு பகிர்ந்தளிக்க விரும்புகிறேன். மனதர்களிடம் சென்று நான் மீண்டும் மனிதனாக வாழ விரும்புகிறேன்.'

இந்தப் பிரதிக்ஞையுடன் சாரதுஷ்டன் தனது வனவாசத்தை முடித்துக்கொண்டான். மலையில் இருந்து இறங்கி கிராமம் நோக்கி நடந்தான். மலையடி வாரத்தில் காட்டு வழியே சென்றுகொண்டிருந்த போது அந்த வயோதிப முனிவனைச் சந்தித்தான். அந்தத் துறவி சாரதுஷ்டனை இனம் கண்டு கொண்டான்.

'சாரதுஷ்டா, நீ தனிமையில் வாழ்ந்து தவம் இருந்து, ஞானோதயம் பெற்றுள்ளாய். விழிப்பு நிலையை அடைந்து விட்டாய். மனிதர்களோ சதா தூக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களிடம் உனக்கு என்ன வேண்டியிருக்கிறது.' என்று கேட்டார் அந்தத்துறவி.

'நான் மனிதகுலத்தை நேசிக்கிறேன்.' என்றான் சாரதுஷ்டன்.

'மனிதகுலம் மீது அளவுகடந்த பாசம் கொண்டதால் அல்லவா நான் வனவாசம் சென்றேன். நான் இப்பொழுது கடவுளை நேசிக்கிறேன். மனித சமூகத்தை அல்ல. மனிதன் தூய்மை அற்றவன். முழுமையற்றவன். மனித குலம்மீது அன்பு செலுத்தினால் அது என்னை அழித்துவிடும்.' என்றார் முனிவர்.

'நான் மனித குலத்திற்கு ஒரு நன்கொடையைக் கொண்டு செல்கிறேன்.' என்று பதிலளித்தான் சாரதுஷ்டன்.

'மனிதர்களுக்கு எதையும் கொடுத்துவிடாதே. வேண்டும் என்றால் அவர்களிடம் இருந்து எதையாவது பிடுங்கிக்கொள். மனிதர்கள் துறவிகளை சந்தேகக்கண்ணுடன் பார்க்கிறார்கள்.

நாம் கொடுக்கவந்துள்ளோம் என்றால் நம்பமாட்டார்கள். வீதி வழியே, தனிமையில், எமது காலடியோசை இரவின் மௌனத்தைக் கலைக்கும் பொழுது, படுக்கையிலிருந்து அதை உற்றுக்கேட்கும் மனிதர்கள் எவ்வாறு எண்ணுவார்கள் தெரியுமா? இந்தத் திருடன் எங்கே போகிறான் என்று. ஆகவே, சாரதுஷ்டா, இந்த கெட்ட மனிதர்களைத் தேடிப்போகாதே, இந்தக் காட்டில் தங்கியிரு. மனிதர்களைவிட இந்தக் காட்டு மிருகங்கள் மேலானவை. மிருகங்களை நாடிப்போ. என்னைப்போல உன்னால் சீவிக்க முடியாதா?. மிருகங்களில் ஒரு மிருகமாக, பறவைகளில் ஒரு பறவையாக.' என்றார் துறவி.

'முனிவரே இந்தக் காட்டில் இத்தனை காலமும் என்ன செய்து வருகிறீர்கள்?'

'நான் பாட்டுக்கள் இயற்றுவேன்; பாடுவேன். நான் பாட்டுக்கள் புனையும் போதும் பாடும் போதும், சிரிப்பேன், அழுவேன் எனக்குள் சும்மா முணு முணுப்பேன். இவ்வாறு, நான் கடவுளை துதி பாடுகிறேன். நான் கடவுளைக் காதலிப்பவன். எனது பாட்டில், சிரிப்பில், அழுகையில், முணு முணுப்பில் - எல்லாவற்றிலும், நான் கடவுளைத் தரிசிக்கிறேன், வணங்குகிறேன். அது இருக்கட்டும், எமக்காக, மனிதர்களுக்காக என்ன நன்கொடை கொண்டு வந்திருக்கிறாய்?' என்று கேட்டார் அந்த முனிவர்.

'நான் உங்களுக்கு எதையும் கொடுக்கவும் வரவில்லை. உங்களிடம் இருந்து எதையும் பெற்றுக்

கொள்ளவும் விரும்பவில்லை.' என்று கூறிவிட்டு அங்கிருந்து விரைந்தான் சாரதுஷ்டன்.

அவன் தனிமையில் செல்லும் பொழுது தனக்குள் வருத்தப்பட்டுக் கொண்டான். 'இந்த வயோதிப முனி இன்னும் கேள்விப் படவில்லைப் போலும், கடவுள் இறந்து விட்டார் என்பதை.'

கடவுள் மரணித்து விட்ட செய்தியையே மனித குலத்திற்கு நன்கொடையாக எடுத்துச் சென்றான் சாரதுஷ்டன்.

மேற்குலக தத்துவ தரிசனத்தில் நாத்திகவாதம் புதிதான, புரட்சிகரமான கருத்தோட்டம் அல்ல. கடவுள் கோட்பாட்டை மறுதலித்து எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள். கிரேக்க பொருளியல் வாதிகளிலிருந்து, போயர் பாக், கார்ல் மார்க்ஸ் வரை, நீண்ட வரிசையில், காலத்திற்கு காலம் எத்தனையோ சிந்தனையாளர்கள் கடவுள் கோட்பாட்டை தகர்த்து விட முனைந்திருக்கிறார்கள்.

www.tamilarangam.net

அப்படி இருக்கும் பொழுது நீச்சேயின் நாத்திகம் ஏன் இத்தனை பிரபல்யம் பெற்றது? கடவுள் இறந்து விட்டார் என அவர் விடுத்த பிரகடனம் ஏன் இத்தனை சிலு சிலுப்பை ஏற்படுத்தியது?

கடவுளின் மரணத்துடன் மனித இருப்பு அர்த்தத்தை இழக்கிறது. மனித வாழ்வு அபத்தமாக மாறுகிறது. மனித நம்பிக்கைத் தூண்கள் இடிந்து போகின்றன. இருப்பின் மறுபக்கமான இல்லாமை தவிர்க்க முடியாத பேருண்மையாக விஸ்வரூப பரிமாணம் கொள்கிறது. ஏன், எப்படி, எதற்காக என்ற காரண காரியங்கள் அர்த்தமற்று வலுவிழந்து போக மனித வாழ்வில் இருள் சூழ்ந்துகொள்கிறது. முடிவில்லாப் பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையில் நின்றபடி, மானிட இனம் பாதை தெரியாது தடுமாறுகிறது. தனித்துப் போய்நிற்கிறது. நிச்சயமானது ஒன்றாக இல்லாமையே இருப்புக் கொள்கிறது.

நீச்சேயின் நாத்திகம் கடவுளின் மரண சாசனத்தை மட்டும் எழுதி விடவில்லை. கடவுள் இல்லாத உலகில், மனித இருப்பின் அவலமான, நிலை அற்ற தன்மைபற்றியும் எடுத்துக் கூறுகிறது. கடவுளின் சாவுடன் மனிதனின் கனவுகளும் செத்துப் போய்விடுகிறது என்ற கோரமான உண்மையையும் அது எடுத்து இயம்புகிறது.

அனந்த காலமாக, அனைத்திற்கும் அதுவே அர்த்தம் கொடுத்தது. இருப்பிற்கும் அதுவே இலக்கணம் வகுத்தது. வாழ்விற்கும் அதுவே விளக்காக இருந்தது.

அதன் நிழலில், மனிதன் நிம்மதியாக உறங்கினான். அதன் நினைவில், தனது சோகத்தைத் துடைத்துக் கொண்டான். அவனது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் அதுவே ஆட்கொண்டு நின்றது. அந்தக் கடவுளின் குழந்தையாக மனிதன் தன்னைக் கற்பித்துக் கொண்டான்.

அந்தக் கடவுள் இப்பொழுது இறந்து விட்டார். நிரந்தரமாகவே சூரியன் அஸ்தமித்து விட்டது.

கடவுளின் இறப்பிற்கு காரண கர்த்தா யார்? படைத்தவனை அழித்தவன் யார்? அது மனிதன் தான் என்கிறார் நீச்சே.

'காலைவேளை, சூரியன் சுடர் விட்டு பிரகாசித்துக் கொணடிருந்த அந்த நேரத்தில், பைத்தியக்காரன் ஒருவன் கையில் விளக்கை ஏந்திய வண்ணம் சந்தை கூடும் அந்த இடத்திற்கு ஓடிவருகிறான். அங்கிருந்த மக்களைப் பார்த்து, 'நான் கடவுளைத் தேடியலைகிறேன். நான் கடவுளைத் தேடியலைகிறேன்.' என்ற உரத்த குரலில் கத்தினான்.

'கடவுள் எங்கே இருக்கிறார்? உங்களுக்குத் தெரியாதா? நான் சொல்கிறேன், அவர் எங்கே இருக்கிறார் என்று. நீங்கள் கடவுளைக் கொலைசெய்து விட்டீர்கள். நீங்களும் நானுமாகச் சேர்ந்து கொலைசெய்து விட்டோம். நாம் எல்லோருமே கொலைகாரர்கள். அந்தப் பெரும் கடலை எல்லையற்ற சமுத்திரத்தை நாம் எவ்வாறு குடித்துமுடித்தோம்? அந்தப்பிரகாச

## மாலதி நினைவு விழா

**22-10-94 அன்று சுவிட்சர்லாந்தில் கன்ரோன் வலே (CANTON VALAI) மாநிலத்தில் உள்ள சியோன் (SION) என்னும் இடத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களப்பலியான 2ம் லெப். மாலதியின் 7ம் ஆண்டு ஞாபகார்த்த எழுச்சி விழா நடைபெற்றது. இவ்விழாவின் ஆரம்பநிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை சுவிஸ் பிரதிநிதி நடராஜா முரளிதரன் அவர்கள் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலியும், ஈகைச்சுடர் ஏற்றலும், மலர் அஞ்சலியும் நடைபெற்றன.**

**தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினர் வழங்கிய 'போர்க்காலராகங்கள்' என்னும் இசை நிகழ்ச்சி நடந்தது. இதனைத்தொடர்ந்து "மாலதியின் நினைவுத் துளிகள்" என்னும் தலைப்பில் கவிதையும், "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாதரின் பங்கு" என்ற தலைப்பில் பேச்சும் இடம் பெற்றன.**

**மேலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் பாடல்களுக்கு எழுச்சி நடனங்களும், "காலத்தை வென்ற காவியச்சுடர்கள்" எனும் தலைப்பில் பேச்சும், "பள்ளி எழுச்சி" என்ற நாடகமும் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பிரதிநிதி சிறப்புரை ஆற்றினார். "புதிய சிறகுகள் விரியட்டுமே" என்ற தலைப்பின் கீழ் கவியரங்கமும் நிகழ்ந்தது. புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் என்ற பாடலை விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரும் சேர்ந்து பாடினர். விழா இனிதே நிறைவு பெற்றது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான அடிவானத்தை எதைத் கொண்டு அழித்துவிட்டோம்? சூரியனில் இருந்து இந்தப்பூமியை நாம் கட்டவிழ்த்து விட்டது எப்படி? இந்தப்பூமி இப்பொழுது எங்கே அசைந்து செல்கிறது? சூரியனிலிருந்து அறுபட்ட இந்தப் பூமியானது அதளபாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கிறது. அது வழி தெரியாது எல்லாத்திசைக ளிலும் சுழல்கிறது. நாம் முடிவில் லாத சூன்யவெளியில் புகைந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பூமியை ஒரு பயங்கர இருள் கவ்விக் கொள்வதை நீங்கள் கண்டுகொள்ள வில்லையா? இனிப் பகல் இல்லாது ஒழிந்துபோகும். மாறி, மாறி தொடர்ச்சியாக இருள்தான் நிலைத்துவிடப்போகிறது. இனிமேல் காலையில்தான் விளக்கேற்ற வேண் டும். கடவுளின் பிணத்தை இப் போது புதைத்துக்கொண்டு இருக்கி றார்கள். அந்தச் சவக்குழியைத் தோண்டுபவர்களின் சத்தம் உங்க ளுக்கு கேட்கவில்லையா? கடவுளின் பிணம் அழுகி துர்நாற்றம் எடுக் கிறது, அந்த வாடை உங்களுக்கு மணக்கவில்லையா? கடவுள் இறந்து விட்டார். நிச்சயமாக செத்துப்போ னார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவரைக் கொன்றுவிட்டோம். இந்தக்கொலையை புரிந்துவிட்டு நாம் எவ்விதம் நிம்மதியாக வாழ முடியும். எல்லாம் வல்ல புனிதத்தில் புனிதமான அது, எமது கத்திக ளுக்குப் பலியாகிச் செத்துப்போனது. இந்த இரத்தக்கறையை யார் எம்மிடமிருந்து துடைக்கப்போகி றார்கள்? எமது பாவக் கதையை எந்தப் புனிதநீரில் நாம் கழுவிக் கொள்வது? எவ்விதமான புனிதச் சடங்குகளை நிகழ்த்தி நாம் இந்தச் சாபக்கேட்டிலிருந்து தப்பிக்கொள் வது?'

அங்கத பாணியில், குறியீட்டு உத்தியில் எதைச் சொல்ல விழை கிறார் நீச்சே.

மேற்குலக மனிதன் கடவுளை இழந்து நிற்கிறான். கடவுளிலிருந்து அந்நியமாகி நிற்கிறான். கடவுள் கோட்பாட்டில் கட்டப்பட்ட கருத் துலகிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். வளர்ந்து வரும் விஞ்ஞானமும், அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் அவனை ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச்செல்கிறது. இந்தப் புதியயுகத்தில் அவனது பழைய கனவுகள் மடிந்து போகின்றன. அந்தக் கனவுகளில் ஒன்றான கடவு ளும் மடிந்து போகிறார். கடவுளின் மரபில் வந்த அறநெறிகளும் மடிந்து போகின்றன.

கடவுள் இல்லாத உலகில், மனிதனின் இராட்சியம் எப்படி அமையும்? அன்பும், அறமும், கருணையும் அற்ற நீச்சேயின் மகாமனிதர்கள் மனிதகுலத்தை எந்தப் பாதையில் இட்டுச் செல் வார்கள்?

ஹிட்லர் நீச்சேயின் எழுத்துக் களை மிகவும் விரும்பிப் படித்தார். பல தடைவைகள் திரும்பத் திரும் பப் படித்தார். நீச்சே கண்ட கனவின் திருவுருவமாக, மகாமனி தனாக தன்னை எண்ணிக் கொண்டார். அந்த மகாமனிதனாக செயலிலும் இறங்கினார்.

ஹிட்லரின் இராட்சியம் எப்படி எழுந்தது? எப்படி வீழ்ந்தது? அந்த வரலாற்றுப் பூகம்பம் எத்தகைய பேரழிவை மனித குலத்திற்கு ஏற்படுத்தியது? என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் நீச்சே காட்டும் பாதையில், மனிதநேயம் செத்துக்கிடக்கும் அந்த இருண்ட பாதையில் காலடி எடுத்து வைக்கமாட்டார்கள்.



அப்பாவின் வாழ்நாள் உழைப்பு அந்த வீடுதான். எங்கள் குடும்பத்தின் வாழ்க்கையும் அதுதான்.

ஒவ்வொரு பொருளையும் சிறுகச் சிறுகச் சேர்த்திருந்தோம். வீட்டையும், வளவையும் எப்பவும் கூட்டி, குளிப்பாட்டி, மெருகூட்டி, பொட்டிட்ட மாதிரித்தான் அக்கா அதனைக் கவனித்தாள். பண்டிகைகள், நோன்புகள் என்று வரும்பொழுதெல்லாம் அதன் பராமரிப்பு வேறு. எங்கள் குடும்பத்தின் ஐதீகங்களுடன் அது நெருங்கித் தோழமை கொண்டிருந்தது. அது வெயிலில் வெந்து போகாமல் நிழல் மரங்கள்-அதன் அழகுக்குப் பூமரங்கள். மெருகேறும் பூச்சு.... உள்வீட்டில் ஒவ்வொன்றும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில்.... அது ரசிப்பதற்கென்று இசைப்பது மாதிரி இரவில் சங்கீதம்.

குண்டுவீச்சில் அது அழிந்தபோது புகை மண்டலமும், கற்குவியலும் பொருள்களின் உடைவுமாய் கிடக்கும் வீடு.....

'வனவாசத்தில்' எனும் சிறுகதையில் இருந்து...

www.tamilarangam.net

தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியிலும் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பியல் நிறைந்த வாழ்வினை கூறும் இந்நூலில் இருந்து எரிமலை வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளும் நோக்கில் இக்கட்டுரையை மறு பிரசுரம் செய்கிறோம்.

# தமிழ்நாடு: வந்தேறிகளின் வேட்டைக்காடு

**பழ. நெடுமாறன்**



## மார்வாடிகளின் பணத்தோட்டம்

தமிழ்நாட்டில் இயற்கைவளம் குவிந்துகிடக்கிறது. பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது, கிராப்பைட், ஜிப்சம், காமட், சுண்ணாம்புச்சிப்பி, சுண்ணாப்புக் கல், உயர்ரகக் களிமண், மாங்கனசைட், சிலிகா மணல், பெற்றோல், இயற்கை வாயு போன்றவை ஏராளமாகக் கிடைக்கின்றன.

இந்த இயற்கைவளம் போக தமிழகத்தில் தொழில்களை நடத்துவதற்குத் தேவையான பல்வேறு வசதிகளும் உண்டு. தமிழ்நாட்டில் துறைமுக வசதிகள் நிறையவே உண்டு. சுமார் ஆயிரம் கிலோமீற்றர் மேல் நீளமுள்ள கடற்கரையில் பெரிய துறைமுகங்களான சென்னை, மற்றும் தூத்துக்குடி, நடுத்தரத் துறைமுகங்களான கடலூர், நாகை, சிறிய துறைமுகங்களான கீழக்கரை, இராமேஸ்வரம், பாம்பன், குளைச்சல், கன்னியாக் குமரி, வாலிநோக்கம் ஆகியன உண்டு.

தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் விமான நிலையங்களும் உண்டு.

தமிழ்நாட்டில் 2000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேல் தேசிய நெடுஞ்சாலைகளும், 48,955 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேல் மாநில நெடுஞ்சாலைகளும், சுமார் 1,75,000 கிலோ மீற்றர் நீளத்திற்கு மேலாக மாவட்டம், ஊராட்சி மற்றும் கிராமப்புற சாலைகளும் அமைந்துள்ளன. இவற்றில் தார்போடப் பட்ட சாலையின் நீளம் மட்டும் 108,031 கிலோ மீட்டராகும்.

தமிழ்நாட்டில் அகல இரயில் பாதை 4346 கிலோ மீட்டர் அமைந்துள்ளது. அதேபோல் மீட்டர் காஜ் பாதை 6563 கிலோமீட்டர் நீளத்திற்கு மேல் உள்ளது. தமிழ்நாட்டில் 700 இரயில் நிலையங்களுக்கு மேல் உள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தப் பரப்பில் 17% வனப்பகுதியாகும். இந்தக் காடுகளில் மூங்கில், தேக்கு, சந்தனக் கட்டைகள் போன்றவை ஏராளமாக உள்ளன. காபி, தேயிலை, ரப்பர், முந்திரி போன்ற பணப்பயிர் தோட்டங்களும் தேவைக்கு மேல் உள்ளன.

மாநிலத்தின் நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது. நெல், சோளம், கம்பு ராகி, பருத்தி வகைகள், கடலை, எள், ஆமணக்கு போன்ற பயிர்களும் பயிரிடப்படுகின்றன. பருத்தி, கரும்பு, புகையிலை, மிளகாய் போன்ற பணப் பயிர்களும் பயிரடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 64% பேர் கல்வியறிவு பெற்றவர்கள் ஆவார்கள். 15 பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் இயங்கிவருகின்றன. குறிப்பாக தொழில் கல்வியில் தமிழகம் வெகுவான முன்னேற்றம் அடைந்துள்ளது. 47 பொறியியல் கல்லூரிகளும் 124க்கு மேற்பட்ட தொழில் பள்ளிகளும், இதர தொழில் கல்வி நிலையங்கள் 547 தமிழ்நாட்டில் உள்ளன. தொழில் பல்கலைக் கழகமான அண்ணா பல்கலைக் கழகம் தனியே அமைந்துள்ளது. இவற்றிலிருந்து பல்வேறு தொழில்களில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் ஏராளமாக ஆண்டுதோறும் வெளிவந்த வண்ணம் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில்களுக்குத் தேவையான மின்சாரப் பற்றாக்குறையாக இருந்தாலும், புதிய திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் அதுவும் சில ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்டு விடும். தொழில்களுக்குத் தேவையான அமைதிகரமான சூழ்நிலையும், உழைக்கும் திறன் படைத்த மக்களும் நிறைந்த ஒரு மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. தமிழகம் தொழில்துறையில் பெற்றுள்ள வளர்ச்சிக்கு இவையெல்லாம் அடிப்படைக் காரணங்களாகும். ஆனால் இந்த வளர்ச்சி தமிழர்களுக்கு எந்த அளவுக்கு பயன் அளித்து வருகிறது என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாகும்.

மொத்தத்தில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்குரிய சாதகமான சூழ்நிலைகளையும், இயற்கையான வளத்தையும் தமிழர்களின் உழைப்புத் திறனையும் அன்னியர்களே சுரண்டி வருகிறார்கள். தமிழ்நாட்டில் தொழில் வணிகத் துறைகளில் அன்னியர்கள் ஆதிக்கமே மேலோங்கி இருக்கிறது. இதன் விளைவாக தமிழகத்தின் வளங்கள் சுரண்டப்படுகின்றன. தமிழர்களின் உழைப்பு உறிஞ்சப்படுகின்றது. எல்லா வளமும் இருந்தும் தமிழன் தன்னுடைய சொந்த மண்ணிலேயே வாழமுடியாத நிலைமையில் இலட்சக்கணக்கில் வெளியேறி அண்டை மாநிலங்களுக்குப் பிழைப்புத் தேடிச் செல்லும் பரிதாபம் தொடர்கிறது.

கர்நாடகத்தில் உள்ள கோலர் தங்கச் சுரங்கத்தில் பல்லாயிரம் அடிகளுக்குக் கிழே பாதாளத்திற்குள் சென்று தங்கத்தை வெட்டி எடுக்கும் ஆபத்தான தொழிலில் தமிழ்த் தொழிலாளிகளே ஈடுபட்டிருக்கிறார்கள். வேறு யாரும் உயிரைத் துச்சமாக மதித்து இந்தத் தொழிலுக்கு வருவதில்லை. சிக்மகளூர் காபித் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் தமிழர்களே. இந்தியாவின் பிரமாண்டமான அணைகளில் ஒன்றான துங்கபத்திரா அணையைக் கட்டிய கைகள் தமிழனின் கைகளே. பங்களூரில் உள்ள தொழிற்சாலைகளிலும், உழைத்து உற்பத்தியைப் பெருக்குபவர்கள் தமிழர்களே.

பம்பாய், ஆமதாபாத் போன்ற இந்தியாவின் தொழில் நகரங்களில் தமிழ் தொழிலாளிகள் வஞ்சம் இன்றி உழைக்கிறார்கள். இந்தியாவின் தலைநகர் புது டில்லியிலும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வீடுகளில் எடுபிடி வேலை செய்து பிழைக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் பிழைப்புக்கு வழிதேடி இலங்கை, பர்மா, மலேசியா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ், பிஜி தீவுகள் போன்ற பல்வேறு நாடுகளுக்கு இலட்சக் கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்தனர். அங்கு சென்ற பிறகும் அவர்களின் அவல வாழ்வு முடிவுக்கு வரவில்லை. தமிழ்த் தொழிலாளர்களின் உழைப்பைப் பயன்படுத்தி ரப்பர், தேயிலை தோட்டங்களை அமைத்து தங்களின் செல்வ வளத்தைப் பெருக்கிக் கொண்ட இந்த நாடுகள் அதற்குக் காரணமான தமிழர்களை விரட்டியடித்தன. கண்ணீரும் கம்பலையுமாக தமிழர்கள் அகதிகளாக தாயகம் திரும்பியதுதான் மிச்சமாகும்.

கடல் கடந்த தமிழர்கள் அகதிகளாக தாயகம் திரும்பிய கொடுமை இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கும் வேளையில் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் தமிழர்கள் அகதிகளாக விரட்டியடிக்கப்படக் கூடிய நிலைமை உருவாகிவிட்டது. 1992ம் ஆண்டு காவிரிப் பிரச்சினையை ஒட்டி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கர்நாடகத்தில் இருந்து அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டனர். மற்ற மாநிலங்களிலும் பிழைக்கப்போன தமிழர்களின் வாழ்வு கேள்விக்குறியாக இருக்கிறது. வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களும் சரி, வெளி மாநிலங்களுக்குச் சென்ற தமிழர்களும் சரி அனைவரும் சுரண்டிப் பிழைக்கப் போனவர்கள் அல்லர். தங்கள் உழைப்பினால் அந்த நாடுகளின் வளத்தைப் பெருக்கி தாங்களும் வாழ்வதற்காகவே சென்றவர்கள். அந்நாடுகளில் வட்டிக்கடை நடாத்தி அலலது தொழில் வணிக நிலையங்கள் நடாத்தி கோடி கோடியாக சம்பாதிப்பதற்குச் சென்றவர்கள் அல்லர். ஆனாலும் கூட, தமிழனின் உழைப்பை உறிஞ்சியவர்கள் அவன் அங்கெல்லாம் தொடர்ந்து வாழ்வதை விரும்பவில்லை. வாய்ப்புக் கிடைக்கும் போது விரட்டியடிக்க அவர்கள் தவறவில்லை. ஆனால், அதேவேளையில் தமிழகத்தில் மந்தை மந்தையாகக் குடியேறி தொழில் வணிகத் துறைகளைக் கைப்பற்றி கோடி கோடியாகக் கொள்ளை அடித்து தமிழ்நாட்டிலேயே குபேர வாழ்வு வாழும் மார்வாடி - குஜராத்தி சேட்டுக்களின் நிலைமைகளையும், தமிழகத்திற்கு வெளியே பஞ்சைப் பராரிகளாக வாழமுடியாமல் தவிக்கும் நமது தமிழர்களின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். சொந்த நாட்டில் வாழவேண்டிய தமிழன் அன்னிய மண்ணில் அடிமைச் சேற்றில் உழல்வதை இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது?


தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை அன்னியர்கள் சுரண்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தமிழர்களின் உழைப்பு சுரண்டப்படுவது அடியோடு நிறுத்தப்படல் வேண்டும். தமிழகத்தின் வணிகமும் தொழிலும் தமிழர்களின் கரங்களிலேயே இருக்கவேண்டும்.

பொருளாதார ஆதிக்கத்தை இழந்த தமிழர்கள் அரசியலிலும் ஆதிக்கம் இழந்தவர்களாகத்தான் வாழ்கிறார்கள். தமிழகம் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சுதந்திரமான நிலையில் வாழவேண்டுமென்று சொன்னால் தமிழகத்திற்குத் தன்னுரிமை வேண்டும். இல்லையேல் பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும் அரசியல் அடிமைத் தனத்திலிருந்தும் நாம் மீளமுடியாது. தமிழ்நாட்டில் மார்வாடி- குஜராத்தி சேட்டுக்களின் பொருளாதார ஆதிக்கத்தையும், சுரண்டலையும் அடியோடு தகர்த்து எறிவதற்கு நாம் உறுதிபூணவேண்டும். இல்லையென்றால், தமிழகம் நிரந்தரமாக மார்வாடி- குஜராத்தி சேட்டுக்களின் காலனி நாடாகத்தானிருக்கும்.

✱✱✱

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மன்னார் மாவட்டத்தில் நாட்டுக்கூத்து

நா. யோகேந்திரன்

பல்லாண்டு காலமாகவே யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, சிலாபம், மலைநாடு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் நாட்டுக்கூத்துகள் ஆடப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம், சிலாபம், மலை நாடு ஆகிய பகுதிகளில் இவை அருகிவந்த போதும் மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இவை இப்போதும் ஆடப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களும், முல்லைத்தீவு வடமோடி, தென் மோடி சாயலுடைய ஒரு தனித்துவ மான ஆட்டமுறையைக் கொண்ட முல்லைத்தீவு மரபு முறையிலான கூத்தும், மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு என இருவகைக் கூத் துக்களும் ஆடப்பட்டு வருகின்றன.

எமது மண்ணில் வழங்கி வரும் கூத்துகள் தமிழ் மக்களின் பாரம் பரிய கலை வடிவங்களில் ஒன்றாக இருந்தபோதிலும் தெய்வ வழிபாட் டின் ஒரு அம்சமுமாகவே கருதப் பட்டு வருகின்றது. பொதுவாகவே கூத்துக்கள் கோயிலில் ஆடப்படுவ தும், கோயிலில் ஒரு விழா அல்லது ஒரு நேர்த்திக் கடன் சம்பந்தப்பட்டு இருப்பதையும் அவதானிக்கலாம். மேலும் இக்கூத்துக்கள் இந்து அல்லது கிறிஸ்தவ மத சம்பந்தமான கதைப் பொருளாகக் கொண்டிருப் பதையும் அவதானிக்கலாம்.

மன்னார் மாவட்டத்தின் 'கூத்து' என்ற தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை வடிவம் மிகுந்த பக்தி சிரத் தையுடன் பேணப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

பாலம்பிட்டி போன்ற பகுதிக ளில் வாழும் இந்துசமய மக்கள் பல்லாண்டு காலமாகக் 'காத்தவரா யன்' கூத்தை ஆடி வருகின்றனர். இது இனிமையான நாட்டார் இசைப் பாடல்களால் உருவாக்கப் பட்டதுடன், இதில் ஆட்டம் இருப்பதில்லை. ஆனால் தாளம் தவறாது இசைக்கேற்ப நடக்கும் ஒரு 'துள்ளல்நடை' இதன் தனித்துவ மாகும்.

அதேவேளையில் கிறிஸ்தவ மக்களால் அந்தோனியார் நாடகம், சந்தோமையர் நாடகம், மூவிராசாக் கள் நாடகம், சந்துருசியர், செபஸ் தியார். சந்தியோகுமையார், ஞான சௌந்தரி போன்ற கூத்துக்கள் ஆடப்பெற்று வருகின்றன. இதிலும் இம்மக்கள் மத்தியில் வழங்கி வரும் விசேஷமான அம்சம் ஒவ்வொரு ஆலயங்களும், அவ்வாலயப்பங்கில் வாழும் மக்களும் தத்தமெக்கென்று ஒவ்வொரு தனியான கூத்துக்களை கொண்டிருப்பதாகும். உதாரணமாக முருங்கன் ஆலயத்தைச் சேர்ந்த வர்கள் சந்தியோகுமையர் நாடக மும், பள்ளிமுனையில் புனித நூசியர் கூத்தும், வங்காலையில் மரிகிருதல் கூத்தும் ஆடப்பட்டு வருகின்றன. இது போன்று ஒவ்வொரு கோயில்களும் தமக்கென ஒரு தனித்துவமான கூத்துக்களைப் பேணிவருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இரு வகையான கூத்துமுறைகள் நிலவி வருகின்றன. வடபாங்கு, தென் பாங்கு என இவை அழைக்கப்பட்ட போதிலும் வடபாங்கு யாழ்ப் பாணப்பாங்கு எனவும், தென்பாங்கு மாதோட்டப் பாங்கு எனவும் கருதப்பட்டு வருகின்றன. யாழ்ப் பாணப்பாங்கு வடபாங்கு என மன்னாரில் அழைக்கப்பட்ட போதிலும், இது யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகளில் நிலவி வரும் தென்மோடிக் கூத்து வகையை ஒத்திருப்பதை அவதானிக்கலாம். எனினும் யாழ்ப்பாணப் பகுதியிலி ருந்து வந்த புலவர்களே வடபாங்கு கூத்துக்களைப் பாடினார்கள் என மன்னார் மாவட்டத்தில் நம்பப் படுகின்றது. எனினும் ஞானசௌந் தரி, என்றிக் போன்ற நாடகங்கள் வடபாங்கு ஆட்ட முறையிலேயே இன்னமும் மன்னார் மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இங்கு நாடகங்களும், நாடகச் சுருக்கங்களும் இடம் பெறுவதுண்டு. நாடகம் சில இடங்களில் இரு இரவுகளும், சில இடங்களில் மூன்று இரவுகளும் நடைபெறும். வாசகப்பா என்பது ஒரு நீண்ட கூத்தை ஒரு இரவுக்கேற்ற விதத்தில் சுருக்கி நடிப்பதாகும். உதாரணமாக சந்தோமையார், மூவிராசாக்கள் நாடகம் என்பன நாடகங்களாகவும் அதே வேளையில் வாசகப்பாவாக வும் நடிக்கப்படுவதுண்டு. வாச கப்பா என்பதன் அர்த்தம் வசனம் கலந்த பாடல் என்பதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வடபாங்கு (யாழ்ப்பாணப்பாங்கு)

வடபாங்கு என்றிக்கோர், ஞானசௌந்தரி உட்படப் பல நாடகங்கள் ஆடப்பட்டு வருகின்றன. இவை சில இடங்களில் தென்பாங்கில் ஆடப்படுவதும் உண்டு.

வடபாங்கு எப்பொழுதுமே இலகுவான மெட்டுக்களையும், சுமூகமான இசையையும் கொண்ட நாடகங்களாகவே அமைந்திருக்கும்.

இக் கூத்துக்களில் வீரம், சோகம், காதல் ஆகிய உணர்ச்சிகள் விரவியிருந்தாலும் கோபம், வீரம் ஆகிய உணர்வுகள் மிகக்குறைவாகவே அமைந்திருக்கும். இவற்றின் கதையமைப்புக்களும் அவ்வாறான உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத வகையிலேயே அமைந்திருக்கும். தழுக்கு என்ற ஆடல், பாடல் முறை வடபாங்குக்கென அமைந்த தனித்துவமான முறையாகும்.

இதில் வரும் சோகம் தாழிசையிலும், காதல் இன்னிசையிலும், வீரம் கலிப்பாவிலும் அமைந்திருக்கும்.

இக் கூத்தின் கடவுள் வணக்கம் விருத்தப்பாவில் அமைந்திருக்கும். அடுத்த சபைத்தரு (ஆடற்தரு) இதில் உண்டு. மேலும் தெய்வ வணக்கத்தையும், கதைச் சுருக்கத்தையும் கூறும் தேடையம் என்ற பாவகை வடபாங்கில் மட்டுமே உண்டு. இதில் தரு சிறிது, வண்ணம் என்பவற்றால் கூறப்படும்.

இதில் வரவு, ஆடற்தரு என்பன பின்னணியிலேயே அமைந்திருக்கும். பெரும்பாலும் தருச்சொல்வது அண்ணாவியாரே செய்வார். ஆடற்தருவின் போது மத்தளம் என்ற தோற்கருவி பிரதான பாத்திரம் வகிப்பதுடன் ஆட்டத்திற்கு சுவையூட்டும் பணியையும் செய்யும். அடுத்து இடம்பெறும் சபை வணக்கத்தை பாத்திரமே தனது சொந்தக் குரலில் பாடி நடிக்கும். மேலும் பாத்திரம் பாடும் போது ஆட்டம் இடம் பெறுவதில்லை. பாத்திரத்தின் உணர்வுக்கேற்ற நடையையோ அல்லது நடிப்பையோ பாத்திரம் கைக்கொள்ளும். ஆட்டங்கள், தருக்களுக்கு மட்டுமே இடம் பெறும். வரவுக்கும் தருவுக்கும் இடையில் இடம் பெறுவதை கொச்சகம் என்று அழைப்பார்கள். இது விருத்தப்பாவடிவில் அமைந்திருக்கும். வடபாங்கில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் வரவுப்பாட்டும், அதற்கான ஆடற்தருவும் உண்டு. ஆனால் வரவும் தருவு ஒரு பாத்திரத்திற்கு ஒரு முறைதான் உண்டு. மீண்டும் பாத்திரம் வரவேண்டி ஏற்படும் போது வரவோ தருவோ இன்றியே வரும்.

## தென்பாங்கு (மாதோட்டப்பாங்கு)

தென்பாங்கில் சந்தோமையர் வாசகம், அந்தோனியர் வாசகம், செபத்தியார் கூத்து உட்படப் பல கூத்துக்கள் இம் மாவட்டத்தில் ஆடப்பட்டு வருகின்றன. புனித சந்தோமையர் நாடகம் மன்னார் மாவட்டத்தில் ஒரு பொது நாடகமாகக் கருதப்பட்டுப் பல பகுதிகளிலும் ஆடப்பட்டு வருகின்றது. ஏனைய கூத்துக்கள், ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனித்துவமான ஒவ்வொரு கூத்துக்களாக உண்டு.

இவ்வகைக் கூத்துக்களில் பாடல்கள் பெரும்பாலும் வல்லோசை கொண்டவையாக இருக்கும். இதில் கடவுள் வாழ்த்து எப்போதும் வெண்பாவிலேயே அமைந்திருக்கும்.

இதில் வரும் இன்னுமொரு விசேஷமான அம்சம் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு முறை மேடைக்கு வரும் போதும் தனித்தனி சிந்துக்களும் தருக்களும் ஆட்ட முறைகளும் உண்டு.

இதில் மேலுமொரு தனித்துவமான முறை எந்த ஒரு தென்பாங்குக் கூத்திலும் கட்டியக்காரன், மந்திரன், முரசறைவோன், கப்பித்தான் என்ற பாத்திரங்கள் இருக்கும். இவர்களுக்கென தனித்தனியான தருக்களும், ஆட்ட முறைகளும் உண்டு. ஒருவரது பாணியிலான ஆட்டம் மற்றவருக்கு இருக்காது. ஆட்டங்களிலோ அல்லது தருக்களிலோ ஆண்கள் பெண்களுக்கென வித்தியாசமான ஆட்டமுறைகள் கிடையாது. சில சமயங்களில் பெண்கள் கூட கடுமையான ஆட்டங்கள் ஆடவேண்டி ஏற்படும். (முன்பெல்லாம் ஆண்களே பெண்களின் பாத்திரங்களையும் நடித்தமையால் இம் முறை ஏற்பட்டிருக்கலாம்)

'ஏற்பதோர் நாடகம்' கீர்த்தாம் பிள்ளைப் புலவராலும் 'சந்தோமையார்' நாடகம் மரியாறுப் புலவராலும் பாடப்பட்டதாகத் தெரிய வருகின்றது. சந்தியாகுமையர் நாடகம் 1933 ல் ஒரு இரவு நாடகமாகப் பாடப்பட்டு நடிக்கப்பட்டதாகவும் பின்பு இது 1940 ல் இரண்டு இரவு நாடகமாகப் பாடப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. மரியான சந்தாம் புலவர் என்பவரால் பாடப்பட்ட இக் கூத்து முருங்கன் கோயில் பங்கைச் சேர்ந்த குழந்தை மாஸ்ரர் குழுவினரால் பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வருகின்றது. இந் நாடகம் ஓரிரவு நாடகமாயிருந்து விரிவிக்கப்பட்டமைக்கு நாடகம் துன்பியலில் முடியாமல் இருப்பதற்காகவே என இப்பகுதி மக்களால் நம்பப்படுகின்றது. ஒரு கூத்தில் மரணம், கொலை போன்றவை இடம் பெற்று, அவையே நாடகத்தின் இறுதி முடிவாக இருக்குமானால் அது ஊருக்குத் தீமை பயக்கும் என இப்பகுதி மக்கள் நம்பி வருகின்றனர். குறிப்பாகக் கூத்துக்களில் அறம் பாடுதல் பெரும் கேடுகளை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது.

## புதிய கருப்பொருளில் கூத்துக்கள்

அண்மைக்காலங்களில் கூத்துக்களில் வரும் மெட்டுக்கள், ஆட்டங்கள், கூத்துமுறைகளைப் பாவித்து நவீன கருப் பொருட்களைக் கொண்டு கூத்துக்கள் உருவாக்கப் பட்டுவருகின்றன.

காத்தான் கூத்து மெட்டில் அமைந்த வெற்றிக்களத்தில் வீர வேங்கை என்ற கூத்து பாலம் பிட்டிக் கலைஞர்களால் மேடை ஏற்றப்பட்டு பலரின் பாராட்டுதலையும் பெற்றது. இதே போன்று

குழந்தை மாஸ்ரர் குழுவினரால் வடபாங்கு முறையில் அமைந்த 'கல் சுமந்த காவலன்' என்ற கூத்து மீண்டும் மீண்டும் மேடையேறி புகழ்பெற்று வருகிறது. இதேபோல் செப மாலைப் புலவர் அவர்களால் விடுதலைப் போராட்டத்தை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட வடபாங்கு முறையில் அமைந்த கூத்தும், புலவர் கோமேதகத்தால் தயாரிக்கப்பட்ட தெருக்கூத்தும் குறிப்பிடத் தக்கவை.

மன்னார் கூத்துகளில், மட்டக்களப்புக் கூத்துக்கள் போன்று பெருமளவில் ஆட்டங்கள் இடம்பெறுவதில்லை. இங்கு குறிப்பிட்ட சில கட்டங்களில் ஆட்டம் வருவதும் ஏனைய கட்டங்களில் நடிப்பாலும், நடைகளாலும் நிரப்பப்பட்டு வருகின்றன. இன்னும் இங்கு வட்டக்களரி முறை முற்றாக அற்றுப் போனமையும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இங்கு பெரும்பாலும் கூத்துக்கள் கிறிஸ்தவ மத அடிப்படையிலேயே இடம் பெற்று வருகின்றன. கிறிஸ்தவ மதத்தின் வருகையினூடு இங்கு நவீன வசதிகளும், ஆங்கில நாடக முறைகளும் இங்கு வந்தமை வட்டக்களரி முறை அழிந்து போனமைக்குக் காரணமாய் இருக்கலாம். சீன், செற்றிங், படச்சட்ட மேடை எனப் பல நவீன வசதிகளுடன் இணைந்தே மேடையேற்றப் படுகின்றன. மேலும் பிரமாண்டமான காட்சி அமைப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற முறைகளும் பல இடங்களில் கையாளப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் கூத்துக்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படும் போது நடிகர்கள் பங்காளராகவும், ஏனையோர் பார்வையாளராயும் இருக்கும் நிலை இல்லை, ஒத்திகை ஆரம்பித்த காலத்தில் இருந்து கூத்து முடியும் வரை முழு ஊருமே பங்காளிகளாக இருப்பார். நாடகம் நடிக்கும் போதே மேடையில் ஏறி மாலை போடுதல், மோதிரம், சங்கிலி போன்ற நகைகள் அணிவித்தல் போன்றவை வழமையான சம்பிரதாயங்களாக நிலவி வருகின்றன.

நின்று நிலைத்து வரும் மன்னார் மாவட்டத்தின் பாரம்பரிய கலையான கூத்துவகைகள், காலத்தின் தேவைக்கேற்ப செழுமைப்படுத்தப் படுதலும் நவீன கருப் பொருட்களைக் கொண்டு புதிய படைப்புக்கள் உருவாக்கப்படுதலும் அவசியமாகும். மேலும் பரம்பரை பரம்பரையாக வாய் மொழியாக வழங்கப்பட்டு வரும் கூத்துக்கள் நூலுருப் பெற்று பரவற் படுத்தப்பட வேண்டும்.

www.tamilarangam.net

# செல்லும் வழி

## - இ. யதார்த்தன் -

கறுப்புச் சாயக் களிக்குள்
பூமிக்கோளம் புதைந்து கொண்டது.
நினைவினில் எல்லாம்
குளமாய்த் தேங்கின
உயிரை இழப்பதை
வியர்வை துடைப்பது போல்
இத்தனை உற்சாகமா
சாவென்பது
தலைமயிரொன்றுதிர்வதா?

முத்துச் சிமிழாய்
இத்தனை மகிழ்வு முகத்தில்...

மணவறை.... வெளிநாடு...
மேற்கல்வி..... எல்லாம்
மனவெறுப்பில் தொலைந்தன
மக்களின் உயர் வாழ்வே
நினைவில் பூத்தன.

கடிகார முட்கள்
காவிய நேரத்தைக் காட்டியாயிற்று
'சக்கை வண்டி' யில் ஏறிக்கொண்டான்
திக்குத் தெரியாத இருளில்
வண்டி கண்ணில் மறைந்தது
கைகள் அசைவது போல்
நினைவினில் தெரிந்தன.
கணவேளையின் பின்......
ஒளிப்பிளம்பு.

*எரிமலை வாசகர்களுக்கு!*

அடுத்த இதழிலிருந்து 'கேள்வி - பதில்' பகுதியை ஆரம்பிக்கவுள்ளோம். ஆகவே உங்களிடத்து எழும் கேள்விகளை எழுதி அனுப்பிவையுங்கள். தபாலுறையின் மேல் 'கேள்வி - பதில்' எனக் குறிப்பிடவும்.

- ஆசிரியர் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்